# சிங்காரச் சென்னையும் சீரழியும் வாழ்வுகளும்

## வளர்ச்சி - இடப்பெயர்வு - மறுவாழ்வு

சென்னையில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்கள், குடிசைகள் ஒழிப்பு, இடப்பெயர்வு ஆகியவற்றின் பின்னணியில் இந்திய அரசின் நிலப்பறிப்பு - மறுவாழ்வு - மறுகுடியிருப்புச் சட்டங்கள் - ஒரு விமர்சனம்

அ. மார்க்ஸ்

மரியாதைக்குரிய பெரியவர்
**கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்**
அவர்களுக்கு...





# முரண்

**95/202**
**கால்வாய்க் கரை சாலை**
**இந்திரா நகர்**
**அடையாறு**
**சென்னை - 600 020**
email: muran@live.com
+ 91 95000 75795
+ 91 94448 00828


**சிங்காரச் சென்னையும்**
**சீரழியும் வாழ்வுகளும்**
**©பேரா. அ. மார்க்ஸ்**


முதல் பதிப்பு: செப்டம்பர் 2010
பக்கங்கள்: 72

நூல் வடிவம்: ஃபாரோன் ஸ்டூடியோ
அச்சாக்கம்: நெக்ஸ்ட் ஜென் பிரஸ், சென்னை - 3
அட்டை வடிவமைப்பு: விஜயன்


**Singaara chennaiyum**
**Seerazhiyum vaazhvugalum**
**© Prof. A. Marx**


First Edition: September 2019
Pages: 72

Typeset & Book Design: Pharon Studio
Email: pharonstudio@live.com

Printed @ NextGen Press, Chennai - 3
Cover Design: Vijayan

◆ ◆ ◆

ISBN 978-81-909751-2-4
Price: ₹ 45/-

◆ ◆ ◆



All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the publisher of this book.

# பதிப்புரை

டிகோ கார்சியா - ஆப்ரிக்காவின் கிழக்குக் கரையோரத்தில் உள்ள சிறிய தீவு. ராணுவத் தளம் அமைப்பதற்காக வேண்டி இத்தீவிலிருந்த மக்கள் அமெரிக்காவின் அடாவடித்தனத்தால் அங்கிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்கள். ஜனநாயக மரபுகளுக்கு எதிராக அவர்களின் 'குடிமக்கள்' என்கிற உரிமை பறிக்கப்பட்டு, அங்கு வாழ்ந்த 1800 பழங்குடி மக்களும் 'மக்களல்லாதவர்களாக' ஆக்கப்பட்டார்கள்.

'பாதுகாப்பை' காரணம் காட்டி அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்யும் இந்தச் செயலை எதிர்க்கும் நாம், 'வளர்ச்சி'யின் பெயரால் இந்திய, தமிழக அரசுகள் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் போது கண்டுகொள்வதில்லை.

ஊடகங்கள் பொதுப்புத்தியில் படிய வைத்திருக்கும் 'அசுத்தமானவர்கள்' எனும் கருத்துத் திணிப்பால் குடிசைவாசிகளும் பிச்சைக்காரர்களும் இங்கு 'மக்களல்லாதவர்களாக' ஆக்கப்படும் போது பெரிய அதிர்வுகள் ஏதும் ஏற்படுவது கிடையாது.

அந்நிய முதலீட்டுக் குவிப்பிற்காக தேசக் கட்டமைப்புகளை மறு நிர்மாணம் செய்யும் நோக்கில், இடைஞ்சல்களாக உள்ள குடிசைவாசிகளை அப்புறப்படுத்தும் போது கவலை கொள்ளாததுடன், அவர்களின் நல்வாழ்வுக்காக அரசு முயற்சி செய்வதாக வேறு நாம் தவறாகப் புரிந்து கொள்கிறோம்.

லாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட உலக முதலாளியமும் அதற்கு துணை போகும் தேச அரசுகளும் விளிம்பு நிலை மக்கள் மீது கரிசனம் கொள்ளும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

வளர்ச்சித் திட்டங்களுக்காக தாங்கள் குடியிருந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள், திரும்பவும் அங்கு வந்து, ''வாழ்ந்த இடத்தை பார்த்துவிட்டுப் போகலாம்னு வந்தோம்'' எனக் கூறுவதை நூலினுள் நீங்கள் படிக்கும் போது - *''இல்லம் என்பது நினைவுகளின் இடம்தான்'' என்ற மஹ்மூத் தர்வீஷின் கவிதை வரிகள்தான் நினைவுக்கு வருகிறது* - குடிசைவாசிகள் குறித்த உங்களின் கருத்தை நிச்சயம் மாற்றிக் கொள்வீர்கள்.

இரண்டு உண்மையறியும் குழு அறிக்கைகளின் பின்னணியில் சென்னையில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்களையும் இந்திய அரசின் நிலப்பறிப்பு - மறுவாழ்வு - மறுகுடியமர்த்தல் தொடர்பான சட்டங்களையும் நுண்மையாக ஆய்வு செய்து இந்நூலை எழுதியிருக்கிறார் பேரா. அ. மார்க்ஸ். அவர்களுக்கு எங்களது நன்றி. மேலும் தட்டச்சு செய்த, முகப்பு அட்டை வடிவமைத்து தந்த மற்றும் இந்நூல் உருவாக்கத்தில் துணை நின்ற அனைத்து தோழமைகளுக்கும் நன்றி.

உடன்படுபவர்கள் மட்டுமின்றி முரண்படுபவர்களும் 'முரணோடு' தொடர்பு கொண்டால், அது அமைதிக்கான முயற்சிகளுக்கு அடித்தளமாக அமையும் என்ற நம்பிக்கையுடன்...

**இயக்கன்**
**புகழன்**

ஆகஸ்ட் 15, 2010

முரண் பதிப்பகம்

# பொருளடக்கம்


**முன்னுரை**

*வளர்ச்சியும் மனித உரிமைகளும்: வறுமையே ஒரு குற்றமாய்... / 7*

**அத்தியாயங்கள்**

*1. ஏழைகளின் அழுகையில் வளர்ச்சியைக் காண்போம் / 17*

*2. நிலப்பறிப்பு - மறுவாழ்வு - மறுகுடியிருப்புச் சட்டங்கள்: ஒரு பார்வை / 24*

*3. இடப்பெயர்வு - மறுவாழ்வு - மறு குடியமர்த்தல்: என்ன செய்ய வேண்டும்? /31*

**இணைப்புகள்**

*1. சென்னை குடிசைப் பகுதிகளில் தீ விபத்து மற்றும் இடம்பெயர்த்து குடியமர்த்தப்பட்டவர்களின் வாழ்நிலை: உண்மை அறியும் குழு அறிக்கை / 34*

*2. சென்னையை பிச்சைக்காரர்கள் இல்லாத நகரமாக்கும் முயற்சி: உண்மை அறியும் குழு அறிக்கை / 60*


# முன்னுரை

## வளர்ச்சியும் மனித உரிமைகளும்: வறுமையே ஒரு குற்றமாய்...

ஒரு பக்கம் பொருளாதார வளர்ச்சி, தடையற்ற வணிகம், அன்னிய முதலீடு ஆகியவற்றையும் இன்னொரு பக்கம் தேசப் பாதுகாப்பையும் முதன்மைப்படுத்தி உலகளாவிய மனித உரிமை தொடர்பான பிரகடனங்கள் வழங்கியுள்ள மனித உரிமைகளையும், நமது அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளையும் பின்னுக்குத் தள்ளும் போக்கு இன்று நாம் எதிர் கொண்டுள்ள மிகப் பெரிய சவால். இந்தியா முழுவதும் இன்று பழங்குடியினரும், விவசாயிகளும், தமது நிலம் மற்றும் மரபுவழி உரிமைகளுக்காக போராடிக் கொண்டுள்ளனர். அன்னிய முதலீட்டிற்குரிய வகையில் அகக்கட்டுமானங்களை வளர்த்தெடுப்பது என்கிற பெயரில் நாடு முழுமையும் நால்வழிச் சாலைகளால் இணைக்கப்படுகின்றன. ஷாப்பிங் மால்கள், மல்ட்டி ப்ளெக்ஸ்கள், உல்லாச மருத்துவ மனைகள், அதிவேகச் சாலைகள், மெட்ரோ ரயில்கள் என்பதாக நகரங்கள் பளபளப்புப் பெறுகின்றன. வணிக மற்றும் முதலீட்டு முக்கியத்துவம் வாய்ந்த ‘மெட்ரோ சிட்டி’களுக்கு இடையூறாகவும் களங்கமாகவும் உள்ள குடிசை மக்களும், வீடற்ற அனாதைகளும் இன்று வெளியேற்றப்படுகின்றனர். காமன் வெல்த் விளையாட்டுப் போட்டியைச் சொல்லி டெல்லியிலும், நவிமும்பை, சிங்காரச் சென்னை முதலான பெயர்களில் மும்பை, சென்னை முதலான பெரு நகரங்களிலும் இன்று இவை அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன.

செய்தித் தாள்களில் இவை குறித்த செய்திகள் நாள்தோறும் வந்த வண்ணமுள்ளன. சேத்துப்பட்டு மற்றும் அருகிலுள்ள பகுதிகளைச் சேர்ந்த 300 குழந்தைகள் தமது குடிசைகள் இடிக்கப்பட்டு தாம் கட்டாயமாக வெளியெற்றப்பட்டதன் விளைவாகத் தம் கல்வி பாழாவதைத் தடுக்குமாறு ‘ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக்

காணும் கருணாநிதித் தாத்தா'வுக்கு கடிதம் எழுதியுள்ள செய்தி ஒரு நாள் ஒரு நாளிதழில் வருகிறது. சென்னைத் துறைமுகத்திலிருந்து கூவம் ஆற்றங்கரையை ஒட்டி மதுரவாயல் வரை அமைக்கப்பட்டு வருகிற அதிவேக உயரச் சாலைக்கு 'இடையூறாக' இருந்த குழந்தைகள் இவர்கள். கட்டாயமாக அப்புறப்படுத்துப்படுகிறவர்கள் சுமார் 30 கி.மீட்டருக்கு அப்பால் நகர விளிம்பில் கொண்டு சென்று, எவ்விதக் குறைந்தபட்ச வசதிகளுமற்ற இடங்களில் வீசி எறிவது குறித்த செய்திகளை உள்ளே காணலாம். இப்படியான குடியிருப்பு வாய்ப்புகளும் கூட எல்லோருக்கும் கிட்டுவதில்லை.

இன்னொரு நாள் ஸ்பர்டாங் மற்றும் எத்திராஜ் சாலையில் புல்டோசர் வைத்து வெளியேற்றப்பட்ட 434 குடும்பங்களில் 275 குடும்பங்களுக்கு மட்டுமே துரைப்பாக்கத்தில் குடியிருப்பு அளிக்கப்பட்டுள்ளதை ஒரு இதழ் பதிவு செய்கிறது. மீதியுள்ள 159 குடும்பங்களுக்கு இந்த வாய்ப்பும் அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதிகாரிகளிடம் லஞ்சம் கொடுத்தும் பயனில்லையாம். ஜூன் 2006 என்கிற எல்லை வகுத்து, அதற்குப் பின் வந்தவர்கள் எனக் காரணம்காட்டி இவர்களுக்கும் குடியிருப்பு மறுக்கப்பட்டுள்ளது. குடும்பஅட்டை, வாக்காளர் அட்டை முதலியவற்றை வைத்திருந்தும் இவர்களுக்கு இக்கதி. எந்த அடிப்படையில் ஜூன் 2006 என்கிற எல்லை வகுக்கப்பட்டது என்பது விளங்கவில்லை. தொடர்ந்து இது நிகழ்ந்து வருகிறது. சென்ற வாரத்தில் கூட (ஜூலை 2010) நுங்கம் பாக்கத்தில் குடிசைகள் அகற்றப்பட்டுள்ளன. வெகு சில சந்தர்ப்பங்களில் வெளியேற்றப் படக்கூடிய மக்களைக் கூட்டி தமது திட்டத்தை விளக்கி அதற்கு அம்மக்களின் எதிர்வினை எவ்வாறு அமையும் என்பது குறித்து அறிய முயலும் முயற்சியையும் அதிகாரிகள் மேற்கொள்கின்றனர். சென்ற ஜூன் 3 அன்று 'அடையாறு பூங்கா ட்ரஸ்ட்' சார்பாக நடத்தப்பட்ட இத்தகைய ஆலோசனைக் கூட்டம் பற்றிய குறிப்பொன்றை இணைப்பு அறிக்கையில் காணலாம். திரு.வி.க. பாலம் தொடங்கி ராமாவரம் வரை அடையாறு ஆற்றங்கரை மீது அமைக்கப்படவுள்ள உயர் சாலைத் திட்டத்தின் கீழ் வெளியேற்றப்படவுள்ள மக்கள் இவர்கள். சிங்காரச் சென்னை குறித்து அதிகாரிகள் உரை நிகழ்த்தியதையும் மக்கள் கண்ணீருடன் கெஞ்சியதையும் 'டைம்ஸ் ஆப் இந்தியா' இதழ் பதிவு செய்திருந்தது (ஜூன் 4, 2009).

''அகன்ற பொது நலன்களுக்காக (larger public interest) ஒரு சிலர் தியாகம் செய்துதான் ஆக வேண்டும்'' என்பது குடிசைகளைப் புல்டோசர்



வைத்து இடிப்பவர்களின் வாதம். தியாகம் என்கிற சொல் எப்படியெல்லாம் பயன்படுத்தப்படுகிறது பாருங்கள். மேலே உள்ளவர்களின் மகிழ்ச்சிக்காகவும் சொகுசுக்காகவும் கீழே உள்ளவர்கள் வலியையும் துயரையும் அனுபவிப்பதற்குப் பெயர் தியாகமாம். சென்னை மாநகராட்சி பிச்சைக்காரர்களை அகற்றும் திட்டத்தைச் செயற்படுத்திவருவது குறித்து பேசுவதற்காக நேற்று கார்ப்பரேஷன் உதவி ஆணையரான ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைச் சந்தித்தோம். ''பத்து நல்ல காரியங்கள் செய்யும்போது ஒரு தவறு நடக்கத்தான் செய்யும். ஆனால் வரலாறு அந்த நல்ல காரியத்தை மட்டும்தான் பதிவு செய்யும்'' என்று மிதப்பாகப் பதில் சொன்னார் அவர்.

மத்திய தர வர்க்க மனநிலை இத்தகைய வாதங்களை ஏற்றுக் கொள்வதுதான் புல்டோசர் வைத்து இடிப்பவர்களின் பலம். நகரத்தின் தூய்மையைக் கெடுப்பவர்கள், தொற்று நோயைப் பரப்புபவர்கள் என்று குடிசை வாழ் மக்கள் மற்றும் வீடற்றவர்கள் குறித்துப் பிம்பங்கள் கட்டமைக்கப்படுகின்றன. ''குடிசை வாழ் மக்கள் அசுத்தமான இடங்களையே வாழ்வதற்குத் தேர்வு செய்கின்றனர்'' எனத் தனது இணையதளத்தில் ENVIS என்கிற சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்பு குறிப்பிடுகிறது. ஏதோ அவர்கள் ரொம்பவும் ஆசையோடு கூவம் நதிக்கரையை வாழ்விடமாகத் தேர்வு செய்கிறார்கள் என்பது போல கருத்தைக் கட்டமைக்கிறது. சில நேரங்களில் நீதி மன்றங்களும் கூட இத்தகைய அமைப்புகள் தொடங்கும் பொது நலவழக்குகளில் இந்த வாதங்களை ஏற்றுக் கொள்வது வேதனை. டெல்லி மாநகரினூடாக பாயும் யமுனை நதியின் தூய்மையைக் கரையோரக் குடிசைவாசிகள் மாசுபடுத்துகின்றனர் என்கிற வாதத்தை ஏற்று குடிசைகளைக் காலி செய்ய உத்தரவிட்டது டெல்லி உயர் நீதிமன்றம் (மார்ச் 3, 2003). 'மாசுத் தீங்கு ஆய்வு மையம்' (Hazard Centre) என்கிற அமைப்பு வெளியிட்டுள்ள யமுனை நதி மாசுபடல் குறித்த முக்கிய தரவு ஒன்றை நீதிமன்றம் கவனிக்கத் தவறியதை குடிசைவாழ் மக்களின் நலனில் அக்கறையுள்ளோர் சுட்டிக் காட்டினர். அதன்படி யமுனைக் கரையில் வாழ்கிற 3 லட்சம் குடிசைவாசிகளால் அந்நதியில் சேரும் மாசு வெறும் 0.33 சதம் மட்டுமே. மீதமுள்ள 99.67 சத மாசும் பிற மக்களாலும் தொழிற்சாலைகளாலும் ஏற்படுத்தப் படுபவையே.

குடிசைகளை அகற்ற அரசு சொல்லும் இன்னொரு காரணம் அதன் மூலம் கிடைக்கும் பொருளாதாரப் பயன். நகரின் முக்கிய பகுதியிலுள்ள குடிசைகளை அகற்றுவதனால் விலை மதிப்புள்ள

நிலம் அரசுக்குக் கிடைக்கிறது. தவிரவும் அவ்விடங்களில் உருவாக்கப்படுகிற வளர்ச்சித் திட்டங்களால் அரசுக்கும் தொடர்ந்து வருமானம் வருகிறது. இதையும் கூட நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்கின்றன. இடம் பெயர்க்கப்பட்ட மக்களின் பொருளாதார மற்றும் சமூக இழப்புகளை எந்தக் கணக்கில் சேர்ப்பது? அமைப்பு சாராத் துறைகளின் ஊடாகத் தமது உழைப்பை நல்கும் இம்மக்களின் பொருளாதாரப் பங்களிப்பு இந்த கணக்கில் சேராதா? தவிரவும் இந்தக் கணக்கீடுகளில் இம்மக்களின் மறுகுடியமர்த்தல் செலவு மிகக் குறைவாகவே காட்டப்படும். தொலைதூரத்திற்கு இட்டுச் சென்று எந்த அடிப்படை வசதிகளுமில்லாத இடங்களில் 'குடியமர்த்த' ஆகிற செலவு மட்டுமே காட்டப்படும். துறைமுகம் - மதுரவாயல் உயர்வேக நெடுஞ்சாலைத் திட்டத்திற்கான மொத்த செலவு 1500 கோடி. இதில் இடம் பெயர்க்கப்படுகிற 30,000 குடும்பங்களை மறு குடியமர்த்தும் செலவு வெறும் 345கோடி மட்டுமே. நமது ஆட்சியாளர்களின் பார்வையில் இடம் பெயர்க்கப்படுகிற மக்களின் துயருக்கு இடமில்லை. அவர்களைப் பொருத்தமட்டில் இவை எல்லாம் ஒரு பெரும் பொறியியல் சாதனை மட்டுமே. ஐதராபாத்தைச் சேர்ந்த சொர்ணா என்டர்பிரைசஸ் என்கிற நிறுவனம் மேற்கொண்டுள்ள இந்த உயர்வேக நெடுஞ்சாலைப் பணியைத் தொடங்கி வைத்த மன்மோகன் சிங், ''இதன் மூலம் போக்குவரத்துத் துறை மாற்றம் பெறும். தொழில்துறையில் ஒரு திருப்பம் ஏற்படும். பொருளாதாரத்தை இது ஒருங்கிணைக்கும்'' என்று கூறியதோடு (ஜனவரி 2009) நிறுத்திக் கொண்டது நிறைவுகூரத் தக்கது. இதனூடாக இடம் பெயர்க்கப்படும் 30 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சம் குடிமக்களின் வாழ்வு சீரழிவது குறித்து அவருக்கு மயிரளவும் கவலையில்லை. நர்மதை அணைப் போராட்டத்திற்குப் பின் இடப் பெயர்வு தொடர்பாக உலகளவில் சில முடிவுகள் ஏற்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று அணையால் குடியிருப்புகள் முழ்கடிக்கப்படு வதற்கு முன்னதாகவே மறு குடியமர்த்தலும், புதுவாழ்வு உருவாதலும் முடிந்திருக்க வேண்டும் என்பது. ஆனால் இந்த உயர்வேக நெடுஞ்சாலைத் தொடக்க விழா நடந்து ஓராண்டுக்குப் பின்பு இன்று மக்கள் கதறக் கதற வெளியேற்றப்படுகின்றனர்.

உடனடி வளர்ச்சித் திட்டங்கள் தவிர சில தனியார் நிறுவனங்களுக்காகவும் குடிசை ஒழிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கெல்லாம் தோதாக '1971ம் ஆண்டு தமிழ்நாடு நகரத் திட்டமிடல் சட்டத்தை'த் திருத்த ஓய்வு பெற்ற



உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. டெல்லியில் பெரிய கார்ப்பரேட் நிறுவனங்கள் மற்றும் நட்சத்திர ஓட்டல்கள், மெட்ரோ ரயில் நிலையங்கள் ஆகியவற்றிற்கு அருகாமையிலிருந்த குடிசைப் பகுதிகளெல்லாம்கூட சூழலுக்குப் பொருத்தமாக இல்லை என ஒழிக்கப்பட்டன. 1980களின் பிற்பகுதியில் சென்னை கிரீம்ஸ் சாலையில் அப்போலோ மருத்துவமனை கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. மருத்துவமனை என்கிற காரணத்தைக் காட்டி நகர்ப்புற உச்சவரம்புச் சட்டத்தைத் தளர்த்தி இந்த அனுமதியை அப்போலோ ரெட்டிக்கு வழங்கினார் எம்.ஜி.ஆர். 'கார் பார்க்கிங்'கிற்காக கிரீம்ஸ் லேனில் இருந்த வாலஸ் கார்டன் குடிசைகள் அழிக்கப்பட்டன. அருகிலுள்ள வேறொரு இடத்தில் மருத்துவமனையைக் கட்டிய அப்போலோ நிறுவனம் மருத்துவமனைக்கென்று விதிமீறி அனுமதிக்கப்பட்ட இடத்தில் சிந்தூர் ஓட்டலைக் கட்டியது. ஒப்பந்தப்படி மருத்துவமனைப் படுக்கைகளில் மொத்த எண்ணிக்கையில் 15 சதத்திற்கு இலவச மருத்துவம் அளிப்பது என்கிற ஒப்பந்தத்தையும் அது ஒழுங்காக நிறைவேற்றுவதில்லை.

குடிசைகளை ஒழிப்பது ஏதோ குடிசைவாசிகளுக்குச் செய்கிற நன்மை என்பது போன்ற மாயையையும் அரசு ஏற்படுத்திவருகிறது. 11ம் ஐந்தாண்டு திட்டத்தில் 2012க்குள் இந்தியா முழுமையிலுமுள்ள குடிசைகளை ஒழித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க 3,60,000 கோடி வேண்டும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது ஒரு மிகச் சிறிய தொகை என்பது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் இந்தத் தொகையையும் கூட அரசு முழுமையாக ஒதுக்கிச் செயற்படுத்த முயல்வதில்லை. சென்ற ஆண்டு இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி வெறும் 3903 கோடி ரூபாய் மட்டுமே. சிறப்புப் பொருளதாதார மண்டலங்களுக்காக அடுத்த ஐந்து ஆண்டுகளில் 20,000 ஏக்கர் நிலத்தைக் கைப்பற்றி ஒரு 'நிலவங்கி'யை ஏற்படுத்தத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. அதேபோல சென்னை நகரில் குடிசை மாற்றிற்கென நிலங்களைக் கைப்பற்றி நிலவங்கி ஏற்படுத்தும் திட்டம் ஏதும் சிங்காரச் சென்னைக்காரர்களிடம் இல்லை. மாறாகப் புல்டோசர்களைக் கொண்டு குடிசைகள் முன் நிறுத்துகிறார்கள். குடிசைகள் ஆங்காங்கு தீப்பற்றி எறிகின்றன. மக்கள் எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற தொலை தூரங்களில் லாரிகளில் ஏற்றிச் சென்று எறியப்படுகின்றனர்.

இந்நூல் இரு பகுதிகளாக அமைந்துள்ளது. சென்னை நகரில் தற்போது மேற்கொள்ளப்படுகிற வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் அதன் விளைவாக இடம் பெயர்க்கப்படுகிற மக்களின் நிலை ஆகியவை இந்நூலின் ஆய்வுப் பொருள்களில் ஒன்று. இது இடம் பெயர்க்கப்படும் குடிசைவாழ் மக்களின் பிரச்சினைகளைப் பேசுகிறது. மற்றது இன்று அரசு முன்மொழிந்துள்ள நிலப்பறிப்பு மற்றும் மறுவாழ்வு அளித்தல் தொடர்பான கொள்கை மற்றும் சட்ட முன் வரைவு ஆகியவற்றின் ஆபத்தான அம்சங்களை ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறது.

நமது சட்டங்கள் அவை நிலப்பறிப்பு குறித்தவையாக இருக்கட்டும் அல்லது பிச்சைத் தொழில் தடுப்புச் சட்டமாகட்டும் பொதுவாக இவை எல்லாமே காலனிய அரசுகளால் 18,19 மற்றும் 20ம் நூற்றாண்டின் முற்பாதியில் உருவாக்கப்பட்டவை. அதன் பின் உலகில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒரு பக்கம் 1947ல் இங்கே ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. இன்னொரு பக்கம் 1948 தொடங்கி குடிமக்களின் மனித உரிமைகள் மற்றும் சிவில்,கலாச்சார உரிமைகள் குறித்தெல்லாம் உலகளாவிய பிரகடனங்கள் பல உருவாகியுள்ளன. 1950ல் உருவாக்கப்பட்ட நமது அரசியல் சட்டம் உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்தின் உருவாக்கத்தின் பின் எழுதப்பட்ட ஒன்று என்பதால், பல்வேறு குறைபாடுகள் இருந்தபோதும் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் ஓரளவு தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. எனினும் இந்த அரசியல் சட்டத்தின் தொனிக்கு இசைய குடிமக்களின் உரிமைகள் தொடர்பான இதர சட்டங்கள், நிறுவன அமைப்புகள் முதலியன திருத்தி அமைக்கப்படவே இல்லை. மேற்கொள்ளப்பட்ட ஓரிரு திருத்தங்களும் பழைய காலனிய அணுகல் முறையை விட்டு விலகியதாக இல்லை. இதன் விளைவாகவும், தொடர்ந்து பொருளாதார மற்றும் அரசியல் ரீதியில் உலக முதலாளியத்தின் கட்டுப்பாட்டிற்குள் தொடர்ந்து தன்னைத் தக்க வைத்துக் கொண்டதாலும் இந்திய அரசையே ஒரு அரைக் காலனிய அரசு என வகைப்படுத்து வதற்கும் ஏதுவானது. இந்த வகைப்பாட்டை அப்படியே ஏற்றுக் கொள்ளாதவர்களும் கூட பல்வேறு அம்சங்களில் இங்கே காலனிய நீக்கம் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்வர்.



மன்மோகன் சிங் தலைமையில் இன்று இந்தியா முழுக்க முழுக்க ஒரு நவதாராளவாதப் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளதை விரிவாக விளக்க வேண்டியதில்லை. கார்ப்பரேட்கள் வலுப்பெறுவதும், குடிமக்கள் பலவீனப்படுவதும், அரசு தனது சமூக நலச் செயற்பாடுகளிலிருந்து விலகிக் கொள்வதும், தேசியப் பாதுகாப்பு என்கிற பெயரில் அடிப்படை மனித உரிமைகளைக் குறுக்கிக் கொண்டே செல்வதும் இதன் பிரதான அம்சங்களாக உள்ளன. பெரும் பசி எடுத்து திரியும் உலக முதலாளியத்திற்கு இன்று ஏராளமாக நிலம், நீர், கனிமங்கள், மலிவான உழைப்பு எல்லாம் தேவைப்படுகிறது. புதிய சூழலுக்குத்தக இருக்கிற சட்டங்களை நவீனப்படுத்துவது இதற்கு அவசியமாகிறது. ஒரு பக்கம் கல்வி, உணவு இவற்றை எல்லாம் அடிப்படை உரிமைகள் என்பதாகப் பசப்பிக் கொண்டே இந்த ‘உரிமைகள்’ எந்த விதத்திலும் கார்ப்பரேட் உரிமைகளைப் பாதிக்காத வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளதை வேறு சந்தர்ப்பங்களில் விரிவாகப் பேசியுள்ளோம் (பார்க்க: கல்வி, உணவு உரிமைச் சட்டங்கள், புலம் வெளியீடு, 2010). இந்த வரிசையிலேயே இன்று இந்திய அரசு உருவாக்கியுள்ள புதிய நிலப்பறிப்பு மற்றும் மறுவாழ்வுக் கொள்கை மற்றும் சட்ட முன் வரைவுகளைப் பார்க்க வேண்டும். Eminent Domain என்கிற பெயரில் ‘பொது நோக்கங்களுக்காக’ குடிமக்களின் நிலத்தைப் பறிக்கும் அதிகாரத்தை அரசு விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. எனவேதான் இடப்பெயர்வையே கேள்விக்குள்ளாக்கும் உரிமையை மக்களுக்கு வழங்க அரசு தயாராக இல்லை. இழப்பீடுகள் வழங்குவதிலும் கூட இறுதியில் கார்ப்பரேட் கைகளே ஓங்கி நிற்கும் நிலையிலேயே இச்சட்ட முன் வரைவு மற்றும் கொள்கை இயற்றப்பட்டுள்ளது குறித்து விரிவாக உள்ளே பேசப்பட்டுள்ளது.

சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான சட்ட வரைவு நா டாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட போது அதிகம் விவாதிக்கப்படாமலேயே அது நிறைவேற்றப்பட்டது. அதில் சில விமர்சனங்களை இடதுசாரிகள் பின்னாளில் வைத்தபோதும் சட்டம் நிறைவேற்றப்படும்போது அதைக் கண்டு கொள்ளவில்லை. தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிப்பது போலப் பின்னால்தான் முணுமுணுத்தார்கள். நிலப்பறிப்பு திருத்தச் சட்ட விஷயத்தில் அப்படி இருந்துவிடக் கூடாது என எச்சரிப்பதே இந்நூலின் நோக்கம். இதை இடதுசாரிகள் மற்றும் அடித்தள மக்களின் நலன்களைப் பிரதிபலிப்பதாகச் சொல்லக்கூடிய கட்சிகள் கவனம் கொள்ள

வேண்டும். *1947க்குப் பிந்திய இந்தியாவில் நிலப்பறிப்புகளால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் தலித்கள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர்தான் என்பது குறித்த விவரங்களை உள்ளே காண்க.*

இந்நூலின் பின்னிணைப்புகளாக நான் பங்கு பெற்ற இரு உண்மை அறியும் குழு அறிக்கைகள் முழுமையாகத் தரப்பட்டுள்ளன. இந்நூல் முன்வைக்கும் கருத்தாக்கங்கள் குறித்த ஒரு நுண் ஆய்வுகளாக (Case Studies) இவை அமைகின்றன. சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ள பிச்சைக்காரர் நீக்கத் திட்டச் செயற்பாடு குறித்த அறிக்கை இன்று தேசிய மனித உரிமை ஆணையத்தால் கவனத்தில் கொள்ளப்பட்டு (suomoto cognizance) தமிழக அரசிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

காலனிய ஆட்சியில் உருவாக்கப்பட்ட ‘தமிழ்நாடு பிச்சை எடுப்புத் தடுப்புச் சட்டம், 1945’ பிச்சை எடுத்தலை ஒரு குற்றமாக வரையறுக்கிறது. ஏழ்மையும் சமூக மற்றும் குடும்பப் புறக்கணிப்புகளுமே ஒருவரைப் பிச்சை எடுத்து வாழ நிர்ப்பந்திக்கிறது என்பதை இச்சட்டம் ஏற்றுக் கொள்வதில்லை. மாறாக பல்வேறு சாத்தியங்களில் ஒன்றாக பிச்சை எடுப்பதை அவர் ‘தேர்வு’ செய்து கொள்வதாகவே அணுகுகிறது. பிச்சை எடுப்பவர்களையும் அவர்களைச் சார்ந்து இருப்பவர்களையும் பணிமனைகள் மற்றும் காப்பகங்களில் தடுத்து வைப்பது, காவலில் வைத்து வழக்கு நடத்தித் தண்டனை அளிப்பது ஆகிய உரிமைகளை அரசுக்கு அளிக்கிறது.

பொது இடங்களில் பிச்சை கேட்பது; பாடுவது, ஆடுவது, ஏதேனும் பொருட்களை விற்பது முதலான வடிவங்களில் பிச்சை எடுப்பது; பிச்சை கேட்டு வீடுகளில் நுழைவது; தனது அல்லது பிறரது காயம், நோய் அல்லது உடல் ஊனத்தைக் காட்டி தருமம் கேட்பது; மிருங்களைக் காட்டிப் பிச்சை கேட்பது; இப்படியான வடிவங்களில் இன்னொருவர் பிச்சை எடுப்பதற்குத் தன்னை ஆட்படுத்திக் கொள்வது ஆகியவற்றைப் ‘பிச்சை எடுத்தல்’ என இச்சட்டத்தின் 2ம் பிரிவு வரையறுப்பது குறிப்பிடத்தக்கது.

இப்படியான ‘குற்றத்திற்காக’ ஒருவர் முதல் முறை தண்டிக்கப்படும்போது அதிகபட்சம் 50 ரூபாய் மற்றும் ஒரு மாதம் சிறையிலடைக்கப்படலாம். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட முறைகள் தண்டிக்கப்படும்போது ஆறுமாதம் வரை அவர் சிறையில் வைக்கப்படலாம். பிச்சைக்காரர் யாரையும் ஒரு காவல்துறை அதிகாரி வாரன்ட் இல்லாமலேயே கைது செய்யவும் இச்சட்டம் வழிவகுக்கிறது. பணிமனைகள் அல்லது ஊனமுற்றவர்களாயின் சிறப்புக் காப்பகங்கள் ஆகியவற்றில் ஓராண்டு முதல் மூன்றாண்டுகள் வரை சிறை வைக்க ஒரு மேஜிஸ்ட்ரேட் உத்தரவிடுவதற்கும் இச்சட்டம் இடமளிக்கிறது. மீண்டும் அக்குற்றத்தைச் செய்வார்களாயின் பத்தாண்டுகள் வரை இச்சட்டத்தின்படி ஒருவரைச் சிறையிலடைக்க முடியும். தொழுநோய் உள்ளவர்களாயின் காலவரையின்றி ஒருவரைக் காப்பகத்தில் அடைத்து வைக்கலாம்.

ஆக வறுமையும், நோயும் குற்றமாக்கப்படும் கொடுமை காலனிய ஆட்சியில் மட்டுமின்றி இன்றும் தொடர்கிறது. வறுமையற்ற வாழ்வை உறுதியளிக்க வேண்டிய அரசு மாறாக வறுமையைக் குற்றமாக்குகிறது. உலகத்தரமான மாநகரங்களை உருவாக்க முனையும் இன்றைய ஆட்சியாளர்களும் அதிகாரி களும் இதே மன நிலையுடன் இருப்பதை எங்களது உண்மை அறியும் பணியினூடாக நாங்கள் அறிந்தபோது நெஞ்சு கனத்தது. பிள்ளைகளைத் திருடிக் கொண்டுவந்து மயக்க மருந்து ஊட்டிப் பிச்சை எடுப்பதாகவும், தமது ஆட்சிக் காலத்தில் அதை ஒழித் துள்ளதாகவும் வணக்கத்துக்குரிய மேயர் மா. சுப்பிரமணியம் திரும்பத் திரும்பக் கூறினார். நாங்கள் இதைத் தொடர்ந்து செய்வோம். உங்களைப் போன்றவர்கள் எதிர்ப்புக் காட்டினாலும் தொடர்ந்து செய்வோம் என்றார் மாநகராட்சி துணை ஆணையர் ஜோதி நிர்மலா ஐ.ஏ.எஸ். அவர்கள்.

சென்னையில் குடிசை மக்கள் வெளியேற்றப்படுதலின் மீது கவனம் ஈர்த்து ஒரு உண்மை அறியும் குழுவையும் உருவாக்கிய ‘தண்டோரா’ மற்றும் குடிசை மக்கள் வாழ்வுரிமை இயக்கத் தோழர்கள் குறிப்பாக இசையரசு, வெங்கட், ஜெனிடாலி, சதீஷ் மற்றும் எமது உண்மை அறியும் குழுக்கள் இரண்டிலும் பங்கு பெற்ற மனித உரிமை ஆர்வலர்கள் இதிலுள்ள கட்டுரைகளை வெளியிட்ட ‘மக்கள் களம்’ இதழாசிரியர் அருட்பணியாளர் ஏசுமரியான், இந்நூலை வெளியிடுகிற முரண் பதிப்பத் தோழர்கள் எல்லோருக்கும் என் நன்றிகள்.

*ஜூலை 15, 2010*
*சென்னை - 20*

அ. மார்க்ஸ்

# அத்தியாயம் 1

## ஏழைகளின் அழுகையில் வளர்ச்சியைக் காண்போம்

'ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்கிற முழக்கத்துடன் 1970 டிசம்பரில் நொச்சிக்குப்பத்தில் உருவாக்கப்பட்ட 1000 குடியிருப்புகளுடன் குடிசை மாற்று வாரியத்தை தி.மு.க. அரசு தொடக்கி வைத்தது. ஏழாண்டுகளில் சென்னை நகரிலுள்ள குடிசைகளை எல்லாம் ஒழித்துக் கட்டப் போவதாகவும் அன்று கருணாநிதி முழங்கினார்.

இதற்கென 40 கோடி ரூபாய் நிதியையும் ஒதுக்கினார். 1971 ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி அன்று சென்னையிலிருந்த குடிசை வாழ் மக்களின் எண்ணிக்கை 7.37 லட்சம். இன்று 2001 ம் ஆண்டுக் கணக்கின்படி இவர்களின் எண்ணிக்கை 10.79 லட்சம். சென்னை மக்கள் தொகையில் இவர்கள் 26 சதம். இது கூடச் சற்றுக் குறைவான கணக்குத்தான். நடைபாதைகளில் குடியிருக்கும் பலர் இதில் விடுபட்டிருக்கலாம். குடிசை வாழ் மக்களின் பங்கு 28 முதல் 30 சதம் வரை இருக்கக் கூடும்.

'தமிழ்நாடு இரண்டாம் நகர வளர்ச்சித்திட்டத்தின்' சார்பில் சென்ற 2005 ல் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின்படி இன்று சென்னையில் 1431 குடிசைப் பகுதிகள் உள்ளன. இவற்றில் 242 'குறைவளர்ச்சியுடையன' எனவும், மேலும் 122 'ஏற்கத்தகாதன' (objectionable) எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஆக, தி.மு.க. அரசு முழங்கியதுபோல குடிசைப் பகுதிகளை அதனால் ஒழித்துவிட இயலவில்லை. மாறாக அவை அதிகரிக்கவே செய்துள்ளன. எனினும் இப்போது சென்னை நகரை அழகுபடுத்துவது என்பதைத் தன் முக்கிய, அவசரத் திட்டங்களில் ஒன்றாகச் செயல்படுத்திவரும் நிலையில் குடிசை ஒழிப்பு இப்போது

தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட இந்த 122 'ஏற்கத்தகாத' குடிசைப் பகுதிகள் என்பதன் பொருள், இத்தகைய நகர வளர்ச்சித் திட்டத்திற்கு, அதாவது சிங்காரச் சென்னைத் திட்டத்திற்கு இவை உடனடி இடையூறாக உள்ளன என்பதுதான்.

இது உலகமய காலம். எல்லாம் 'பெரிசா'கச் செய்யப்படும் காலம். 'உலகத்தரமான நகரங்களை' (Global Metropolis) உருவாக்குவது அரசுகளின் நோக்கங்களாக உள்ளன. அந்நிய முதலீடுகள் வந்து குவிவதற்கான அவசிய நிபந்தனைகளில் ஒன்றாக இத்தகைய மெட்ரோபாலிடன் நகரங்கள் பார்க்கப்படுகின்றன.

சிங்கப்பூர், துபாய், ஒலிம்பிக்கிற்குப் பிந்திய பெய்ஜிங் போல டெல்லி, சென்னை போன்ற நகரங்கள் உருமாற வேண்டும் என்பதுதான் மன்மோகன் சிங், மு.க. ஸ்டாலின் முதலானோரின் பேரவாக்கள். ஷாப்பிங் மால்கள், மல்ட்டி ப்ளெக்ஸ்கள், உல்லாச மருத்துவமனைகள், அதிவேகச் சாலைகள், மெட்ரோ ரயில்கள் என்பதாக நகரங்கள் மாற்றம் பெற்றால்தான் அவை வணிக மற்றும் முதலீட்டு முக்கியத்துவம் பெறும் என்பதற்கு அவர்கள் முக்கியத்துவமளிக்கின்றனர். இத்தகைய அழகுமிகு நகரங்களுக்கு மிகப் பெரிய களங்கமாகவும், மடிப்பு கலையாத தூய ஆடையில் விழுந்த எச்சமாகவும் காட்சியளிக்கும் குடிசைப் பகுதிகள் நமது அரசியலாரின் கண்களை உறுத்துகின்றன.

சென்னையில் இப்போது ஐந்து பெரு வளர்ச்சித் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. தலைமைச் செயலகத்துக்கு அருகே, சென்னை துறைமுகத்தை ஒட்டி அமைந்துள்ள போர் நினைவுச் சின்னம் தொடங்கி மதுரவாயல் வரை 'உயர்த்தப்பட்ட அதிவேக நெடுஞ்சாலைத் திட்டப்பணி' இப்போது தொடங்கிவிட்டது. 1500 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட உள்ள இந்த 17 கி.மீ. நீளப்பாதை வடமாநிலங்களிலிருந்து வருகிற டேங்கர் லாரிகள் நேரடியாகத் துறைமுகத்திற்குச் சென்று சரக்கை இறக்க வசதியளிக்கிறது. இதன் மூலம் தொடர்ச்சியாக அரசுக்குச் சுங்கவரி கிடைக்கும் எனவும் அரசுத் தரப்பில் கூறப்படுகிறது. ஊடகங்கள் மற்றும் பொதுக் கருத்து உருவாக்கத்தில் முக்கியப் பங்கு வகிக்கும் மத்திய தர வர்க்கத்தினர் இதில் மகிழ்ச்சியடைகின்றனர். நகரம் அழகுப்படுத்தப்படுவது, போக்குவரத்து நெரிசல் குறைவது, இவற்றினூடாக அரசுக்கு வருமானம் மிகுவது எல்லாம் நல்ல அம்சங்கள்தானே என்பது அவர்களின் கருத்து.



பிரச்சினையை இந்தக் கோணத்தில் மட்டுமே அணுகினால் நாமும்கூட சிங்காரச் சென்னை குறித்து மகிழ்ச்சி அடையலாம். ஆனால் இதற்கு இன்னொரு பக்கமும் உண்டு. சுமார் 30,000 குடிசைவாழ் குடும்பங்கள் இத்திட்டத்தால் இடம் பெயர்க்கப்படுகின்றன. இந்த உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை முழுக்கக் கூவம் நதிமேலாகவே கட்டப்படுகிறது. இடம் பெயர்க்கப்படும் அத்தனைக் குடும்பங்களும் கூவம் நதி ஓரமாகக் குடிசை அமைத்துப் பல ஆண்டுகளாக வாழ்ந்து வருபவை. சென்ற நவம்பர் (2009) இறுதியில் சேத்துப்பட்டு, ஸ்பர்டாங் சாலை, அப்பாசாமி தெரு, இரட்டைமலை சீனிவாசன் நகர் முதலான இடங்களில் புல்டோசர்களை வைத்து குடிசைகள் இடிக்கப்படுவதையும், மக்கள் கதறக் கதற வெளியேற்றப்படுவதையும் பத்திரிகைகள் படங்களுடன் வெளியிட்டிருந்தன. (The New Indian Express, Nov. 15, Nov.30 - 2009) 1144 குடிசைகள் இவ்வாறு இடிக்கப்பட்டன.

இவ்வாறு இடம் பெயர்க்கப்பட்ட மக்கள் எல்லோரும் சுமார் 30 கி.மீ. தொலைவிலுள்ள துரைப்பாக்கம் கண்ணகி நகர், செம்மஞ்சேரி, ஒக்கியம் மற்றும் கார்கில் நகர், எர்ணாவூர் முதலான பகுதிகளில் கொண்டு சென்று 'குடியமர்த்த'ப்படுகின்றனர். குடியமர்த்தப்படுதல் என்றால் ஏதோ எல்லா வசதிகளும் நிறைந்த குடியிருப்புகள் அவர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன என நினைத்துவிடாதீர்கள். எந்த அடிப்படை வசதிகளும், போக்குவரத்தும் இல்லாத மழைநீர் தேங்கும் காட்டுப் பகுதியில் கொண்டு விடப்படுகின்றனர். கண்ணகி நகர் முதலான இடங்களில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் கட்டிடங்களும் சரியான பராமரிப்பு இல்லாமல், மின்சாரம் மற்றும் தண்ணீர் வசதி இன்றி நாறிக்கிடக்கின்றன. ஒன்றைச் சொல்லியாக வேண்டும்: இப்படி இடம் பெயர்க்கப்படும் குடிசைவாழ் மக்களில் 92 சதம் பேர் தலித்கள்.

சென்னையில் இயங்கும் 'தண்டோரா' என்கிற தலித் அமைப்பு உள்ளிட்ட பல சிறு இயக்கங்கள் ஒன்றாக இணைந்து 'குடிசைமக்கள் வாழ்வுரிமை இயக்கம்' என்றொரு அமைப்பை உருவாக்கியுள்ளனர். இவ்வமைப்பு சென்ற ஜூலை இறுதியில் இது குறித்த உண்மைகளை அறிந்து வெளியிட ஒரு உண்மை அறியும் குழுவை உருவாக்கியது. நானும் அதில் பங்குபெற்றேன் (பார்க்க இணைப்பு 1). இவ்வறிக்கையில் இது குறித்து மிக விரிவான தகவல்கள் அடங்கியுள்ளன என்பதால் இங்கே அவற்றைத் தவிர்க்கிறேன்.

சென்ற ஜூன், ஜூலையில் பெரிய அளவில் சென்னை நகரமெங்கும் குடிசைப் பகுதிகள் தீப்பற்றி எரிந்தன. எமது குழு அப்பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்ட போது ஒரு பொதுவான அம்சம் எங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. எங்கெல்லாம் வளர்ச்சிப் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளனவோ அங்குதான் குடிசைகள் எரிந்திருந்தன. சில பகுதிகள் ஏற்கனவே 'வெளியேற்ற' (eviction) அறிவிப்பு கொடுக்கப்பட்டு மக்கள் அதற்கு உடன்பட மறுத்திருந்தனர். குடிசைகள் தீப்பற்றி எரிந்த பின்பு எப்படித் தீப்பிடித்தது என்பது மர்மமாக உள்ளது என்பதை தீயணைப்புப் படையினரும் ஏற்றுக் கொண்டனர்.

இரண்டு விஷயங்களை நாம் மனதில் நிறுத்திக் கொள்வது அவசியம். ஒன்று: நகர்ப்புறங்களை நோக்கி இடம் பெயர்வது இன்று பெரிய அளவில் நிகழ்கிறது. வரும் பத்தாண்டுகளில் இது மேலும் அதிகரிக்கப்போகிறது. அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள்,விவசாயம் பாதிக்கப்படுதல், சிறு தொழில்கள் அழிதல், புதிய கார்ப்பரேட் முதலீடுகள் அனைத்தும் நகர்ப்புறங்களைச் சார்ந்தே குவிதல், கிராமப்புற வேலைவாய்ப்பின்மை, உருவாகும் புதிய வேலை வாய்ப்புகள் நகர்ப்புறங்களை ஒட்டியே அமைதல் என இதற்குப் பல காரணங்கள் உண்டு. எல்லாத் தரப்பு மக்களும் இவ்வாறு இடம் பெயர்ந்து நகரங்களை நோக்கி வந்தபோதும் மிகவும் அடித்தள ஏழை மக்களே சுகாதாரக்கேடான கழிவுநீர்த் தேக்கங்கள், சாக்கடை ஓரங்கள் ஆகியவற்றில் குடிசை அமைத்துத் தங்குகின்றனர்.

நாளாக நாளாக இவ்வாறு ஒரு பகுதியில் தங்க நேர்ந்தவர்களிடையே ஒரு உறவுப் பின்னால் (networking) ஏற்படுகிறது. அருகிலுள்ள கார்ப்பரேஷன் பள்ளிகளில் பிள்ளைகளைச் சேர்க்கிறார்கள்; அரசு மருத்துவமனைகளில் மருத்துவம் செய்து கொள்கிறார்கள்; ஏதாவது ஒரு பெயரில் 'நகரை அமைத்து', யாராவது ஒரு கட்சித் தலைவரை அண்டி குழாய் நீர் வசதி, ஒற்றை விளக்கு மின்சார வசதி, குடும்ப அட்டை முதலியவற்றையும் பெற்றுவிடுகின்றனர். இதெல்லாம் ஒரு பெரிய வசதிகள் இல்லாதபோதும், மிகவும் நெருக்கி அடித்து வாழ நேர்ந்தபோதும், மழைநீர்த் தேக்கம், கொசுத்தொல்லை, சாக்கடை நாற்றம் ஆகியவற்றைச் சகித்து வாழும் நிலை ஏற்பட்ட போதும் நகர்ப்புறச் சூழலின் விளைவாக ரிக்ஷா ஓட்டுதல், வண்ணந்தீட்டுதல், ஒப்பந்த வேலைகள், ஆட்டோ ஓட்டுதல் என்பதாக ஏதோ ஒரு



சம்பாத்தியத்தையும் அவர்கள் பெறமுடிகிறது. தவிரவும் இந்த உறவுப் பின்னலினூடாக அவர்களுக்கு அந்தப் பகுதியுடன் ஒரு சொந்த உணர்வும் (sense of belonging) ஏற்பட்டுவிடுகிறது.

நாம் புரிந்து கொள்ள வேண்டிய இரண்டாவது அம்சம்: இத்தகைய சூழலில் அவர்கள் மீது வன்முறையாக இடப்பெயர்வு சுமத்தப்படும்போது அவர்கள் அனுபவிக்கும் மரணத்துயர் (trauma) பற்றியது. வாழ்ந்த பகுதியுடனிருந்த அவர்களது சொந்த உணர்வு முதலில் அறுத்தெறியப்படுகிறது. கலைக்கப்பட்ட சிலந்தி வலைபோல உறவுப் பின்னல் பஞ்சுப் பஞ்சாய் நைந்துவிடுகிறது. தாங்கள் வேலை செய்த இடங்களிலிருந்து சுமார் 30 கி.மீ. தொலைவில், குறைந்தபட்சப் போக்குவரத்து வசதியுமற்ற பகுதிக்குத் தள்ளப்படுவதால் விளையும் சுமையின் பல்வேறு பரிமாணங்களையும் நான் விளக்கத் தேவையில்லை. புதிய இடத்தில் அவர்களுக்கு மின்சாரம், குடிநீர் முதலான அடிப்படை வசதிகள் மட்டுமின்றி, போதிய மருத்துவ, பள்ளி வசதிகளும் இருப்பதில்லை. குழந்தைகள் தம் பழைய பள்ளியில் படிப்பைத் தொடர வேண்டுமானால் தினம் 30+30=60 கி.மீ. பயணம் செய்ய வேண்டும். வீட்டுவேலை செய்து துணைச் சம்பாத்தியம் பெற்றுக் கொண்டிருந்த பெண்களுக்கு இப்போது அது சாத்தியமாவதில்லை. கந்துவட்டி வலையில் அவர்கள் வீழ்கின்றனர். தாதாக்கள், கள்ளச் சாராயக்காரர்களின் ஆதிக்கம் (புதிய இடங்களில் போதுமான அளவு 'டாஸ்மாக்' கடைகளும் இருப்பதில்லை) புதிய பிரச்சினைகளுக்கும் காரணமாகிறது.

புதிய குடியிருப்பு பகுதிகளில் மனநோய், குற்றச் செயல்கள், தற்கொலைகள், பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்துதல் (drop outs) ஆகியவை அதிகமாக உள்ளதை நாங்கள் நேரில் கண்டோம்.

ஒரு 'வளர்ச்சித்' திட்டத்தைத் திட்டமிடும்போது 'வளர்ச்சி'யின் இந்தப் பரிமாணங்களையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். நகர வளர்ச்சி மட்டுமின்றி அணைக்கட்டுகள் கட்டுதல், பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களை அமைத்தல், சுரங்கம், நிலக்கரி தோண்டுதல் என்பதாக நாடெங்கிலும் கடந்த நூற்றாண்டுகளில் ஏராளமாக மக்கள் வன்முறையாக இடம் பெயர்க்கப்பட்டனர். எனினும் கடந்த நூற்றாண்டின் கடைசி 20 ஆண்டுகளில் தான் இடம்பெயர்வு குறித்த பிரச்சினை உலகெங்கிலும் ஏற்பட்டது.

'உலக அணைகளுக்கான ஆணையம்' (World Commission on

Dams) வெளியிட்ட அறிக்கை (1980) குறிப்பிடத்தக்க ஒன்று. நமது நாட்டைப் பொருத்தமட்டில் நர்மதை அணைப்போராட்டம் இது குறித்த பிரக்ஞையை உருவாக்கிய முக்கிய இயக்கங்களில் ஒன்று. அதற்கும் முன்னதாக இடம் பெயர்க்கப்பட்டவர்களின் அவல நிலையைப் பற்றி யாரும் கவலைப்பட்டதில்லை. இப்போது கூட தண்ணீர் குறைந்த அளவில் உள்ளபோது மேட்டூர் அணையில் மூழ்கடிக்கப்பட்ட கோவிலின் கோபுரம் முதலானவற்றை நீங்கள் பார்க்கலாம். மூழ்கடிக்கப்பட்ட கிராமங்கள் மட்டுமின்றி கட்டுமானப் பணிகளுடனாகவே நூற்றுக்கணக்கில் அடித்தள மக்கள் இறந்து போயுள்ளனர். பெரிய அணைகள், தொழில் நிறுவனங்கள் தேவையா இல்லையா என்கிற அடிப்படையில் இதை நாம் அணுகாமல் கூடியவரை இடப்பெயர்வுகள் இல்லாமல் இவற்றில் அவசியமானவற்றை எப்படிச் சாதிப்பது, இடப்பெயர்வு மற்றும் புதுவாழ்வு அமைத்தல் தொடர்பான அடிப்படை அணுகல் முறை என்னவாக இருக்க வேண்டும் என்கிற கோணத்திலிருந்து நாம் இதை அணுகியாக வேண்டியுள்ளது.

ஒரு புள்ளி விவரத்தின் அடிப்படையில் 1947 - 2000 காலகட்டத்தில் இந்தியா முழுவதும் நிலப்பறிப்பினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 60 மில்லியன். அதாவது ஆறுகோடி. இவர்களில் 40 சதம் பழங்குடியினர், 20 சதம் தலித்துகள், 20 சதம் பலமிழந்த பிற்படுத்தப்பட்ட சாதியினர். ஆக வளர்ச்சித் திட்டங்களாலும், நிலப்பறிப்புகளாலும் பாதிக்கப்படுபவர்கள் பெரிய அளவில் அடித்தள மக்கள்தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

உலகமயச் சூழலில் இப்பிரச்சினை அதிகம் மேலுக்கு வருவதை ஒட்டி இந்திய அரசு 1894 ம் ஆண்டு நிலப்பறிப்புச் சட்டத்தில் (Land Acquisition Act) சில திருத்தங்களைச் செய்யவும், புதிய 'மறுவாழ்வு அமைத்தல் மற்றும் மறுகுடியிருப்பு அமைத்தல் மசோதா' (Rehabilation and Resettlement Bill) ஒன்றை நிறைவேற்றவும் தற்போது முனைகிறது. தேசிய அளவிலான 'மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்த்தல் கொள்கை' ஒன்று குறித்த அறிவிப்பும் அக்டோபர் 2007ல் வெளியிடப்பட்டது.

சொத்து = திருட்டு என புருதோன் போன்ற ஒழுங்கவிழ்ப்புச் சிந்தனையாளர்கள் (anarchists) குறிப்பிடுவர். 16,17-ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் எவ்வாறு பொதுச் சொத்துக்களைத் (common property) திருடித் தனியாக முதலாளிகள் குவித்துக்



கொள்வதற்கு உதவி செய்கிற கருவிகளாக அன்றைய சட்டங்கள் இருந்தன என்பதைக் கார்ல் மார்க்ஸ் தனது 'மூலதனம்' நூலில் விளக்குவார். பல்வேறு கவர்ச்சிகரமான வாசகங்களை அள்ளித் தெளித்து, அவற்றினூடாக இன்றைய கார்ப்பரேட் முதலாளிகளும், வளர்ச்சித் திட்டக்காரர்களும் அடித்தள, பழங்குடி மக்களின் பொதுச் சொத்துக்களைத் திருடிக் கொள்ள ஏதுவாகும் கருவியாக இன்று அரசு அறிவித்துள்ள இச்சட்டங்கள் எவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளன என்பதைக் காண்போம்.

# அத்தியாயம் 2

## நிலப்பறிப்பு - மறுவாழ்வு - மறுகுடியிருப்புச் சட்டங்கள்: ஒரு பார்வை

விரிவாக்க நடவடிக்கைகள், தொழிற்சாலை உருவாக்கங்கள், சுரங்கம் தோண்டுதல் முதலானவற்றிற்கு நிலங்களைக் கைப்பற்றுவது தொடர்பான தற்போது நடைமுறையிலுள்ள 'நிலம் கையகப்படுத்துவதற்கான சட்டம்' (Land Acqusition Act) என்பது *1894*-ம் ஆண்டில் காலனிய ஆட்சி உருவாக்கப்பட்டது. நிலத்தைச் சார்ந்துள்ளோர் குறித்து எந்த அக்கறையும் இல்லாமல் அது உருவாக்கப்பட்டது. சுதந்திரத்திற்குப் பிந்திய இந்திய அரசு மேற்கொண்ட சிற்சில மாற்றங்கள் மேலும் மேலும் அரசுக்கும் கார்ப்பரேட்களுக்கும் சாதகமாகவே அமைந்தன.

'பொதுப் பயன்பாட்டிற்காக' நிலத்தை எடுத்துக்கொள்வது என்பதற்கு அப்பால், மேற்படி சட்டத்தின் *55*-வது பிரிவின் கீழ் தனியார் நிறுவனங்களுக்காகவும் (companies) நிலங்களைக் கைப்பற்றுவதற்கு *1960* களில் வழிசெய்யப்பட்டது. 'தகுதியான நிலத்தைக் கண்டறிவதற்கு' எல்லாவிதமான முயற்சிகளையும் தான் மேற்கொண்டதையும், நியாயமான விலையைப் பேரம் பேசுவதில் வெற்றி பெற இயலாததையும் அது நிறுவினால் போதுமானது. அது விவசாய நிலமாக இருக்கும் பட்சத்தில் மாவட்ட ஆட்சியாளர், மாவட்ட விவசாய அதிகாரிகளைக் கலந்துகொண்டு வேறு மாற்று நிலம் இல்லாததை உறுதிப்படுத்திக் கொண்டால் நிலம் கைப்பற்றுவதற்கான முதல் அறிவிப்பை அரசு வெளியிடலாம்.

விவசாய நிலம் என்பது குறித்து ஏதேனும் மறுப்புரைகள் வந்தாலும் அதற்குச் சமாதானம் சொல்லி மாவட்ட ஆட்சியர் அறிக்கை அளிக்க வேண்டும். இவ்வாறு நிலம் கைப்பற்றப்படுவதில் அரசுக்குச் செலவினங்கள் இல்லாத பட்சத்தில், 'பொது நோக்கத்திற்காகத்தான் அந்த நிலம் கைப்பற்றப்படுகிறது' (Public Utility)



என்கிற நிபந்தனையை அவர் பூர்த்தி செய்ய வேண்டியதில்லை. அதாவது ஈட்டுத்தொகை முதலியவற்றை நிறுவனமே வழங்குகிற நிலையில் பொதுக்காரியத்திற்காக இல்லாதபோதுங்கூட நிலத்தைக் கைப்பற்றலாம்.

*1984*-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சட்டத்திருத்தத்தில் இது மேலும் தெளிவாக்கப்பட்டது. 'பொதுக் காரியத்திற்காகவே நிலம் கைப்பற்றப்படுகிறது' என அரசு அறிவிக்க வேண்டும் என்பது இச்சட்டத்தின் *6*-ம் பிரிவில் ஏற்கனவே நிபந்தனையாக்கப் பட்டிருந்தது. அது தற்போது மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தில் முழுமையாக நீக்கப்பட்டது. தனியார் நிறுவனங்களுக்கு நிலம் கைப்பற்றப்படும்போதும், பொது நிதியிலிருந்து ஈட்டுத்தொகை வழங்கத் தேவையில்லாதபோதும் இத்தகைய அறிவிப்பை அரசு செய்யத் தேவையில்லை என்பதே அத்திருத்தத்தின் உள்ளடக்கம். சுருக்கமாகச் சொல்வதானால் 'கம்பெனி'களுக்காக நிலங்களைக் கைப்பற்றும்போது அது பொதுக் காரியங்களுக்காக இருக்க வேண்டியதில்லை.

இன்றைய உலகமயச் சூழலில் மேலுக்கு வந்துள்ள பல சொல்லாடல்களில் ஒன்று 'Eminent Domain'. ஒரு அரசு தனது குடிமக்களிடமிருந்து நிலத்தைக் கைப்பற்றுவதற்கான சிறப்புரிமையை இது குறிக்கிறது. தனியார் பொருளாதார வளர்ச்சிக்கெனவுங்கூட ஒரு அரசு நிலத்தைக் கைப்பற்றலாம் என அமெரிக்க உச்சநீதிமன்றம் சில ஆண்டுகட்கு முன் தீர்ப்பொன்றை அளித்தது. சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு ஆதரவாக இங்கு செயல்படுபவர்களும் இப்போது இதை மேற்கோள் காட்டுகின்றனர். அதாவது விவசாயிகள் மற்றும் விவசாய நிலங்களைச் சார்ந்திருப் போரிடமிருந்து எழும் எதிர்ப்புக் குரல்களைத் 'தொலைநோக் கான பொருளாதார நலன்' என்கிற அடிப்படையில் புறக்கணித்து விடலாம் என்பது இவர்கள் முன் வைக்கும் வாதம்.

நிலவுகிற சட்டங்களின்படி இவ்வாறு கைப்பற்றப்படும் நிலங்களுக்கான இழப்பீடு வழங்கும் போது கீழ்க்கண்ட அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்:

*(1)* முதல் அறிவிப்பு செய்யப்படும் நேரத்தில் அந்நிலத்தின் 'சந்தை மதிப்பு',

*(2)* கைப்பற்றப்படும் நிலத்தில் 'அக்கறையுள்ளவர்களுக்கு' ஏற்படும் இழப்பு,

*(3) இடம் பெயர்வதற்குத் தேவையான 'நியாயமான' செலவுகள்,*

*(4) நிலத்தை ஒப்படைப்பது வரையிலான காலத்திற்கு 12 சத வட்டி,*

*(5) மேற்கண்டவற்றுடன் 30 சத கருணைத் தொகை.*

ஆக, இழப்பீட்டுத் தொகை விவசாயிகளிடம் பேசி நிர்ணயிக்கப்படுவதில்லை; அரசே அறிவிக்கிற ஒன்று.

கடந்த மூன்றாண்டுகளில் அந்த நிலம் பதிவு அலுவலகங்களில் என்ன விலைக்கு விற்கப்பட்டுள்ளதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதன் சராசரியே 'சந்தை மதிப்பு'. உண்மையில் கைமாற்றிக் கொள்ளும் தொகையில் சுமார் 40 சதம் மட்டுமே பத்திரத்தில் பதிவுச் செய்யப்படுவதை நாம் அறிவோம். உண்மையான சந்தை மதிப்பைப் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கும், அந்நிலத்தைச் சார்ந்திருந்த விவசாயக் கூலிகளுக்கும் வழங்குவதற்கு வழியில்லை. எடுத்துக் காட்டாக 'நவி மும்பை' திட்டத்தில் 35,000 ஏக்கர் நிலம் கைப்பற்றப்பட உள்ளது. பயனடையப் போவது 'ரிலையன்ஸ்' நிறுவனம். அரசு நிர்ணயித்துள்ள சந்தை மதிப்பு ஏக்கருக்கு 1.7 லட்சம் முதல் 2.5 லட்சம் வரை. ரிலையன்ஸ் நிறுவனம் ரொம்பத் தாராளமாக 3 முதல் 4 லட்சம் வரை தருவதற்குத் தயாராக உள்ளது. ஆனால் அந்த நிலத்தின் இன்றைய உண்மையான சந்தை மதிப்பு ஏக்கர் 30 முதல் 40 லட்சம் ரூபாய்கள் எனப் பத்திரிகைகள் எழுதுகின்றன.

தவிரவும் இந்நிலம் கைப்பற்றப்பட்டு அங்கே தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டவுடன் பல மடங்கு விலை உயரும் போது, அதில் எந்தப் பயனும் நிலத்தைப் பறிகொடுத்த விவசாயி களுக்கும் அதைச் சார்ந்திருந்த இதர பிரிவினருக்கும் சென்றடையாது.

'நிலத்தைச் சார்ந்திருப்போர்' என்பது குறித்தும் நாம் சிறிது சிந்திக்க வேண்டும். பதிவு செய்து ஆவணங்களை வைத்திருக்கும் குத்தகைதாரர்கள் தவிர, பதிவு செய்யாத குத்தகைதாரர்கள், விவசாய நிலங்களில் வேலை செய்த விவசாயக் கூலிகள் மற்றும் அந்த கிராமத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருந்த வண்ணார், நாவிதர் முதலான கிராமத் தொழிலாளிகள் எல்லோரும் இதில் அடக்கம். நமது கிராம சமுதாய அமைப்பு குறித்து எந்தக் கவலையும் இல்லாமல் இயற்றப்பட்ட காலனியச் சட்டத்தில் இவர்களுக்கெல்லாம் இழப்பீடு வழங்க வழியே இல்லை. வாழ்விழந்த இவர்கள் நகரங்களை நாடி



சாக்கடை ஓரங்களில் குடிசைகள் அமைத்து உதிரித் தொழிலாளிகளாக வேண்டியதுதான்.

இடம் பெயர்க்கப்பட்டு பாதிக்கப்படுவோரில் சுமார் 60 சதம் பேர் பழங்குடிகளும் தலித்களுந்தான் என்பது குறித்து முன்பே சொன் னேன். இடம்பெயர்க்கப்பட்டு ஏதோ ஒருவகையில் குடியமர்த்தப் பட்டவர்கள் 'இடம்பெயர்க்கப்பட்டவர்கள்' (Displaced persons) என அழைக்கப்படுகின்றனர். இந்த வாய்ப்புமின்றி வாழ்விழந் தவர்கள் 'திட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள்' (Project affected persons) எனப்படுகின்றனர்.

இதுவரை நாம் பேசியது இன்றுவரை நடைமுறையிலுள்ள சட்டங்கள் குறித்து. இனி இப்போது அறிவிக்கப்பட்டுள்ள கொள்கை மற்றும் சட்டங்களைச் சிறிது நோக்குவோம்.

சர்தார் சரோவர் அணைத்திட்டத்தை ஒட்டி இந்தியச் சூழலில் ஏற்பட்ட விழிப்புணர்வின் விளைவாகவும், அக்கறையுள்ள குடிமக்கள் தொடர்ந்து கொடுத்த அழுத்தங்களின் விளைவாகவும் 'மறுவாழ்வு மற்றும் மறுகுடியிருப்புத் தொடர்பான தேசியக் கொள்கை' 2007ல் அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 'மறு வாழ்வு மற்றும் மறு குடியிருப்பு மசோதா - 2007' என ஒன்றும், 'நிலம் கையகப்படுத்தல் (திருத்த) மசோதா - 2007' என ஒன்றும் நா டாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. எனினும் இன்றுவரை அவை நிறைவேற்றப் படவில்லை. மம்தா பானர்ஜி இதற்கு எதிராக இருப்பதாகக் கேள்வி. இந்தக் கொள்கை அறிக்கை மசோதாக்களின் முக்கியக் கூறுகள் சிலவற்றைக் காண்போம்.

மேலோட்டமாகப் பார்க்கும்போது கீழ்கண்ட காரணங்களுக் காக புதிதாக முன்மொழிப்பட்டுள்ள கொள்கை அறிவிப்புகளும் மசோதாக்களும் பாராட்டத்தக்கவையாகத் தோன்றுகின்றன. 'மறுவாழ்வு' அமைத்துத்தருவது குறித்து ஒரு சட்டம் இயற்றப் படுதலும், காலனிய கால நிலம் கையகப்படுத்தும் சட்டமும் திருத்தப்படுதலும் வரவேற்கப்பட வேண்டியவைதானே. தவிரவும் (1) புதிய மசோதாக்களில் 'பொது நோக்கம்' என்பது மறுவரையறை செய்யப்பட்டுள்ளது; (2) தனியார்களுக்கென அரசு கைப்பற்றுகிற நிலத்தின் அளவு குறைக்கப்பட்டுள்ளது; (3) 'குறைந்த பட்ச இடப்பெயர்வு', 'இடப்பெயர்வில்லாத மாற்றுகள்', 'பாதிக்கப்படும் மக்களுடன் கலந்தாலோசனை', 'நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான இழப்பீடு மற்றும் இதர பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான

அதிகார அமைப்பு' முதலான சொற்கள் இம்மசோதாக்களிலும், கொள்கை அறிவிப்பிலும் ஆங்காங்கு தூவப்பட்டுள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாகத் திட்டத்தால் ஏற்படும் 'சமூகப் பாதிப்பு குறித்து மதிப்பீடு' (Social Impact Assessment) செய்யப்படல் குறித்தும் பேசப்பட்டுள்ளது. இவை எல்லாம் நல்ல அம்சங்கள்தானே என முதல் வாசிப்பில் யாருக்கும் தோன்றக் கூடும்.

எனினும் இவற்றில் பல சிக்கல்கள் உள்ளன. இந்திய அரசு சமீபத்தில் இயற்றியுள்ள கல்வி, உணவு உரிமைச் சட்டங்கள் குறித்து விரிவாக எழுதியுள்ளேன் (பார்க்க : கல்வி, உணவு, உரிமைச் சட்டங்கள், புலம் வெளியீடு, 2010). இந்த உரிமைகள் எல்லாம் சட்டமாக்கப்படுவது பாராட்டுக்குரியதெனினும் இவை எவ்வாறு உலக முதலாளிய நலன்களுக்குப் பங்கம் வராது இயற்றப்பட்டுள்ளன என்பது அந்நூலில் விரிவாக அலசப்பட்டுள் ளது. நிலம் கைப்பற்றப்படுதல் மற்றும் இழப்பீடு வழங்குதல் தொடர்பான இன்றைய சட்டங்களிலும் இந்தப் பிரச்சினைகள் உள்ளன. அவை :

1. இச்சட்டங்கள் 'மறுவாழ்வு' மற்றும் 'மறுகுடியிருப்பு' தொடர்பானவையாகத்தான் உள்ளனவே ஒழிய 'இடப்பெயர்வு' இதில் உள்ளடங்கவில்லை. இதைச் சற்று விரிவாகக் காண்போம். காலனிய காலத்தில் உருவாக்கப்பட்டு இன்று நடைமுறையில் உள்ள சட்டத்தில் இழப்பீடு போதாது என்கிற காரணத்திற்காக மட்டுமே நாம் நீதிமன்றத்தை அணுகலாம். மாறாக என்னுடைய நிலத்தைத் தர இயலாது, என்னை இடப்பெயர்வு செய்தது தவறு என்கிற காரணங்களுக்காக யாரும் வழக்குத் தொடர இயலாது. இந்நிலை புதிய சட்டத்திலும் தொடர்கிறது. இடப்பெயர்வு என்பது இச்சட்டங்களில் உள்ளடக்கப்படாததால் இது நிகழ்கிறது. எனவே புதிய சட்டம் 'இடப்பெயர்வு, மறுவாழ்வு மற்றும் மறுகுடியிருப்புச் சட்டம்' என்பதாக இம்மூன்று அம்சங்களையும் உள்ளடக்கி அமைதல் அவசியம்.

2. 'பொது நலன் மற்றும் தனியார் நிறுவனம்' எனக் காலனியச் சட்டத்தில் இருந்த சொற்கள் தற்போது வெறுமனே பொதுநலன் என்பதாக மாற்றப்பட்டுள்ளது. எனவே தனியார் நிறுவனங்களுக் காக நிலம் கைப்பற்றப்படுதலை இது குறிக்கவில்லை என்பது போலத் தோன்றுகிறது. ஆனால் புதிய சட்டத்தில் 'பொது நலன்' என்பது மறு வரையறை செய்யப்பட்டு, யாரேனும் 'ஒரு நபருக் காக' கையகப்படுத்துவதும் அதில் உள்ளடக்கப்பட்டுவிட்டது. ஒரு நபர் என்பது தனியார் நிறுவனத்தையும் உள்ளடக்கும். இவ்வாறு பொது



நலன் நோக்கத்திற்காக நிலத்தைக் கைப்பற்றும் அரசுரிமை என்பதில் 'பொது நலன்' என்பது சுருக்கப்படுவதற்குப் பதிலாக மேலும் விரிவாக்கப்பட்டுள்ளது.

3. ஒரு நிறுவனம் குடி மக்களிடமிருந்து அதற்குத் தேவையான மொத்த நிலத்தில் 70 சதத்தை ஏற்கனவே வாங்கியிருந்தால், மீதி 30 சதத்தைக் கொடுக்க மறுக்கும் விவசாயிகளிடமிருந்து கட்டாயமாகப் பெற்றுக் கொடுக்கும் உரிமையை இச்சட்டம் அரசுக்கு அளிக்கிறது. ஆக, ஒரு நிறுவனம் ஏதோ ஒரு வகையில் அழுத்தம் கொடுத்து பெரும்பான்மை நிலத்தைக் கைப்பற்றி இருக்கும் சூழலில், எதிர்த்துப் போராடுகிறவர்களை அரசு வழிக்குக் கொண்டு வருவதற்கு இச்சட்டம் வழி வகுக்கிறது.

4. இழப்பீடு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு அதிகார அமைபையும் இச்சட்டம் முன்மொழிகிறது. இதன் மூலம் நீதிமன்றத்தை அணுகும் முயற்சியில் ஒரு தடை ஏற்படுத்தப்படுகிறது.

5. திட்டத்தால் ஏற்படும் சமூகப் பாதிப்பு குறித்து மதிப்பீடு செய்யப்படும் என்பதைப் பொருத்தமட்டில் இந்த மதிப்பீடு கட்டடங்கள், கோவில், நிறுவனங்கள் முதலானவற்றில் ஏற்படும் பாதிப்புகளோடு நிறுத்திக் கொள்ளப்படுகிறது. இடப்பெயர்வால் ஏற்படக்கூடிய அடையாள இழப்பு, சமூக வலைப்பின்னல் சிதைவது, வேர்களை இழப்பதன் மூலம் ஏற்படும் மனநிலை பாதிப்பு ஆகிய சமூக மற்றும் உளநிலை பாதிப்புகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. தவிரவும் இந்த மதிப்பீட்டை அதிகார வர்க்கத்தைக் கொண்டு செய்வதால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. சமூகப் பிரச்சினைகளில் அக்கறையுடையவர்கள் நிரம்பிய ஒரு சுயேச்சையான அமைப்பே அதைச் செய்ய வேண்டும். இந்த அமைப்பின் ஒப்புதல் பெற்றே எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்த வேண்டும். திட்டம் ஒன்றிற்காக மரங்களை வெட்டுவதற்கு இப்படி ஒரு சட்டப் பூர்வமான ஒப்புதல் (Statutory Clearance) பெறவேண்டும் என்கிற நிலை உள்ளபோது, மனிதர்களை இடம்பெயர்க்கும்போது இத்தகைய ஒப்புதல் தேவையில்லாத நிலையை என்ன சொல்வது?

6. மறுவாழ்வு அமைத்துத் தருதல் தொடர்பான சட்டத்தில் குறைதீர்க்கும் நடுவர் (ombudsman) ஒருவர் நியமிக்கப் படுவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது. ஆனால் திட்டம் தொடர்பாக முடிவுகளை

எடுக்கும்போது, பாதிக்கப்படுகிற தங்களைக் கலந்தாலோசிக்காமை, பாதிக்கப்படுபவர்கள் பட்டியலில் தாங்கள் விடுபட்டுப் போனமை ஆகியவை குறித்து இந்த நடுவரிடம் புகார் அளித்து நிவாரணம் பெற இச்சட்டத்தில் வழியில்லை. அனுமதிக்கப்பட்ட பலன்கள் கிடைக்கவில்லை என்பதற்காக மட்டுமே புகார் செய்ய வழிவகுக்கப்பட்டுள்ளது. இந்த நடுவர் எவ்வாறு நியமிக்கப்படுவார், அவரது பணி எத்தகையது என்பது குறித்தும் போதிய விளக்கமில்லை.

7. இச்சட்டங்களை எவ்வாறு செயல்படுத்துவது என்பதற்குத் தனியே விதிமுறைகள் (Rules) இயற்றப்படுமா, அவை எவ்வாறு அமையும் என்பது குறித்தும் தெளிவு இல்லை. சர்தார் சரோவர் அணை எதிர்ப்புப் போராட்டத்தினூடாக வந்தடைந்த ஒரு முக்கிய கருத்தொருமிப்பு, ‘அணைப்பகுதி மூழ்கடிக்கப் படுவதற்கு முன்னதாகவே மறுவாழ்வமைத்தல் நிறைவேற்றப் பட்டிருக்க வேண்டும்’ (rehabilation must precede submergence) என்பது. இதன் பொருள் எந்தத் திட்டமும் தொடங்கப்படுவதற்கு முன்னதாகவே மறுவாழ்வுப் பணி நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே. இந்தக் கருத்தொருமிப்பும் இச்சட்டத்தில் கைவிடப்பட்டுள்ளது. உருவாக்கப்பட்டுள்ள புதிய சட்டத்தில் ‘மறுவாழ்வுப் பணியில் போதிய முன்னேற்றம் காண்பது’ மட்டுமே நிபந்தனையாக்கப்பட்டுள்ளது. இச்சட்டம் முன்மொழிகிற மறுவாழ்வு தொடர்பான பயன்தொகுப்பு (package) ஏற்கனவே தெஹ்ரி, சர்தார் சரோவார் முதலான திட்டங்களில் கையாளப்பட்டதைக் காட்டிலும் குறைவான தாகவே உள்ளது.



## அத்தியாயம் 3

# இடப்பெயர்வு, மறுவாழ்வு, மறு குடியமர்த்தல் - என்ன செய்ய வேண்டும்?

இந்திய அதிகாரவர்க்கத்தைப் பொருத்தமட்டில் வளர்ச்சித் திட்டங்களை ஒரு பெரிய பொறியியற் சாதனையாகப் பார்க்கும் மனநிலை மட்டுமே உள்ளது. ‘தேசிய மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்த்துதல் கொள்கை’ முதன் முதலில் பா.ஜ.க. அரசு இருந்தபோது (பிப்ரவரி, 2004) வெளியிடப்பட்டது. அருணாராய், என்.சி.சக்சேனா போன்ற சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட தேசிய ஆலோசனைக் குழு அளித்த அறிக்கையை அதிகாரவர்க்கம் தூக்கி எறிந்தது. நான் முன்பு குறிப்பிட்ட அணைகளுக்கான உலக ஆணையம் தன் பரிந்துரைகளை முன் வைத்தபோது, ‘இந்தியா வளர்ச்சியடைவதைப் பொறுக்காத சர்வதேச சதிதான் இது’ என விமர்சனம் செய்யவும் அது தயங்கவில்லை. ‘சமத்துவத்திற்கு அளவுக்கு மீறி அழுத்தம் கொடுப்பது ஆபத்தானது’ எனவும், ‘யார் பாதிக்கப்படுவார்களோ அவர்களிடமே கருத்துக் கேட்டால் அது எதிர்மறையாகவே முடியும்’ எனவும் வெளிப்படையாகவே அமைச்சகம் சார்பாகக் கருத்து வெளியிடப்பட்டது.

இவ்வளவையும் இங்கே எதற்காக அழுத்தம் கொடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது என்றால், ‘தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்க முயற்சிப்பது’ போலல்லாமல் சட்டம் இயற்றப்படும் முன்பாகவே நாம் கவனமாக இருக்க வேண்டும், சட்டமாக இயற்றப்பட்ட பின் அதை நடைமுறைப்படுத்துகிற விஷயத்திலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். இந்த வகையில் கீழ்க்கண்ட அம்சங்களில் நமக்குக் கவனம் தேவை :

1) வளர்ச்சித் திட்டங்களுக்காகக் குடிசைகளிலிருந்தோ, இதர குடியிருப்பு பகுதிகளிலிருந்தோ இடம் பெயர்க்கும் போதும், விவசாய நிலங்கள் கைப்பற்றப்படும்போதும் ‘முழு விவரமும் தெரிவிக்கப் பட்டு, முன்கூட்டிய, சுதந்திரமான ஒப்புதல்’ (Free Informed, Prior Consent) பெறுவது நிபந்தனையாக்கப்பட வேண்டும்.

*2) நிலம் கையகப்படுத்தப்படும்போது அளிக்கப்படும் இழப்பீடு ஒட்டுமொத்தத் தொகையாக ஒரே நேரத்தில் அளிக்கப்படக்கூடாது. உருவாகப் போகிற திட்டத்தில் பங்குதாரர்களாக அவர்கள் ஆக்கப்பட வேண்டும் என்கிற கருத்தை இது தொடர்பாகச் சிலர் முன்மொழிகின் றனர். விவசாயிகள் மற்றும் அவர்களைச் சார்ந்துள்ளவர்கள் ஆகியோர் பங்குச் சந்தை இயக்க நுட்பங்களை அறியாதவர்களாக இருப்பதால், சுதந்திரமான ஒரு பங்குச் சந்தை நிர்வாக அமைப்பின் மூலம் அவை நிர்வகிக்கப்பட வேண்டும். தொடர்ந்து வந்து கொண்டுள்ள வாடகை, ஓய்வூதியம் என்கிற வகையில் இந்த இழப்பீடு அமைதல் அவசியம். இத்தகைய இழப்பீடு என்பது நில உரிமையாளர்களுக்கு மட்டுமின்றி, நிலத்தைச் சார்ந்துள்ள அனைவருக்கும் அளிக்கப்படுதல் அவசியம். அதாவது ஒரு நேரத்தில் இழப்பீட்டுத் தொகையை அளித்து முடித்துவிடாமல் நிலத்தை இழந்தவர்களும், சார்ந்து வாழ்ந்தவர் களும் தொடர்ந்து பயன்பெற வேண்டும்.*

*3) நில உரிமையாளர்கள் மட்டுமின்றி, நிலத்தைச் சார்ந்திருந்த அனைவருக்கும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட உறுதியான பாதுகாப்பு கள் அளிக்கப்பட வேண்டும்.*

*4) நில மாற்றீடு, இழப்பீடு, மறுவாழ்வு, மறு குடியமர்த்தல், வேலைவாய்ப்பு ஆகியவற்றை மேற்பார்வையிட ஒரு சுயேச்சையான அமைப்பு உருவாக்கப்படுதல் வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் சமூகத் தலைவர்கள், அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோர் அதில் இடம் பெற வேண்டும். அரசு அதிகாரிகள் மட்டுமே இழப்பீடு முதலான வற்றை நிர்ணயிக்கக் கூடியவர்களாக இருக்கக் கூடாது. மேற்குறிப்பிட்ட சுயேச்சையான அமைப்பிடமே இந்தப் பொறுப்பு இருக்க வேண்டும்.*

*5) நிலம் கைப்பற்றப்படுவதற்கு முன் செய்யப்பட்ட இத்தகைய ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்படாத நிலையில், எந்த நிலையிலும் ஒப்பந்தத்தை ரத்து செய்து கொள்ளும் உரிமை நில உரிமையாளர் களுக்கும் அதைச் சார்ந்து வாழ்ந்தவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும்.*

*6)'நிலத்திற்குப் பதிலாக மாற்று நிலம் தருவது' என்றொரு கருத்தை அரசு முன்மொழிகிறது. ஆனால் இழந்த நிலத்திற்குச் சம தரத்திலுள்ள நிலம் இதுவரை வழங்கப்பட்டதில்லை. புதிதாக உருவாக்கப்படும் குடியிருப்புகள் வாழத் தகுதியற்றவையாகவே உள்ளன. தவிரவும் இவ்வாறு 'மாற்று நிலம்' வழங்கியதன் மூலம் நிலத்தை உரிமையாகக் கொண்டிருந்தவர்கள் மட்டுமே ஈடு செய்யப்பட்டவர்களாக ஆகி விடக் கூடாது. அந்த நிலத்தைச் சார்ந்து வாழ்ந்தவர்களின் எதிர்காலமும் உறுதி செய்யப்படுதல் அவசியம்.*



*7) 1894-ம் ஆண்டு நிலப் பறிப்புச் சட்டம் திருத்தப்படும்போது 'பொதுக் குறிக்கோள்' (Public purpose) என்பது தெளிவாக எவற்றையெல்லாம் உள்ளடக்குகிறது என்று வரையறுக்கப்பட வேண்டும். தனியார்துறைத் திட்டங்கள் இவற்றில் உள்ளடக்கப்படக் கூடாது.*

*8) பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதியில் நிலங்கள் கைப்பற்றப்படும்போது '1966 -ம் ஆண்டு பஞ்சாயத்து (பட்டியல் பகுதிகள் விரிவாக்கம்) சட்ட'த்தின்படி பழங்குடிக் கிராம அமைப்புகளைக் கலந்தாலோசித்து அவற்றின் ஒப்புதலைப் பெறவேண்டும்.*

*9) 'தேசிய மறுவாழ்வு ஆணையம்' ஒன்று அமைக்கப்படுதல் வேண்டும்.*

*10) நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களுக்காகக் குடிசைப் பகுதி மக்கள் கட்டாயமாக வெளியேற்றப்படுவது நிறுத்தப்படல் வேண்டும். தவிர்க்க இயலாத நிலையில் அவர்கள் முன்பு வசித்த இடங்களுக்கு மிக அருகாகவே (5 கி.மீ. தொலைவுக்குள்) அடிப்படை வசதிகளுடன் கூடிய குடியிருப்புகள் அமைத்துத் தரவேண்டும்.*

*- இந்த அம்சங்கள் புதிய சட்டங்களில் உள்ளடக்கப்படுதல் அவசியம்.*

'இடப்பெயர்வு என்பது பாதிக்கப்படும் மக்களுக்குப் பேரிடர் அனுபவத்தை' (traumatic experience) ஏற்படுத்தும் ஒரு நிகழ்வு என்பன அரசு முதலில் உணர வேண்டும். இடம் பெயர்க்கப்பட்டவர் களின் பிரச்சினையை ஏதோ கொஞ்சம் இழப்பீடு வழங்குவது, ஒரு புதிய வீடு (house) கட்டித்தருவது என்கிற ரீதியில் அணுகாமல் முழுமையாக ஒரு புதிய ''இல்லம்'' (home) ஒன்றை, புதிய வாழ்வு ஒன்றை உருவாக்கும் முயற்சியாக அணுக வேண்டும். ''திட்டங்களால் பாதிக்கப்பட்டவர்களின்'' வாழ்வு முன்பிருந்ததைக் காட்டிலும் சிறப்பாக அமைதல் என்பதை அரசு தன் கொள்கையாக்க வேண்டும். *''20 ஆண்டுகளுக்கும் மேலாக வசிக்கிற குடிசைப் பகுதிகள் மற்றும் குடியிருப்புகளைப் பொதுநலன்கள் என்றபெயரில் நீக்கக் கூடாது. நீக்க வேண்டிய தவிர்க்க இயலாத சூழலில் மீண்டும் தரமான குடியிருப்பு அமைப்பதற்கு அதிகபட்சம் முன்னுரிமை அளிக்க வேண்டும்''* என்று உச்ச நீதிமன்றம் 'ஓல்கா டெல்லிஸ் எதிர் மும்மை முனிசிபல் கார்ப்பரேஷன்' வழக்கில் (1985 2 Sup SCR 51 India 1987 LRC const 351. Sc of India) தீர்ப்பளித்துள்ளதை அரசு மறந்துவிடக் கூடாது.

# இணைப்பு 1

## சென்னை குடிசைப் பகுதிகளில் தீ விபத்துகள் மற்றும் இடம் பெயர்த்துக் குடியமர்த்தப்பட்டவர்களின் வாழ்நிலை

## உண்மையறியும் குழு அறிக்கை

சென்னை, ஆகஸ்ட் 7, 2009.

2009-ம் வருடம் ஜுன், ஜுலை மாதங்களில் சென்னையில் பல்வேறு இடங்களிலுள்ள குடிசைப் பகுதிகள் திடீர் திடீரென மர்ம மான முறையில் தீப்பிடித்து, நூற்றுக்கணக்கில் குடிசைகள் எரிந்துள்ள செய்தி தொடர்ந்து பத்திரிக்கைகளில் வந்து கொண்டுள்ளன. இவ்வாறு எரிந்த குடிசைகளை மீண்டும் கட்டிக் கொடுப்பது முதலான அம்சங்களில் அரசு எந்த உதவியும் செய்வதில்லை எனவும், பாதிக்கப் பட்டவர்களை தொலைதூரத்தில் சென்னைப் புறநகர் பகுதிகளில் குடியமர்த்துவதற்கு முயற்சிக்கப்படுகிறது எனவும் அப்பகுதிகளைச் சேர்ந்தவர்களிடமிருந்து புகார்கள் வந்தன. அதே நேரத்தில் ஏற்கனவே இதுபோன்ற காரணங்களுக்காகவும், வளர்ச்சிப் பணிகளுக்காகவும், நகர மத்தியிலிருந்த குடிசை வாழ் மக்கள் இடம் பெயர்க்கப்பட்டு குடியமர்த்தப்பட்ட பகுதிகள் மனிதர்கள் வாழ்வதற்கான குறைந்தபட்ச தகுதிகளும் கூட இல்லாதவைகளாக உள்ளன என்கிற தகவல்களும் கிடைத்தன. மக்களின் வாழ்வுரிமை குறித்த கரிசனமுள்ள குடிமக்கள் என்கிற வகையில் இது குறித்து உண்மைகளை நேரில் கண்டறிந்து அறிக்கை அளிப்பதற்கென மனித உரிமைப்பணிகளில் ஈடுபட்டுள்ளோர், மருத்துவர்கள், வழக்குரைஞர்கள், பத்திரிகையாளர்கள், பேராசிரியர்கள் என 12 பேர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.



இக்குழு கீழ்க்கண்டவாறு இரு தனித்தனிக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒரு குழு எரிந்த சில குடிசைப் பகுதிகளையும், இன்னொரு குழு ஏற்கனவே குடிசைவாழ் மக்கள் இடம் பெயர்த்துக் குடியமர்த்தப்பட்ட சில பகுதிகளையும் சென்ற ஜுலை 19,20,21,23 (2009) ஆகிய நாட்களில் நேரில் சென்று பார்வையிட்டது.

**(அ) தீ விபத்தில் குடிசைகள் எரிந்து சாம்பலான பகுதிகளுக்குச் சென்றோர்:**

பேரா. அ. மார்க்ஸ், மாநில அமைப்பாளர், PUHR.

மதுமிதா தத்தா, ஆய்வாளர், சமூக ஆர்வலர், வெட்டிவேர் குழு.

நித்யராமன், ஆய்வாளர்.

கிருஷ்ணா ஆனந்த், வழக்குரைஞர்.

அரவிந்தன், மருத்துவர்.

கேரன், உதவிப் பேராசிரியர், MIDS.

**(ஆ) இடம் பெயர்த்துக் குடியமர்த்தப்பட்ட பகுதிகளுக்குச் சென்றோர்:**

கோ. சுகுமாரன், மக்கள் உரிமைக் கூட்டமைப்பு, புதுச்சேரி

ஸ்ரீநிவாசன், சமூக ஆர்வலர்.

பேரா. பெர்னாட் டி சாமி, லயோலா கல்லூரி.

பீர் முஹம்மது, பத்திரிகையாளர்.

ஜெயக்குமார், வழக்குரைஞர்.

குருமூர்த்தி, மருத்துவர்.

**உண்மையறியும் குழு அமைப்பாளர்கள் :**

சதீஷ், வெங்கட், இசையரசு, சீனு, பிரேம், ஸ்ரீராம், அருண்சோரி, ஆரோக்கியம், ஜெனிடாலி.

இரு குழுவினரும் தாம் நேரில் கண்டு சேகரித்த தகவல்களை கூடித் தொகுத்து, இரு பகுதிகளாக இவ்வறிக்கை இங்கு முன் வைக்கப்படுகிறது.

# பகுதி 1

## சென்னை குடிசைப் பகுதிகளில் சமீபத்தில் ஏற்பட்டு வரும் தீ விபத்துக் குறித்த உண்மைகள்

எமது குழு வியாசர்பாடி, ஜீவா இரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள பி.எஸ்.மூர்த்தி நகர், வியாசர்பாடி பழைய காவல் நிலையத்திற்குப் பின்புறம் உள்ள பி.கே. புரம் மற்றும் சேத்துப் பட்டிலுள்ள ஷெனாய் நகர்-அவ்வைபுரம், நந்தம்பாக்கம் எம்.ஜி.ஆர். நகர், நந்தம்பாக்கம் எம்.ஜி.ஆர் நகர் விரிவு, கொருக்குப்பேட்டை ஜே.ஜே. நகர் ஆகிய பகுதிகளுக்குச் சென்று எரிந்த குடிசைப் பகுதிகளைப் பார்வையிட்டது. பாதிக்கப்பட்ட மக்கள் பலரையும் சந்தித்துப்பேசி அவர்களது கூற்றுக்களைப் பதிவு செய்துகொண்டது. பாதிக்கப்பட்ட வியாசர்பாடிப் பகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.மகேந்திரன் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி) மற்றும் நந்தம் பாக்கம் கவுன்சிலர் திரு. பெருமாள் சாமி (அதிமுக) ஆகியோரது கருத்துகளையும் குறித்துக் கொண்டது. வியாசர்பாடி காவல் நிலையத்திற்குச் சென்ற போது அங்கே அதிகாரிகள் யாரும் இல்லை. காவலர்களிடம் மட்டுமே பேச முடிந்தது. எனினும் வியாசர்பாடி பகுதி காவல்துறை துணை ஆணையர் திரு. முரளி, ஆய்வாளர் திரு.ஈஸ்வரன் ஆகியோரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொண்டது. கிண்டி, வியாசர்பாடி மற்றும் எஸ்.எம். நகர் ஆகிய இடங்களிலுள்ள தீயணைப்பு நிலையங்களுக்கும் சென்று அங்கிருந்த நிலையப் பொறுப்பாளர்கள் திரு. பி. கிருஷ்ணமூர்த்தி, திரு.ராமையா, திரு. எம்.பி. கோபால் ஆகியோரைச் சந்தித்து பதிவேட்டிலுள்ள பதிவுகளை அறிந்து கொண்டது.

முன்னதாக எம் குழுவைச் சேர்ந்தோர் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி (TNUDF) உதவி மேலாளராக உள்ள திரு. பிரதீப்பைச் சந்தித்து உயர்த்தப்பட்ட அதிவேக சாலைத்திட்டம் குறித்துச் சேகரித்திருந்த தகவல்களும் பயன்படுத்தப்பட்டன.

### I. மூர்த்தி நகர்

மூர்த்தி நகரில் ரயில்வே கீழ்ப்பாலத்திற்கு அருகிலுள்ள சாலை யோரத்தில் சாலைக்கும், இடுகாட்டிற்கும் இடைப்பட்ட குறுகிய பகுதியில் 320 குடிசை வீடுகள் உள்ளன. 1994ல் இப்பகுதியிலிருந்த



குடிசை மாற்று வாரியக் கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்து ஒன்பது பேர் மாண்டனர். வாழத் தகுதியற்றதாக மாறிவிட்ட அக்கட்டிடத்தில் சட்ட பூர்வமான உரிமைகளுடன் குடியிருந்த சுமார் 100 பேர்களுக்கு உடனடியாக அரசு எந்த மாற்று ஏற்பாட்டையும் செய்து தராததால் அவர்கள் இப்பகுதியில் குடிசைகளை அமைத்துக் கொண்டு தங்கினர். கடந்த 15 ஆண்டுகளில் மேலும் பலர் வந்து குடியேறி அந்தச் சிறிய பகுதியில் இப்போது 320 குடிசைகள் உள்ளன. ரயில் பாதைக்கு அருகாக உள்ள ஒரு குடி தண்ணீர்க் குழாய் தவிர வேறு எந்த வசதிகளும் அங்கு கிடையாது. பெரும்பாலும் ஆட்டுத் தொட்டி வேலைகளும், கூலி வேலைகளும் செய்கிற இவர்களில் 90 சதத்தினர் தலித்கள்.

கடந்த 15 ஆண்டுகளாக, இடிந்த குடிசை மாற்று வாரியக் கட்டிடத்தை மீண்டும் கட்டித் தருவதற்கு அரசு எந்த முயற்சியையும் செய்யவில்லை. இதில் சட்டபூர்வ உரிமையுடன் குடியிருந்த இம்மக்கள் போதிய நீர், கழிப்பிடம் முதலான எவ்வித வசதிகளும் இல்லாத, போக்குவரத்து மிக்க சாலைக்கும் இடுகாட்டிற்கும் இடையிலுள்ள பகுதியில் இத்தனை ஆண்டுகாலம் நெருக்கியடித்துக் கொண்டு வாழ்ந்தது குறித்து அரசு எள்ளளவும் கவலைப்படவில்லை. மழைக் காலங்களில் தாழ்வான இப்பகுதி வெள்ளத்தால் மூழ்கடிக்கப்படும். அருகிலுள்ள இடுகாடு மற்றும் ரயில் பாதையை ஒட்டிய பகுதியிலிருந்து பாம்புகள் வருவதுமுண்டு. அவ்வப்போது கோடை காலங்களில் சிறிய அளவில் தீ விபத்துகளும் நடப்பதுண்டு.

இதற்கிடையில் அப்பகுதிக்கு அருகாக மேம்பாலம் கட்டுகிற திட்டம் ஒன்றை அரசு உருவாக்கியது. மூர்த்தி நகரை ஒட்டி சாலையை அகலப்படுத்தப் போவதாகவும், அங்கு வசிக்கும் மக்கள் வேறு எங்கேனும் இடம் பார்த்துக் கொண்டு போகுமாறும் அவ்வப்போது அரசதிகாரிகள் வந்து வற்புறுத்திச் சென்றுள்ளனர். தமது இடிந்து போன குடிசை மாற்று வாரியக் கட்டிடத்தை உடனடியாகப் புதுப்பித் துத் தர வேண்டுமெனவும் அப்படிச் செய்யாமல் தாம் அங்கிருந்து செல்ல இயலாது எனவும் மக்கள் கூறியுள்ளனர். பழைய கட்டிடம் இருந்த இடத்தில் அதே அளவு புதிய கட்டிடம் கட்டினால் கூட 100 குடும்பங்களை மட்டுமே அங்கு குடியமர்த்த இயலும். மீதியுள்ள 220 குடும்பங்களைக் குடியமர்த்த அரசிடம் திட்டமில்லை. சுமார் 1/2 கி.மீ. தொலைவில் வேறோரிடத்தைப் பரிந்துரைத்த போது அம்மக்கள் அதை ஏற்கவில்லை என்கிறார் சட்டமன்ற உறுப்பினர் மகேந்திரன். மகேந்திரனின் அலுவலகத்திற்கு அருகிலுள்ள ஏரிக்கரை என்கிற அந்த இடத்தில் ஏற்கனவே 425 குடிசைகள் உள்ளன. எல்லாவற்றையும்

நீக்கிவிட்டு மூர்த்திநகரிலுள்ள 320 குடும்பங்கள் + மேற்குறிப்பிட்ட 425 குடும்பங்கள் என 745 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துத் தரப்படும் என ஆறுமாதங்களுக்கு முன் மூர்த்தி நகர் மக்களிடம் தான் பேசிய போது அவர்கள் அதை மறுத்துவிட்டனர் என்றார் மகேந்திரன். தவிரவும் 100 குடும்பங்கள் வசிக்கத்தக்க அளவிற்கு குடிசை மாற்று வாரியக் கட்டிடத்தைப் புதிதாகக் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ள தாகவும் உடனடியாக வேலை துவங்கப்பட இருப்பதாகவும் மகேந்திரன் கூறினார். தீ விபத்து நடந்து முடிந்தபின் இது குறித்த அறிவிப்புப் பலகை ஒன்றை அரசு அவசரமாக அங்கு நட்டுள்ளது.

சென்ற 13 ந்தேதி (13.07.09) திங்கட்கிழமை அன்று அரசுத் தரப்பில் அப்பகுதி மக்களை வைத்து கூட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்தைக் காரணம் காட்டி அப்பகுதியிலுள்ள குடிசைகளைக் காலி செய்யுமாறு அவர்களிடம் சொன்னபோது மக்கள் அதை உறுதியாக மறுத்துள்ளனர். மாற்று ஏற்பாடு செய்யாமல் அங்கிருந்து நகர இயலாது எனக் கூறியுள்ளனர். ஒரு சில நாட்களுக்குள் காலி செய்யுமாறு எச்சரித்துவிட்டு அரசதிகாரிகள் கூட்டத்தை முடித்துள்ளனர்.

அடுத்த மூன்றாம் நாள் (16.07.09) வியாழன் மாலை சுமார் 4.15 மணிக்குக் குடிசைகள் திடிரென மர்மமான முறையில் தீப்பற்றி எரியத் தொடங்கியுள்ளன. எங்கிருந்து தீ தொடங்கிப் பரவியது எனச் சொல்ல இயலாத நிலையில் கிட்டதட்ட ஒரே நேரத்தில் தீ எங்கும் கொழுந்துவிட்டு எரிந்துள்ளது. பெரும்பாலும் ஓலைக்குடிசைகளான அப்பகுதியிலிருந்த சுமார் 55 வீடுகள் அடுத்த அரை மணி நேரத்திற்குள், தீயணைப்புப் படை வருமுன்னதாகவே எரிந்து சாம்பலாகிவிட்டன. அவ்வீடுகளில் வசித்தோர் கட்டிய துணிகளோடு வெளியே ஓடி வந்துள்ளனர். எந்தப் பொருளையும் அவர்களால் காப்பாற்ற இயலவில்லை. குழந்தைகளின் பாடநூல்கள், சீருடைகள், குடும்ப அட்டை முதலான முக்கிய ஆவணங்கள், குறைந்தபட்சமாக பீரோ, சைக்கிள், தொலைக்காட்சி முதலான பொருட்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாகி விட்டன. இழப்பீடாகத் தற்போது குடும்பம் ஒன்றுக்கு ரூ.2000 மட்டும் அரசு வழங்கியுள்ளது.

## II. வியாசர்பாடி பி.கே. புரம் மற்றும் புதுநகர்

வியாசர்பாடி பழைய காவல் நிலையத்திற்குப் பின்புறமுள்ள பி. கல்யாணபுரம் பகுதியில் சென்ற ஜூன் 26 அன்று மதியம் 1.30 மணி அளவில் திடீரென தீப்பிடித்து குடிசைகள் எரிந்ததில் சுமார் 110 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பதியிலுள்ள ஒரு சில வீடுகள்



கான்கிரீட் கட்டிடங்களாக இருப்பதால் அவை மட்டும் தீயிலிருந்து தப்பியுள்ளன. ஒவ்வொரு வீட்டிலும் ஒண்டுக் குடித்தனமாக பல குடும்பங்கள் இருந்ததால் எரிந்த வீடுகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் தீயால் வீடிழந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை அதிகம். வழக்கம்போல் குடும்பத்திற்கு ரூ. 2000 என்பது தவிர வேறெந்த உதவியையும் அரசு செய்யவில்லை. ‘ஜவஹர்லால் நேரு நகர்ப்புற வீடு புதுப்பிக்கும் திட்டத்தின் (JNNURM) கீழ் புதிதாக வீடு கட்டிக் கொள்ள ரூ. 1,30,000 தருவதாக அரசு தரப்பில் கூறப்படுகிறது. ஆனால் பயனாளிகள் ஒவ்வொருவரும் ரூ. 13,000 முன்னதாகக் கட்ட வேண்டும். தங்களால் அது சாத்தியமில்லை என அம்மக்கள் கூறினர். இத்தகைய திட்டம் ஒன்று உள்ளதை சட்டமன்ற உறுப்பினரும் ஏற்றுக் கொண்டார். முன்பணம் கட்ட இயலாதவர்கள் உடலுழைப்பின் மூலம் இந்தத் தொகையை ஈடுசெய்ய வாய்ப்புண்டா என நாங்கள் வினவியபோது அதற்கிடமில்லை எனக் கூறினார். தவிரவும் JNNURM திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இவ்வுதவி வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு மட்டுமே கிடைக்கும். குடியிருந்தவர்களுக்கு கிடைக்க வாய்ப்பில்லை.

இப்பகுதிக்குச் சற்றுத் தள்ளி அமைந்துள்ள பி.கே. புரம், பகுதியில் இருந்த 18 குடிசைகள் முற்றிலும் எரிந்து சாம்பலாகியுள்ளன. இடிந்துபோன பழைய காவல்நிலையத்திற்கு அருகில் அமைந்த காவல்துறை குடியிருப்பிற்கு ஊடாகப் போடப்பட்டிருந்த குடிசைகள் இவை. அருகில் கட்டப்பட உள்ள மேம்பாலத்திற்காக இந்தக் குடிசைகளை அப்பகுதியிலிருந்து நீக்கப் போவதாக அரசு தரப்பில் கூறப்பட்டிருந்தது. எதுவரை குடிசைகள் இடிக்கப்படும் என்பதை அளந்து அவர்கள் குறியிட்டுச் சென்றுள்ளனர். ஆங்காங்கு இத்தகைய குறிகள் இருந்ததை நாங்கள் பார்த்தோம். 60 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட உள்ள இம்மேம்பாலத்திற்கு அரசு ஒப்புதலிளித்து டெண்டர் விடும் நிலையில் உள்ளதாகவும், இந்தக் குடும்பங்களுக்கும் துரைப்பாக்கம் கண்ணகி நகரில் மாற்று இடம் அளிக்கப்படும் எனவும் மகேந்திரன் குறிப்பிட்டார். ‘‘எந்த மாற்று செய்தாலும் அதை ஏற்றுக் கொள்ளாமல் போவதுதான் இந்த ஜனங்க கெட்டுப் போறதுக்குக் காரணம்’’ எனவும் அவர் அலுத்துக் கொண்டார்.

## III. சேத்துப்பட்டு ஷெனாய் நகர் அவ்வைபுரம்

பச்சையப்பன் கல்லூரி பின்புறம் கூவம் நதியை ஒட்டி கட்டப்பட்டிருந்த சுமார் 200 குடிசைகள் சென்ற மே 25 அன்று மாலை 4.15 மணிக்கு திடீரென தீப்பிடித்து எரிந்தன. அமைச்சர் பரிதி இனம் வழுதியின் தொகுதியில் அமைந்துள்ளது இப்பகுதி. இங்கும் ஒரு

மேம்பாலம் கட்டுவதற்காக ஏற்கனவே அளந்து குறியிடப்பட்டுள்ள தென அங்குள்ள மக்கள் கூறினர். இன்று கழிவு நீர் சாக்கடையாக மாறிப்போயுள்ள கூவம் நதி ஓரத்தில் வெள்ள ஆபத்து மிக்க, எந்த வசதியும் இல்லாத சுகாதாரக் கேடான சூழலில் 20 ஆண்டுகளாக குடிசை கட்டி வசிக்கும் இம்மக்களில் பெரும்பாலானோர் கூலி வேலை, கொத்து வேலை, பெயின்டிங் செய்பவர்கள். குடிசைகளைக் காலி செய்யுமாறு அரசுத் தரப்பில் இவர்கள் அடிக்கடி வற்புறுத்தப் பட்டுள்ளனர். இறுதியில் சென்ற மே 22 அன்று அதிகாரிகள் சிலர் வந்து அடுத்த மூன்று நாட்களுக்குள் காலி செய்ய வேண்டுமென வற்புறுத்திச் சென்றுள்ளனர். மக்கள் மறுத்துள்ளனர். அடுத்த மூன்றாம் நாள் குடிசைகள் தீப்பற்றி எரிந்துள்ளன.

வழக்கம்போல பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் 2000 ரூபாய் வழங்கியதுடன் அரசு ஒதுங்கிக் கொண்டது. அமைச்சரும் மேயரும் வந்து பார்த்துவிட்டுச் சென்றதோடு சரி. தமது எரிந்த வீடுகளிலேயே ஃப்ளெக்ஸ் போர்டுகளைக் கூரையாக அமைத்துக் கொண்டு இம்மக்கள் வெயிலில் வாடுகின்றனர்.

## IV. நந்தம்பாக்கம் எம்.ஜி.ஆர். நகர் & எம்.ஜி.ஆர். நகர் விரிவு

கிண்டி - போரூர் சாலையில் உள்ள நந்தம்பாக்கம் அடையாறு பாலத்தை ஒட்டி வலப்புறம் கீழிறங்கினால் ‘எம்.ஜி.ஆர். நகர் விரிவு’ என்னும் பெயருள்ள பகுதி சாலையை ஒட்டி அமைந்திருந்தது. சாலைக்கு இணையாக அடையாறு ஆற்றை நோக்கி ஓடிச்செல்லும் சாக்கடைக்கும் எம்.ஜி.ஆர் நகரை நோக்கிச் செல்லும் சாலைக்கும் இடையிலுள்ள குறுகிய பகுதியில் நெடுஞ்சாலைக்கு இணையாக அமைந்திருந்த இக்குடிசைப் பகுதி எந்த அடிப்படை வசதிகளும் இல்லாத ஒன்று. ஒரே ஒரு கைபம்ப்பும் ஒரு சின்டெக்ஸ் தொட்டியில் நிரப்பப்பட்ட நீரும் மட்டுமே அவர்களது நீர்த்தேவைகளைப் பூர்த்தி செய்திருந்தன. நெருக்கி அடித்து அமைக்கப்பட்டிருந்த இந்த 106 வீடுகளும் திடீரென சென்ற ஜூன் 15 இரவு 1.30 மணிக்குத் தீப்பிடித்து எரிந்தன. அன்று காலை 10 மணிக்கு அருகிலுள்ள எம்.ஜி.ஆர். நகரில் தீப்பிடித்து 3 வீடுகள் எரிந்தது குறிப்பிடத்தக்கது. வழக்கம்போல பாதிக்கப்பட்டவர்களுக்கு 2000 ரூபாய் கொடுத்ததோடு சரி. தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான தா.மோ. அன்பரசன் வந்து பார்த்துவிட்டுச் சென்றிருக்கிறார். இப்பகுதியில் வசித்திருந்தவர்கள் பெரும்பாலும் கூலி வேலை செய்வதையும், திருஷ்டி பொம்மை விற்பதையும் தொழிலாகக் கொண்டிருந்தனர்.



இங்கும் பாலம் வருகிறது என்கிற பேச்சு இருந்துள்ளது. யாரும் இவர்களை காலி பண்ண வேண்டும் என மிரட்டவில்லை என்ற போதிலும் தீப்பற்றி எரிந்த அடுத்த ஒருவாரத்தில் அப்பகுதியில் இடிபாடுகளை நீக்கி முள்வேலி அமைத்து, இங்கே குடிசைகள் கட்டுவதோ ஆக்கிரமிப்புச் செய்வதோ கூடாது என அறிவிப்புப் பலகையும் நடப்பட்டது. நாங்கள் சென்றபோது முள்வேலி அமைக்கும் பணி முடியும் தருவாயிலிருந்தது. தவிரவும் ஒரே வாரத் தில் பெருங்களத்தூர் கன்னடபாளையம் அருகில் எருமையூர் கூட்டு ரோடு செல்லும் வழியில் ஆள்நடமாட்டமில்லாத ஒரு பகுதியில் குடும்பத்துக்கு ஒரு சென்ட் நிலம் கொடுத்து கட்டாயமாக இம்மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். எவ்வித அடிப்படை வசதியும் பாதுகாப்பும் இல்லாத, மனிதர் வாழத் தகுதியற்ற பகுதி அது. நாங்கள் எரிந்த பகுதிக்குச் சென்றபோது நான்குபேர் அப்பகுதியில் நின்று முள்வேலிக்கப்பால் உள்ள தம் பழைய வீடுகள் இருந்த இடங்களை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தனர். இங்கே எதற்காக வந்தீர்கள் என்று கேட்டபோது, ‘‘சும்மா, வாழ்ந்த இடத்தைப் பார்த்துவிட்டுப் போகலாம்னு வந்தோம்’’ எனப் பதில் வந்தது.

இங்கிருந்து சுமார் 300 மீட்டர் தூரம் அடையாறு ஆற்றங்கரை ஓரமாக நடந்தால் எம்.ஜி.ஆர். நகர் வந்துவிடுகிறது. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் அடையாற்றைச் சீர்திருத்துவதற்காகக் கொட்டி யிருந்த மண்ணை போரூர் ராமச்சந்திரா மருத்துவமனை கட்டும்போது அள்ளிச் சென்றதாகவும் இதனால் காலியான ஆற்றங்கரையில் தாம் குடிசை போட்டு அப்போது முதல் வாழ்ந்து வருவதாகவும் அம்மக்கள் கூறினர். பட்டா இல்லாத போதும் அரசு நிலத்தைப் பயன்படுத்து வோருக்கு விதிக்கும் தண்டத்தீர்வை ‘பீ மெமோ’ (B Memo) அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. இங்கு வசிப்போர் பெரும்பாலும் கொத்து வேலை மற்றும் சித்தாள் வேலை செய்கின்றனர்.

இங்கு சென்ற ஜூன் 15 ம்தேதி காலை 10 மணி அளவில் தீப்பிடித்து 3 வீடுகள் எரிந்துள்ளன. அன்று இரவுதான் எம்.ஜி.ஆர். நகர் விரிவிலிருந்த 106 வீடுகள் எரிந்து சாம்பலாயின. மீண்டும் 22ம் தேதி மதியம் 1 மணி அளவில் பற்றிய தீயில் இங்கிருந்த 12 வீடுகள் சாம்பலாயின. வழக்கம்போல் அரசு 2000 ரூபாய் பாதிக்கப்பட்டவர் களுக்குக் கொடுத்தத்தோடு சரி.

தொடர்ந்து இப்படி தீப்பற்றி எரிவதைக் கண்டித்து அப்பகுதி மக்கள் அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த கவுன்சிலர் திரு. பெருமாள்சாமி தலைமையில் 22ம் தேதி அன்று மதியம் போரூர்

சாலையில் மறியல் செய்தபோது காவல்துறையினர் பெருமாள்சாமி உட்பட 15 பேரைக் கைது செய்து அவர்களைக் கலைத்துள்ளனர். கைதானோர் 9 நாட்கள் சிறையிலிருந்து தற்போது பிணையில் விடுதலையாகியுள்ளனர்.

இப்பகுதியில் சென்ற ஆறு மாதங்களுக்கு முன்பு தாசில்தார் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் வந்து அளந்து கோடுகள் போட்ட தோடு கற்கள் நட்டும் சென்றுள்ளார்கள். விசாரித்த போது, இந்தப் பகுதியில் 'பிரிட்ஜ் வரப்போகுது' (அடையாறு - போரூர் எக்ஸ்பிரஸ் ஹைவே) என்றும் கல்லுக்கு மேலே உள்ளது நத்தம் புறம்போக்கு, கீழே உள்ளது ஆத்துப் புறம்போக்கு எனவும் பதிலளிக்கப்பட்டுள்ளது.

சென்ற மூன்று மாதங்களுக்கு முன்பு அடையார் பூங்கா டிரஸ்ட் சார்பில் கோட்டூர் புரத்தில் கூட்டப்பட்ட ஒரு ஆலோசனைக் கூட்டத் திற்கு இப்பகுதி மக்களும், அருகிலுள்ள பர்மா காலனி மக்களும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அதிவேக நெடுஞ்சாலை தொடர் பான ஆலோசனைக் கூட்டம் எனச் சொல்லப்பட்டுள்ளது. தாங்கள் இடம் பெயர்க்கப்படும் அச்சத்தை அம்மக்கள் கூறியதோடு காலி செய்யமாட்டோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

### V. கொருக்குப்பேட்டை ஜே.ஜே. நகர்

கொருக்குப்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து சுமார் 10 நிமிடதொலைவில் பக்கிங்ஹாம் கால்வாயை ஒட்டி சுமார் 50 மீட்டர் தொலைவில் உள்ளது ஜே.ஜே. நகர் குடிசைப்பகுதி. போக்குவரத்து மிகுந்த வணிகப்பகுதி அருகாக இக்குடிசைகள் உள்ளன. பெரும் பாலும் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ளோர், துப்புரவுத் தொழிலாளிகள், சுமை தூக்கும் தொழிலாளிகள், ரிக்ஷா ஓட்டுநர்கள் வாழும் இப்பகுதியில் சென்ற 21 & 22 இரவு 12.15 மணிக்கு ஏற்பட்ட தீயில் 52 வீடுகள் சாம்பலானதோடு அங்கு வசித்திருந்த 5 பேர் இறந்துள்ளனர். மூவர் கடும் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் உள்ளனர். தீவிபத்தில் மூன்று பேர்கள் கொல்லப்பட்ட குடிசைக்கு அடுத்துக் குடியிருந்து அதிர்ஷ்டவசமாக தப்பிக்க நேர்ந்த ஸ்ரீராம் (38) அன்று நிகழ்ந்தவற்றைக் கூறினார். வழக்கம்போல் எப்படித் தீப்பிடித்தது என யாருக்கும் தெரியவில்லை. மூன்று தீயணைப்பு எந்திரங்கள் வந்துள்ளன. அவற்றில் இரண்டு அங்கு வந்தடையும் போது இரவு மணி 1.30. தீவிரமாக வீசிய காற்றில் அதற்குள் 52 வீடுகளும் சாம்பலாயின. இரவு நேரமாகையால் தப்பி ஓடுவதற்குள் 5 பேர் இறந்துள்ளனர். ஸ்ரீராமின் பக்கத்து வீட்டுக்காரர் தமிழரசன் வீட்டில் அவரது மனைவி மேரி, குழந்தைகள் சஞ்சய், சங்கீதா ஆகிய



மூவரும் அப்போதே இறந்துள்ளனர். தமிழரசன் மருத்துவமனையில் உள்ளார். பக்கத்தில் வசித்திருந்த ஊனமுற்ற ஆனந்தசாமி தப்பிஓட இயலாமல் இறந்துள்ளார். சில வீடுகள் தள்ளி வசித்த துப்புரவுத் தொழிலாளி விஜயலட்சுமியும் தீயில் இறந்துள்ளார். இங்கு வசித்திருந்த அனைவரும் ஆதி திராவிடர் மற்றும் ஆதி ஆந்திர வகுப்புகளைச் சேர்ந்தோர் என்பது குறிப்பிடதக்கது. இரவு நேரமாகையால் போக்குவரத்து இல்லாதபோதும் தீயணைப்புப் படையினர் வர ஏன் இத்தனை தாமதம் என்பது விளங்கவில்லை.

சட்டமன்ற உறுப்பினர் சேகர் பாபு (அ.இ.அ.தி.மு.க.)வின் தொகுதி இது. 2000 ரூபாய் தவிர ஒரு வேட்டி, சேலை, 5 கிலோ அரிசி தரப்பட்டுள்ளது. நாங்கள் சென்றபோது எரிந்த வீடுகளுக்கருகில் மக்கள் வெயிலில் அமர்ந்திருந்தனர். யாரும் இவர்களைக் காலி செய்ய வேண்டும் என்றெல்லாம் வற்புறுத்தவில்லை. ஏற்கனவே போஜராஜன் நகர் பள்ளத்தாக்கில் தாங்கள் குடியிருந்ததாகவும், அங்கு ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக இங்கு குடியமர்த்தப்பட்டதாகவும் கூறினர்.

இந்த அறிக்கையை எழுதி முடித்த தருவாயில் 24 ம்தேதி விடியற் காலையில் பெரம்பூர் பொன்னுசாமி நகர் அருகே உள்ள குடிசைப் பகுதி ஒன்று எரிந்து 13 குடிசைகள் சாம்பலாகியுள்ளன. விஸ்வநாதன் (58) என்கிற ஊனமுற்ற ஒருவர் இறந்துள்ளார். டேவிட் என்கிற இன்னொரு குடிசைவாசி தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பத்திரிகைகளில் இச்செய்தி படங்களுடன் வெளியாகியுள்ளது.

இன்னொன்றையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. இராணி அண்ணா நகர், பட்டினப்பாக்கம் ஆகிய இடங்களிலுள்ள அரசு குடியிருப்புகளுக்கு நாங்கள் சென்று பார்க்க இயலவில்லை. எனினும் அங்குள்ள மக்களை மாற்று ஏற்பாடுகள் ஏதும் செய்யாமலேயே வெளியேற்றுகிற முயற்சிகள் நடப்பதாகவும் அவர்களில் சிலர் எங்களைச் சந்தித்து கூறினர்.

### எமது பார்வைகள்

1. சென்னை நகரை அழகுபடுத்தி, போக்குவரத்தை விரிவாக்கி, சிங்காரச் சென்னையாக மாற்றுவதற்கு அரசு பல திட்டங்களை தீட்டியுள்ளது. அவற்றில் சில

   1. வியாசர்பாடி - பேசின் பிரிட்ஜ் சாலையை அகலப்படுத்துதல்,

2. வியாசர்பாடி மேம்பாலம்,

3. அடையாறு மலர் மருத்துவமனை தொடங்கி ஆற்றின் மேலும், கரையை ஒட்டியும் போரூர் நந்தம்பாக்கம் பாலம் வரை அதிவேக நெடுஞ்சாலை அமைத்தல்,

4. துறைமுகம் அருகிலுள்ள போர் நினைவுச் சின்னத்திலிருந்து கூவம் நதி மேலாக மதுரவாயல் வரை அதிவேக நெடுஞ்சாலை அமைத்தல்,

5. எண்ணூர் - பேசின் பிரிட்ஜ் - வால்டாக்ஸ் ரோடு வழியாக பக்கிங்ஹாம் கால்வாய் மீது அதிவேக நெடுஞ்சாலை அமைத்தல்,

6.பறக்கும் ரயில் பாதை (MRTS)க்கு இணையாக சாலை அமைத்தல்.

இவற்றில் சில ஆலோசனைக் கட்டத்திலும் சில நடைமுறைப்படுத்தும் நிலையிலும் உள்ளன. ஒரு சில விவரங்களை இணையத்தளத்தில் (www.tnudf.com) காணலாம். இப்போது தீப்பற்றி எரிந்த பகுதிகள் பெரும்பாலும் இத்திட்டப் பகுதிகளிலேயே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் பக்கிங்ஹாம் கால்வாய், கூவம் நதி, அடையாறு ஆகியவற்றின் கரைகளிலேயே குடிசைகள் அமைந்துள்ளன. நகர மேம்பாட்டுத் திட்டங்கள் அனைத்தும் இப்பகுதிகளை ஒட்டியும், இவற்றின் ஊடாகவும் திட்டமிடப் பட்டுள்ளன. அவ்வப்போது அரசுத் தரப்பிலிருந்து காலி செய்யுமாறு இப்பகுதியினர் வற்புறுத்தப்பட்டாலும் எழுத்து மூலமாக அம்மக்களுக்கு அறிவிப்பு ஏதும் அளிக்கவில்லை. அரசின் திட்டம் குறித்த புரளிகள் மட்டுமே பரவியுள்ளன. கேள்விப்பட்ட செய்திகளின் அடிப்படையில் சென்ற மார்ச் 12, 2009 அன்று பி. கல்யாணபுரம் மக்கள் மாற்று இடம் கோரி குடிசை மாற்று வரியத்திற்கு விண்ணப்பித்த போது அதன் நிர்வாகப் பொறியாளர் இச்செய்தி உண்மையா, பொய்யா எனச் சொல்லாமல் ''பாலம் எந்தத் துறையால் கட்டப்பட உள்ளதோ அந்தத் துறைக்கு'' விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார் (ந.க.எண்.371/2/09 கோ. 3 நாள் 02.07.09). எந்தத் துறை என்பதைக் குறிப்பிட்டு எழுதக்கூட அந்த அதிகாரிக்கு நேரமில்லை.

2. தீப்பற்றி எரிந்த இடங்கள் அனைத்திலும் மக்கள் வெளியேற்றப் படுவது குறித்து நேரடியாகவும், மறைமுகமாகவும் பேச்சுக்கள் இருந்துள்ளன. சில பகுதிகளில் இன்னும் மூன்று அல்லது நான்கு



நாட்களுக்குள் காலி செய்யுமாறு எச்சரிக்கையும் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மர்மமாக, இதற்கு முன் நடைபெறாத வகையில் இப்படித் திடீரென தீப்பற்றி குடிசைகள் சாம்பலானது மக்கள் மத்தியில் பல அய்யங்களை ஏற்படுத்தியுள்ளது. திடீரென ஒரே நேரத்தில் எல்லாக் குடிசைகளும் எரிந்தன எனவும், இது சதி வேலைதான் எனவும் பகுதி மக்கள் கருதுகின்றனர். தம்மிடம் ஆதாரங்கள் எதுவும் இல்லாத போதும் இரசாயனப் பொடி ஏதோ பாவிக்கப்பட்டு தீ உண்டாக்கப்பட்டிருக்க வேண்டும் எனச் சிலர் கூறினர்.

3. ஓலைக் குடிசைகள் என்பதால் விரைவில் தீ பரவி எரிந்துள்ளது. வழக்கம்போல் எல்லாம் முடிந்த பின்பே தீயணைப்புப் படையினர் வர முடிந்துள்ளது. இரண்டு மாதங்களாக இத்தகைய தீவிபத்துகள் நடந்துவருகின்றன. முன்னதாக நடைபெற்றவற்றில், எம்.ஜி.ஆர். நகர் விரிவு தவிர பிற பகுதிகள் அனைத்திலும் பகலிலேயே குடிசைகள் எரிந்துள்ளன. உயிர்ச் சேதங்களும் இல்லை. ஆனால் சென்ற வாரத்தில் நடைபெற்ற இருவிபத்துகளில் (கொருக்குப்பேட்டை மற்றும் பெரம்பூர்) உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றில் முன்னது நள்ளிரவிலும் பின்னது அதிகாலையிலும் எல்லோரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும்போதும் நடந்துள்ளது.

4. தீயணைப்புத் துறையினரின் பதிவேடுகளில் இவ்விபத்துக்கள் அனைத்தும் காரணம் தெரியாதவை களாகவும், 'காவல்துறை புலனாய்வில் உள்ளது' என்றும் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. அதே நேரத்தில் சென்ற 18 அன்று ராமாவரத்தில் நடைபெற்ற விபத்திற்கு கேஸ் சிலிண்டர் வெடித்ததுதான் காரணம் என உறுதியாகத் தெரிந்துள்ளது எனவும் ஒரு அதிகாரி குறிப்பிட்டார். அப்படியானால் மற்றவை வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்ட தீயா எனக் கேட்டபோது நாங்கள் அதிகாரப் பூர்வமாக எதுவும் சொல்ல முடியாது, ஆனால் அதற்கு வாய்ப்புள்ளது என்று கூறினர். ஒரே நாளில் சில மணிநேர இடைவெளிகளில் அருகருகே தீப்பிடித்தது இத்தகைய ஐயத்தை ஏற்படுத்துகிறது என்று இன்னொரு அதிகாரி குறிப்பிட்டார்.

5. காவல்துறையினர் இவ்விபத்துகளை 'தற்செயலான தீ' (Accidental Fire) என்றே குறிப்பிட்டுள்ளனர். இந்த நோக்கிலிருந்து அணுகியதால் மேற்கொண்டு விசாரணை ஏதும் செய்யப்படவில்லை. இதில் சதி இருக்கலாம் என மக்கள் ஐயப்படுகின்றனரே எனக் கேட்டபோது, ''பாதிக்கப்பட்டவர்கள் அப்படித்தான் சொல்வார்கள்'' என்றார் பி. கல்யாணபுரம் காவல்நிலைய ஆய்வாளர்.

*6.* இது குறித்து சட்டமன்ற உறுப்பினர் மகேந்திரனிடம் வினவிய போது, ''அதற்கெல்லாம் வாய்ப்பில்லை. வியாசர்பாடி பகுதியில் குடிசைகளைக் காலி செய்வதற்கு 18 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு சட்டபூர்வமாகவே இதைச் செய்ய முடியும். தீ வைத்தெல்லாம் அதைச் செய்ய வேண்டியதில்லை. ஒருவேளை இதன் மூலம் இழப்பீடு பெறலாம் என்கிற நோக்கிலும் குடியிருந்தவர்களிலேயே சிலர் செய்திருக்கலாம்'' எனவும் குறிப்பிட்டார்.

*7.* பிற இயற்கை அழிவுகள் போலன்றி தீ முற்றாக அனைத்தையும் அழித்துவிடுகிறது. எப்படிப் பற்றியது என்கிற காரணங்களையும் சேர்த்தே அழித்துவிடுகிறது. குழந்தைகளின் பாடநூல்கள், சீருடைகள், குடும்ப அட்டை, வரி கட்டிய ரசீதுகள், டிரைவிங் லைசன்ஸ், ஆர்.சி.புக் முதலான அனைத்து அடிப்படை ஆவணங்களும் அழிந்துள்ளன. நகர்ப்புறம் என்பதால் கூலிவேலை செய்பவர்களாயினும் அவர்கள் வைத்திருந்த தொலைக்காட்சி, சிறு வாகனங்கள், பீரோ முதலிய அவர்களின் சொத்துக்கள் அனைத்தும் அழிந்துள்ளன. எந்தக் காலத்திலோ நிர்ணயித்த ரூ.2000 இழப்பீடு எந்த வகையிலும் போதாத ஒன்று. அமைச்சர், அரசு ஊழியர் எனச் சகல தரப்பினருக்கும் விலைவாசியுடன் ஊதியமும் ஏறும்போது இந்த இழப்பீட்டுத் தொகையை அரசு மாற்றாமல் வைத்திருப்பது பெரும் அநீதி. முதல் ஒன்றிரண்டு நாட்களுக்கு மட்டுமே உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. தமக்குச் சென்னையில் வீட்டுமனைகள் வேண்டும் எனக் கூசாமல் கேட்கிற நமது சட்டமன்ற உறுப்பினர்களும் இது குறித்தெல்லாம் அக்கறைப்படுவதில்லை.

*8.* இதுபோன்ற விபத்துகள், சாதி மதக் கலவரங்கள் முதலியவற்றில் பாதிக்கப்படுவது குழந்தைகள், அப்புறம் பெண்கள். இப்பகுதிகளிலும் அதுதான் நிகழ்ந்துள்ளது. மூர்த்தி நகரில் வெறும் துண்டுடன் ஒரு சிறுவன் நின்றிருந்தான். உடை, புத்தகங்கள் இல்லாமல் பிள்ளைகள் பள்ளி செல்லவில்லை. கூரையில்லாத இருப்பிடங்களில், காற்று வீசும் இக்காலத்தில் பெண்கள் சமைப்பதற்குச் சிரமப்படுகின்றனர்.

*9.* கட்டிய துணியுடன் எல்லாவற்றையும் இழந்து நிற்கும் இம்மக்கள் மீண்டும் கூரை அமைத்துக் கொள்ள வழியின்றி பழைய ஃப்ளெக்ஸி போர்டுகளை கூரை போலக் கவிழ்த்துக் கொண்டு வெயிலில் வாடுகின்றனர். இரவில் மின்சாரமும் கிடையாது. கடும் வெயிலில் கூரையின்றி வாழ நேர்ந்துள்ளது மிகப் பெரிய அவலம். இன்னும் ஒரு மாதத்தில் மழை தொடங்கினால் இவர்கள் என்ன



செய்வார்கள் என்பதை கற்பனை செய்யவும் இயலவில்லை. ஆட்டோ ஓட்டிக் கொண்டிருந்தவர் களுக்கு டிரைவிங் லைசன்ஸ், ஆர்.சி.புக் முதலியவை இல்லாமல் தொழில் செய்ய இயலாதநிலை. இத்தகைய ஆவணங்கள் இல்லாமல் வாகனங்கள் ஓட்டும்போது காவல்துறை தொல்லை வேறு.

*10.* அரசு தன் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து வெளிப்படையாக இல்லை. மக்கள் புரளிகளால் அச்சமூட்டப்படுகின்றனர். தொடக்கத்தில் இடம் பெயரக்கூடாது என அவர்கள் நினைத்த போதும் இந்த அச்சத்தின் விளைவாக, காலப்போக்கில், சரி ஏதாவது பட்டாவுடன் நிரந்தரமாக இடம் கொடுத்தால் போய் விடலாம் என்கிற எண்ணத்திற்குத் தள்ளப்பட்டுவிடுகின்றனர். அப்படியும் உறுதியாக இருப்பவர்கள் தீ விபத்திற்குப் பிந்திய சூழலில் தம் உறுதியை இழந்துவிடுகின்றனர். நாங்கள் சந்தித்த பலரும் அரசாங்கத்தை எதிர்த்து என்ன பண்ணுவது, எங்காவதுபோகச் சொன்னால் போகவேண்டியது தான் என்றே கூறினர். போகின்ற இடங்களில் வசதிகள் இருக்குமா, வேலைக்கும், பிள்ளைகளின் படிப்புக்கும் என்ன செய்வீர்கள் என்று கேட்டால் அவர்களிடம் பதிலில்லை. இத்தகைய மனநிலைக்குத் தூண்டும் நோக்கிலேயே விபத்துக்குப் பின் வழக்கமாகச் செய்கிற அடிப்படை உதவிகளையும் கூட அரசு செய்யாமலிருக்கிறது.

*11.* இம்மக்கள் அனைவரும் கூலிவேலை செய்வோர், உதிரித் தொழிலாளிகள், இவர்களுக்கு என அமைப்புகள் ஏதுமில்லை. எந்த அரசியல் கட்சியும் இவர்கள் பிரச்சினையில் உண்மையான அக்கறை செலுத்துவதில்லை. நகர்ப்புறத்தில் பெரும்பான்மையான வாக்கு வங்கி மத்திய தர வர்க்கமாகவும் அமைப்பாகத் திரட்டப்பட்டவர்களாகவும் இருப்பதால், மத்திய தர வர்க்கத்தின் எதிர்பார்ப்பாகிய 'வளர்ச்சி' என்கிற கருத்தாக்கத்திற்கே அரசியல்வாதிகள் முன்னுரிமை அளிக்கின்றனர். எனவே வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமைந்த சேரி மக்களைத் தூக்கி எறியப்பட வேண்டிய குப்பைகளாகவே (Disposable Items) கருதுகின்றனர். நகரைத் தூய்மை செய்தல், அழகுபடுத்துதல் என்பன இந்தக் குடிசைகளைக் காலி செய்வதிலிருந்தே தொடங்குகிறது. இம்மக்கள் மத்தியில் செயல்படும் தொண்டு நிறுவனங்கள் தீப்பிடித்தால் சில மூட்டை அரிசி விநியோகிப்பது என்கிற ரீதியில் இவர்களை உதவிகளை எதிர்பார்த்து நிற்பவர்களாகவே ஆக்கியுள்ளன. பி.கே. புரம் தீவிபத்து நடந்த இடத்தில் 15 தொண்டு நிறுவனங்கள் செயல்படுகின்றன.

*12.* பாதிக்கப்பட்ட மக்களில் பெரும்பாலோர் தலித்கள். பிறரும் அவர்களையொத்த சாதியினரே.

*13.* கல்வி அறிவு வாய்க்கப் பெறாத இம்மக்கள் வழக்கம்போல் தம்மைப் பாதிக்கிற அம்சங்கள் குறித்து எந்தத் தகவலும் அற்றவர்களாக உள்ளர். தம்மிடம் வந்து பேசிய அரசு அதிகாரிகள் குறித்த விவரங்கள், அளந்து கல் நட்டது எந்த அரசுத்துறையினர், காலிசெய்யச் சொல்லிப் போடப்பட்ட கூட்டம் என்று நடந்தது என்பது குறித்த விவரங்கள் எதுவும் அவர்களிடம் இல்லை. இதுவே இவர்களை இடம் பெயர்க்கும் நோக்குடன் செயல்படுபவர்களின் பலமாகிவிடுகிறது. இவர்கள் மத்தியில் பணிபுரியும் இயக்கத்தினர் கவனம் கொள்ள வேண்டிய அம்சம் இது.

## கோரிக்கைகள்

*1.* தீ விபத்து நடந்த இடங்களில் தீப்பிடிக்காத வீடுகளை அமைக்க அரசு போர்க்கால துரிதத்துடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வீடுகள் 'ஆஸ்பெஸ்டாஸ்' பயன்படுத்தப் படாமல் கான்கிரீட் கூறைகளுடன் அமைக்கப்பட வேண்டும். இறந்துபோன ஒவ்வொரு வருக்கும் தலா ரூ. 10 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும். அவர்கள் குடும்பத்தில் ஒருவருக்கு நிரந்தர வேலை வாய்ப்பிற்கு அரசு உத்தரவாதமளிக்க வேண்டும்.

*2.* வளர்ச்சி நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ள இடங்களிலேயே இத்தகைய தீ விபத்துகள் நடந்துள்ளதால் இவை குறித்துத் தனியான விசாரணை ஆணையம் ஒன்று உடனடியாக அமைக்க வேண்டும்.

*3.* சென்னை நகரில் திட்டமிடப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டங்கள், இதனால் ஏற்பட உள்ள பாதிப்புகள் மற்றும் பாதிக்கப்படுவோர் குறித்த மதிப்பீடு, அவர்களுக்கான மாற்றுத் திட்டங்கள் ஆகியன குறித்த வெள்ளை அறிக்கை ஒன்றை அரசு உடனடியாக வெளியிட வேண்டும்.

*4.* தீ விபத்திற்குப் பின் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், இனி இத்தகைய விபத்துக்கள் ஏற்படாமலிருக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் ஆகியவை குறித்தும் அரசு இன்னொரு வெள்ளை அறிக்கை அளிக்க வேண்டும். இத்தகைய அறிக்கைகள் அளிக்கப்பட்டு அவற்றின் மீது பொது விவாதம் ஏற்படுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அடுத்த ஓராண்டிற்கு இடப் பெயர்வுகள் செய்யக் கூடாது



என அரசு ஒரு அவசரச் சட்டம் இயற்ற வேண்டும்.

*5.* தீ விபத்து நடந்தால் உடனடியாக அளிக்கும் உதவித் தொகை ரூ. *20,000* ஆக உயர்த்தப்பட வேண்டும். தீப்பிடிக்காத வீடுகளை அப்பகுதியிலேயே குறைந்தபட்ச அடிப்படை வசதிகளுடன் உடனடியாகக் கட்டித்தர வேண்டும். தீ விபத்துகள் ஏற்பட்டால் எப்படி அதை எதிர்கொள்வது என்பது குறித்த பயிற்சிகளைக் குடிசைப் பகுதிகளில் குறிப்பிட்ட கால இடைவெளியில் அரசு நடந்த வேண்டும். முக்கிய தகவல்கள் அடங்கிய பலகை ஒன்றையும் இப்பகுதிகளில் அமைக்க வேண்டும்.

*6.* வளர்ச்சித் திட்டங்களைக் காரணம் சொல்லி யாரையும் கட்டாயமாக வெளியேற்றக் கூடாது. தவிர்க்க இயலாத நிலைகளில் பழைய இடத்திற்கு அருகிலேயே 5 கி.மீ தொலைவுக்குள், மாற்றுக் குடியிருப்பு வசதி செய்துதர வேண்டும்.

*7.* தீவிபத்து நடைபெற்ற இடங்களில் உள்ள குழந்தைகளுக்கு உடனடியாகப் புதிய புத்தகங்கள், சீருடைகள் அளித்து பள்ளி செல்ல வழி செய்ய வேண்டும்.

*8.* தீப்பற்றிய இடங்களிலுள்ளவர்களுக்கு எரிந்துபோன ஆவணங்களை உடனடியாக அளிக்க வேண்டும். இதற்கென தனி அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். உடனடியாக அளிக்கப்பட முடியாத ஆவணங்கள் குறித்து, இவர் தீ விபத்து நடந்த பகுதியில் உள்ளவர், புதிய ஆவணம் அளிப்பது குறித்த விசாரணை நடைபெறுகிறது எனத் தற்காலிகச் சான்றிதழ் ஒன்றை அளித்து காவல்துறை கெடுபிடிகளிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும்.

*9.* நிரந்தரமாகப் புதிய வீடுகள் கட்டுவதற்கு JNNURM திட்டம் முதலியவற்றிலிருந்து நிதி ஏற்பாடு செய்ய வேண்டும். பயனாளிகள் முன் பணமாகக் கட்ட வேண்டிய தொகையை மாநில அரசு அளிக்க வேண்டும்.

*10.* வியாசர்பாடி மூர்த்தி நகரில் குடிசை மாற்று வாரியக் கட்டிடம் இடிந்து விழுந்து 15 ஆண்டுகளாகியும் மீண்டும் அதைக் கட்டித்தராமல் பாதிக்கப்பட்டவர்களைச் சாலையோரத்தில் வாழ நிர்ப்பந்தித்த அரசின் செயல் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. தீ விபத்து நடந்த அடுத்த நாள் வீடு கட்டித் தரப்படும் என அறிவிப்புப் பலகை ஒன்றை நட்டது அரசு தனது நீண்ட கால அநீதியை

மறைப்பதற்காகவே. உடனடியாக அப்பகுதியில் 320 குடும்பங்களும் வசிக்குமாறு புதிய கட்டிடம் அமைக்க வேண்டும்.

11. நந்தம்பாக்கம் எம்.ஜி.ஆர். நகர் விரிவு பகுதியில் தீ விபத்து நடந்த ஒரு வாரத்தில் அம்மக்களைக் கட்டாயமாக வெளியேற்றி அப்பகுதியில் முள்வேலியிட்டுத் தடுத்து யாரும் நுழையக்கூடாது என அறிவிப்புப் பலகை வைத்தது வன்மையாக் கண்டிக்கத்தக்கது.

12. மறியல் செய்த மக்கள் மீது காவல்துறை மூலம் அடக்கு முறை ஏவியது அரசின் இரக்கமற்ற கொடூரத்தின் இன்னொரு சாட்சியாக அமைகிறது. அரசியல் பழிவாங்கும் நோக்கில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. கவுன்சிலர் பெருமாள்சாமி மற்றும் 14 பேர்கள் மீதான வழக்கை அரசு திரும்பப் பெற வேண்டும்.

# பகுதி 2

## இயற்கை அழிவு மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் நிமித்தமாய் இடம் பெயர்க்கப்பட்டவர்களுக்காக உருவாக்கப்பட்ட புதிய குடியிருப்புகளின் நிலை குறித்த உண்மைகள்

எமது இரண்டாவது குழு இடம் பெயர்த்துக் குடியமர்த்தப் பட்டோர் வசிக்கும் நல்லூர், கண்ணகி நகர், கன்னட பாளையம் முதலான இடங்களை சென்ற ஜூலை 20 மற்றும் 22 தேதிகளில் பார்வையிட்டது. குன்றத்தூர் - ஸ்ரீ பெரும்புதுர் நெடுஞ்சாலையில் குன்றத்தூரிலிருந்து 7 கி.மீ. தொலைவிலுள்ளது நல்லூர். பழைய மாகபலிபுரம் சாலையில் துரைப்பாக்கத்திலிருந்து 5 கி.மீ தொலைவில் உள்ளது கண்ணகி நகர். பெருங்களத்தூர் அருகில் எருமையூர் கூட்டு ரோடு செல்லும் வழியில் தாம்பரத்திலிருந்து 4 கி.மீ. தொலைவில் உள்ளது கன்னட பாளையம்.

நல்லூரில் போரூர் இரட்டை ஏரியிலிருந்து இடம் பெயர்க்கப்பட்ட 2000 குடும்பங்களுக்கு, குடும்பத்திற்கு 1 சென்ட் 416 ச.அடி நிலம் நந்தம் புறம்போக்கில் ஒதுக்கி 2006 ம் ஆண்டிலிருந்து குடியமர்த்தப்பட்டுள் ளனர். இதற்கு பட்டா ஏதும் அளிக்கப்படவில்லை. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இடம் ஒதுக்கியுள்ளதை அறிவிக்கும் செயல் முறைகள் (proceedings) ஒன்று மட்டுமே தமிழ்நாடு குடிசைப்



பகுதிமாற்று வாரிய மேலாண்மை இயக்குனரால் (ந.க.எண். எஸ் 6/5577/07 நாள் 26.11.07) வழங்கப்பட்டுள்ளது. கட்டப்பட்ட வீடுகளில் 90 சதம் குடிசை வீடுகள். இங்கும் அடிக்கடி தீவிபத்து ஏற்படுவதால் ஒரு சிலர் காலி செய்து போய்விட்டனர் எனச் சிலர் குறிப்பிட்டனர்.

கண்ணகி நகரில் 15,471 குடும்பங்கள் உள்ளன. சாந்தோம் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள், புதுப்பேட்டையிலிருந்து சமீபத்தில் (2009) பெயர்க்கப் பட்டோர், பக்கிங்ஹாம் கால்வாய்ப் பகுதியிலிருந்து இடம் பெயர்க்கப்பட்டோர் என மூன்று பகுதி மக்கள் இங்கு கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் குடியமர்த்தப் பட்டுள்ளனர். ஒவ்வொரு வீட்டின் அளவும் வெறும் 160 சதுர அடி மட்டுமே. இந்த வீட்டிற்கு இவர்கள் மாதம் ரூ. 300 வாரியத்திற்குக் கட்ட வேண்டும்.

சென்ற மாதம் நந்தம்பாக்கம் எம்.ஜி.ஆர். நகர் விரிவில் ஏற்பட்ட தீ விபத்தால் இடம் பெயர்க்கப்பட்ட 106 குடும்பங்கள் கன்னட பாளையத்தில் குடும்பத்திற்கு 1 சென்ட் நிலம் கொடுத்துக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இம்மூன்று பகுதிகளிலுமுள்ள பிரச்சினைகள் கிட்டதட்ட ஒரே மாதிரியானவை. அடிப்படை வசதிகள் எதுவும் இப்பகுதிகளில் கிடையாது. அவசர மருத்துவ வசதியோ வேறு அத்தியாவசியப் பொருட்களோ வேண்டுமெனில் கன்னட பாளையத்தில் இருப்போர் தாம்பரத்திற்கும், கண்ணகி நகரில் இருப்போர் துரைப்பாக்கத்திற்கும், நல்லூரில் உள்ளோர் குன்றத்தூருக்கும் தான் வந்தாக வேண்டும்.

சென்னை நகரத்திலிருந்து கன்னடபாளையம் 30 கி.மீ. தொலைவிலும், நல்லூர் 40 கி.மீ. தொலைவிலும், கண்ணகி நகர் 30 கி.மீ தொலைவிலுமுள்ளன. நகரத்திற்கு செல்வதற்கு அடிக்கடி பஸ் வசதிகள் கிடையாது. அருகிலுள்ள பெரிய ஊர்களிலிருந்து 'ஷேர் ஆட்டோ' பிடித்து வர வேண்டுமானால் குறைந்தது ரூ. 10 ஆகும். கன்னட பாளையத்திற்கு அந்த வசதியும் கிடையாது. ஆட்டோக்காரர் களும் கூட வருவதில்லை.

மூன்று இடங்களிலும் குடிதண்ணீர் கிடையாது. கை பம்ப் அமைத்தால் கடுமையான உப்புத் தண்ணீர்தான் கிடைக்கிறது. கன்னட பாளையத்திலுள்ள 106 குடும்பத்திற்கும் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை ஒரு லாரி தண்ணீர் மட்டும் அனுப்பப்படுகிறது. அதை ஊற்றி வைப்பதற்கு தண்ணீர் டாங்கும் கிடையாது. நந்தம்பாக்கத்திலிருந்து எடுத்துச் சென்ற ஒரு சின்டெக்ஸ் தொட்டியில்தான் தேக்கி

வைக்கின்றனர். சராசரியாகக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒருநாளைக்கு 15 லிட்டர் தண்ணீர் அளவே கிடைக்கிறது. 80 லிட்டர் தண்ணீர் ஒவ்வொருவருக்கும் ஒருநாளைக்கு அளிக்கப்பட வேண்டும் என சென்னைக் குடிநீர் வாரியம் நிர்ணயித்துள்ளது. நல்லூரில் உள்ளவர்கள் 3 கி.மீ. தொலைவில் உள்ள சோமங்கலம் என்னுமிடத்திலிருந்து தினம் சைக்கிள்களில் தண்ணீர் எடுத்து வருகின்றனர். இவ்வாறு இவர்கள் தண்ணீர் எடுத்துச் செல்வதை சோமங்கலம் மக்கள் எதிர்க்கத் தொடங்கியுள்ளனர். கண்ணகி நகரில் 27 வீடுகளுக்கு ஒரு பம்ப் அமைக்கப்பட்டிருந்தாலும் அவற்றில் தண்ணீர் வருவதில்லை.

இப்பகுதியில் தாதாக்களாக உருப்பெற்றுள்ள சிலர் மின்சாரம், தண்ணீர் ஆகியவற்றின் வினியோகத்தில் தலையிடுகின்றனர். கண்ணகி நகரிலுள்ள 15,471 வீடுகளில் சுமார் 200 வீடுகளில் மட்டுமே மின்சார வசதி உள்ளது. மின்சார இணைப்பிற்கு 5000 ரூபாய் வரை செலவிட வேண்டி உள்ளதால் மற்றவர்கள் இணைப்புப் பெற வில்லை. இப்பகுதியிலுள்ள தாதாக்கள் சிலர் இவர்களுக்கு இணைப்புள்ள வீடுகளிலிருந்து மின்சார சப்ளை செய்து மாதம் ரூ.200 வசூலித்துக் கொள்கின்றனர். அதே போல வரும் தண்ணீர் லாரிகளையும் முழு தண்ணீரையும் வினியோகிக்க விடாமல் தாம் அதைப் பெற்றுத் தேக்கி வைத்து குடம் ரூ.2 என விற்கின்றனர். கந்து வட்டிக் கொடுமையும் இங்கு அதிகம். 1000 ரூபாய்க்கு மாதம் ரூ.600 வட்டியாய்ப் பெறுகின்றனர். தினந்தோறும் இந்த தொழிலில் ரூ. 10 லட்சம் வரை புரள்கின்றது என்றார் ஒருவர். கள்ளச் சாராய விற்பனையும் இங்கு அமோகமாக நடைபெறுகிறது. சென்னை நகரில் டாஸ்மாக் கடைகள் மூடப்படுகிற நாட்களில் கண்ணகி நகர் ஏக அமளியாக இருக்கும். இந்நிலை தொடருமானால் விரைவில் விஷச்சாராய இறப்புக்கள் ஏற்படுவதற்கும் இங்கே வாய்ப்பிருக்கிறது.

கன்னட பாளையத்தில் இன்னும் மின்வசதி செய்துதரப் படவில்லை. சுற்றிலும் ஏரிப்பகுதி என்பதால், பாம்பு, பூச்சிகள் தொல்லைகள் வேறு. நல்லூரில் ஒற்றை விளக்கு இணைப்பு மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. வார நாட்களில் இரவு 8 மணி முதல் காலை 6 மணி வரையிலும், ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் நாள் முழுவதும் மின்சாரம் அளிக்கப்படுகிறது.

கன்னட பாளையம், நல்லூர் இரண்டிலும் கழிப்பிட வசதி கிடையாது. அருகிலுள்ள ஆள் நடமாட்டம் அற்ற பகுதிகளைத்தான் அவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஏரியில் ஆங்காங்கு தேங்கிக் கிடக்கும் நீரைத்தான் கால் கழுவப் பயன்படுத்த வேண்டும்.



பெண்கள் படும் சிரமத்தை விளக்க வேண்டியதில்லை. கண்ணகி நகர் அடுக்குமாடி வீடுகளில் சிறிய கழிப்பிடங்கள் இருந்தபோதும் தண்ணீர் இல்லாததால் அவை இருந்தும் பயனில்லை. தவிரவும் பல கட்டிடங்களில் கழிவு நீர்க் குழாய்கள் உடைந்துள்ளது. இதன் விளைவாக குடியமர்த்தப்படாத கட்டிடங்களைச் சுற்றியுள்ள இடத்தை மக்கள் கழிப்பிடமாகப் பயன்படுத்துவதால் இப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசி சுகாதாரக் கேடு மிகுந்துள்ளது.

இப்பகுதிகளை அருகிலுள்ள நகரப் பகுதியுடன் இணைப்பதற்கு நல்ல சாலை வசதி கிடையாது. அதனாலும்கூட ஆட்டோக்காரர்கள் வரத் தயங்குகின்றனர். தவிரவும் ஆள்நடமாட்டமற்ற பகுதிகளாக இருப்பதால் 'ரவுடியிசம்', குற்றச் செயல்கள் மிகுதியாயுள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்தி சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட காவல்நிலையங்களும் கிடையாது. இதனால் பெண்கள் பாதுகாப்பற்று உள்ளனர் என்று நாங்கள் சந்தித்த சிலர் குறிப்பிட்டனர்.

இடம் பெயர்க்கப்பட்ட வாழ்வின் துயரங்களை அதிகம் அனுபவிப்பது பெண்களும் குழந்தைகளுந்தான். அருகில் நல்ல பள்ளிக்கூடங்கள் கிடையாது. கண்ணகி நகரில் அரசுப் பள்ளி ஒன்று இருந்தபோதும் போதிய வசதிகளற்ற பள்ளி அது. இங்கு பள்ளி செல்லும் வயதில் சுமார் 25,000 குழந்தைகள் உள்ளனர். துரைப்பாக்கத்திலுள்ள தனியார் பள்ளிக்குச் செல்ல வேண்டுமானால் ஆண்டொன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.15,000 செலவிட வேண்டும். தவிரவும் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களது குழந்தைகள்தாம் முன்பு படித்த அரசுப் பள்ளிகளில் ஆண்டுக்கு ரூ.3,500 உதவிப் பணம் அளிப்பதால் அவற்றிலேயே படிப்பைத் தொடர்கின்றனர். எனவே சுமார் 1 மணிநேரம் பஸ் பயணம் செய்து பள்ளி செல்ல வேண்டியுள்ளது. தவிரவும் புதிதாக இடம் பெயர்த்துக் குடியமர்த்தப்படுபவர்களது வீட்டுப் பிள்ளைகள் அவ்வளவு எளிதாகப் பழைய பள்ளியிலிருந்து நீங்கி வருவதற்கு விரும்பாததால் நீண்ட தொலைவு பயணம் செய்து பழைய இடத்திற்கே வரவேண்டியுள்ளது. என்ன இருந்தாலும் ஓரளவு தரமான கல்வி நகரத்திலேயே தானே கிடைக்கிறது. புதுப்பேட்டையிலிருந்து சமீபத்தில் குடியமர்த்தப்பட்ட 1003 குடும்பங்களையும் சேர்ந்த குழந்தைகள் இவ்வகையில் அதிக சிரமப்படுகின்றனர். இப்பிரச்சினைகளால் 6-11 வயதுகளிலுள்ள குழந்தைகளில் படிப்பைப் பாதியில் நிறுத்துவோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது என்றார் இப்பகுதியில் பணிபுரியும் ஒரு தொண்டு நிறுவன ஊழியர்.

மருத்துவமனைகளும் இங்கில்லை. கண்ணகி நகரில் இயங்கும் ஒரே மருத்துவமனையான இசபெல்லா மருத்துவமனையில் பணம் செலுத்தியே சேவை பெற இயலும். இதுவும்கூட முழு நேர மருத்துவமனையல்ல. ஒரு டிஸ்பென்சரி மட்டுமே. இங்கு வசிக்கும் சுமார் 70,000 மக்களுக்கும் உரிய மருத்துவ வசதி இல்லை என்பதே உண்மை. துரைப்பாக்கத்தில் உள்ள ஒரே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுமே இவர்கள் அருகிலுள்ள அரசு மருத்துவமனை.

இப்பகுதிகள் எதிலும் ஒழுங்காக குப்பை வாருவது கிடையாது. நகர சுத்தி அமைப்பு எதுவும் இங்கு செயல்படுவதில்லை என்பதால் குப்பை பெருகி கொசு மிகுந்துள்ளது. இதனால் குழந்தைகள் அடிக்கடி நோய்வாய்ப்படுகின்றனர். கண்ணகி நகரில் 15 நாட்களுக்கு ஒரு முறை குப்பை வாருவதற்கு வந்தாலும் இப்பணி ஒழுங்காக நிறைவேற்றப் படுவதில்லை. கன்னட பாளையத்தில் மின்சாரமும் இல்லாததால் இரவில் குழந்தைகள் படும் துன்பம் சொல்லி மாளாது. கண்ணகி நகர், துரைப்பாக்கம் ஊராட்சிக்கு வந்தாலும் இது குடிசைமாற்று வாரியக் கட்டுப்பாட்டில் உள்ளதால் ஊராட்சி வசதிகள் எதுவும் இங்கு கிடையாது. தபால் நிலைய வசதியும் இப்பகுதியில் இல்லை.

குடியமர்த்தப்பட்ட புதிய பகுதிகள் கண்ணகி நகர், நல்லூர், கன்னடபாளையம் எல்லாம் ஏரிப் பகுதிகளாக உள்ளதால் மழைக்காலத்தில் வெள்ள ஆபத்து உண்டு. பக்கிங்ஹாம் கால்வாய் பகுதியிலிருந்தும் போரூர் ஏரியிலிருந்தும் இடம் பெயர்க்கப்பட்டவர்கள் மீண்டும் மற்றொரு ஏரியில் குடியமர்த்தப்படுவது வேதனை. போரூர் ஏரிப் பகுதியில் 2 கிரவுண்ட், 1 கிரவுண்ட் அளவு பெரிய வீடுகளில் இருந்தோரை ஏரி எனக் காரணம் சொல்லி மீண்டும் ஒரு ஏரிக்குள் 1 சென்ட் இடத்தில் குடியமர்த்துவது ஒரு முரண்நகை.

எல்லாவற்றிற்கும் மேலாக பழைய இடங்களிலிருந்து இவ்வாறு கட்டாயமாக வெளியேற்றப்பட்டு நெடுந் தொலைவில் குடியமர்த்தும் போது அவர்களின் அடிப்படை வாழ்வாதாரம் பாழ்பட்டுவிடுகிறது. புதிய இடங்களில் அவர்களுக்கு வேலை வாய்ப்பதில்லை. கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் பயணம் செய்து தம் பழைய இடத்திற்குச் சென்றே அவர்கள் வேலை தேட வேண்டியுள்ளது. போதிய பஸ் வசதி இல்லாததால் முன்னதாகப் புறப்பட்டு, தாமதமாக திரும்பி வருவதுதவிர, ஆட்டோ, ஷேர் ஆட்டோ முதலியவற்றுக்கும் அவர்கள் செலவிட வேண்டியுள்ளது. தினம் போக்குவரத்திற்கே ரூ. 70 வரை ஆகிறது என்றார் ஒருவர்.



வீடுகளில் வேலை செய்த பெண்கள் இன்று அந்த வாய்ப்பை இழந்து நிற்கின்றனர். பழைய வேலைகளை இழந்து, புதிய வாய்ப்புகளும் இல்லாததால் இம்மக்கள் கந்து வட்டிக் கொடுமைகளில் சிக்கிக் கொள்கின்றனர் என்று காவல்துறை ஆவணம் ஒன்று கூறுகிறது (The New Indian Express, July 28, 2009).

நாங்கள் சந்தித்த அவ்வளவு பேர்களுமே தாங்கள் முன்பிருந்த பகுதி அது எவ்வளவு சுகாதாரக் கேடாகவும், நெருக்கடி மிகுந்ததாகவும், சாக்கடை அல்லது சாலை ஓரமாகவும் இருந்த போதிலும் எத்தனையோ மடங்கு இப்போதைய வாழ்வைக் காட்டிலும் அந்த வாழ்க்கை வரவேற்கத் தக்கதாக இருந்தது என்றார்கள். மீண்டும் தாம் பழைய இடத்திற்கே போகத்தயார் என்றனர். பழைய இடங்களில் அரசால் கொடுக்கப்பட்ட அழுத்தங்கள் காரணமாகவும், சிறிய இடமானாலும் சொந்தமான இடம் என்ற எண்ணத்தாலும் அன்றைய நிலையில் சரி பரவாயில்லை என நினைத்து வந்தவர்களும் கூட இன்று பழைய நிலை பரவாயில்லை என்ற முடிவில் உள்ளனர். புதிய இடங்களில் இவர்களுக்கு முழுமையான பட்டா இல்லாததால் இவர்களுக்கு வங்கி முதலானவற்றில் கடன் பெறும் வழியும் அடைக்கப்பட்டு விடுகிறது. கந்துவட்டிக்காரர்களுக்கு இந்நிலை கொண்டாட்டமாகி வருகிறது.

செம்மஞ்சேரி, கூடப்பாக்கம் முதலான இதுபோன்ற புதிய குடியமர்வுப் பகுதிகளுக்கு நாங்கள் செல்லவில்லை. ஆனால் அங்கும் நிலைமை இதுவே என அறிகிறோம். அடுக்குமாடிக் கட்டிடங்களாக குடியிருப்பு அமைக்கப்பட்டுள்ள செம்மஞ்சேரியில் குடியமர்த்தப்பட்டோர் கண்ணகி நகரில் உள்ளோர் படுகிற அத்தனை துன்பங்களையும் அனுபவிக்கின்றனர். கூடப்பாக்கத்தில் உள்ளோர் நல்லூர் மற்றும் கன்னட பாளையம் மக்கள் சந்திக்கும் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

## கோரிக்கைகள்

1. வளர்ச்சித் திட்டங்களுக்காகவோ, கார்ப்பரேட்களுக் காகவோ, குடிசைப்பகுதி மக்கள் இடம் பெயர்த்துத் தொலைதூரத்தில் குடியமர்த்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். தவிர்க்க இயலாத நிலையில் அவர்கள் முன்பு வசித்த இடங்களுக்கு மிக அருகாகவே 5 கி.மீ. தூரத்திற்குள் குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட வேண்டும். இந்த நோக்கில் நகரத்திற்குள் எங்கெல்லாம் இவ்வாறு மாற்றுக்

குடியிருப்புகள் கட்டுவதற்கு வாய்ப்பு உண்டு என்பது குறித்து அரசு ஒரு சர்வே எடுக்க வேண்டும்.

2. எக்காரணம் கொண்டும் நீர்நிலைப் பகுதிகளிலும், ஆள்நடமாட்டமற்ற பகுதிகளிலும் புதிய குடியிருப்புகளை உருவாக்கக்கூடாது.

3. இடம் பெயர்த்துக் குடியமர்த்தப்பட்டவர்களுக்கு உடனடியாக ரூ. 10,000 உதவித் தொகை அளிப்பதோடு அடுத்த இரண்டாண்டுக்குள் ஒவ்வொரு மாதமும் ரூ. 10,000 உதவித் தொகையும் ரூ. 1,000 மதிப்புள்ள மளிகைச் சாமான்களும் வழங்கப்பட வேண்டும். புதிய இடத்தில் வேலை இல்லாமல் போனவர்களுக்கு அவர்களுக்கு வேலை கிடைக்கும் வரை வேலை இல்லாதோருக்கான உதவித் தொகை வழங்கப்பட வேண்டும்.

4. ஏற்கனவே குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் உடனடியாக கீழ்க்கண்ட வசதிகள் செய்யப்பட வேண்டும்.

i) குடிநீர் மற்றும் நீர் வசதி செய்து தரப்பட வேண்டும். சராசரியாக ஒரு நபருக்கு தினம் 80 லி. தண்ணீர் கிடைக்க வசதி செய்ய வேண்டும்.

ii) சராசரியாக 200 குடும்பங்களுக்கு ஒரு ஆரம்பப் பள்ளி, 1000 குடும்பங்களுக்கு ஒரு உயர்நிலைப்பள்ளி அமைத்து, தரமான கல்வி அளிக்க வேண்டும். முன்னுரிமை அளித்து செய்யப்பட வேண்டிய முதல் முக்கிய பணி இது. பள்ளிகள் உருவாக்கப்படும் வரை இப்பகுதியில் உள்ள குழந்தைகளுக்கு அருகிலுள்ள பள்ளிகளில் இடம் பெறுவதற்கு அரசு சிறப்பு முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

iii) ஒவ்வொரு பகுதியிலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு இரவிலும் மருத்துவ சேவை அளிக்க வேண்டும். கண்ணகி நகர் போன்ற பெரிய பகுதிகளில் படுக்கைகளுடன் கூடிய வசதி செய்யப்பட வேண்டும். கண்ணகி நகர் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் நீர் வசதி செய்து கழிப்பிடங்கள் பயன்படுத்தத் தக்கவைகளாக ஆக்கப்பட வேண்டும்.

iv) தரமான சாலைகள் அமைத்து அருகிலுள்ள ஊர்களுடன் இணைப்பதோடு நகரத்துடன் இணைக்கும் பஸ்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். கட்டாயமாக இடம் பெயர்க்கப்பட்டவர்களுக்கு சிறப்பு இலவச பஸ் பாஸ்கள் அளிக்கப்பட வேண்டும்.



v) நாட்டின் பிற பகுதிகளில் உள்ள சராசரி அளவிற்குக் குறையாமல் காவல்நிலையம், தபால் நிலையம், ரேஷன் கடை முதலியவை அமைக்கப்பட வேண்டும்.

vi) கள்ளச் சாராயம், கந்துவட்டி, ரவுடியிசம் ஆகியவற்றை ஒழிப்பதற்கு அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும். தண்ணீர், மின்சார வினியோகத்தில் செய்யப்படுகிற இடைத்தரகை உடனே முடிவுக்கு கொண்டுவர வேண்டும். கட்டாயமாக குடியமர்த்தப்பட்டவர்கள் என்பதை கருத்தில் கொண்டு மின் இணைப்பிற்கான முன்பணத் தொகையை அரசு ரத்துச் செய்ய வேண்டும்.

vii) அருகிலுள்ள பெரும் தொழில் நிறுவனங்கள் இவ்வாறு இடம் பெயர்த்துக் குடியமர்த்தப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதைக் கட்டாயமாக்க வேண்டும். அதேபோல் அருகிலுள்ள தனியார் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் முதலியன ஒரு குறிப்பிட்ட சதம் தமது சேவையை இவர்களுக்கு அளிப்பதைச் சட்டபூர்வமாக உறுதி செய்ய வேண்டும்.

## தொகுப்பாக

வளர்ச்சி, தேசப்பாதுகாப்பு ஆகியவற்றைக் காரணம் காட்டி மக்கள் நலன், மனித உரிமைகள் ஆகியவற்றைப் பின்னுக்கு தள்ளும் ஒரு காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமது ஆட்சியாளர்கள் கனவு காணும் புதிய சூழலுக்கு இடையூறுகளாக உள்ளவர்களைத் தூக்கிக் கடாசுவது இன்றைய நியதியாகிவிட்டது. நாங்கள் நேரில் கண்ட உண்மைகள் இதை உறுதி செய்கின்றன.

வளர்ச்சியைக் காரணம் காட்டி மக்கள் கட்டாயமாக இடம் பெயர்க்கப்படக்கூடாது என நாம் சொல்லும்போதும் அப்படியானால் இப்போது வாழும் சுகாதாரக் கேடான அடிப்படை வசதிகளற்ற நிலையிலேயே அவர்கள் தொடர்வதா என்கிற கேள்வி எழுகிறது. அதேபோல இடம் பெயர்க்கப்பட்டவர்களுக்கு உரிய வசதிகள் அளிக்கப்பட வேண்டும் எனக் கோரும்போது அப்படியானால் இடப்பெயர்வை நாம் ஏற்றுக் கொள்கிறோமா என்ற கேள்வி எழுகிறது.

வெறும் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒற்றை வரியில் இக் கேள்விகளுக்கு நாம் பதிலளிக்க இயலாது. நடைமுறைச் சிக்கல் களைக் கணக்கில் கொண்டுதான் நாம் கோரிக்கைகளை வைக்க வேண்டியுள்ளது.

அடிப்படை வசதிகள், சுகாதாரமான சூழல் ஆகியவை அத்தியாவசியமானவை என்ற போதிலும் அடிப்படை வாழ்வாதாரமாக உள்ள வேலை வாய்ப்பு முதலியன அமையாதபோது அவை இரண்டாம் பட்சமாகிவிடுகின்றன. அதனால்தான் போரூர் ஏரியானாலும், பக்கிங்ஹாம் கால்வாய் ஆனாலும், வியார்சர்பாடி நெடுஞ்சாலை ஓரமானாலும் கூடப் பரவாயில்லை நாங்கள் அங்கேயே வாழ்ந்து கொள்கிறோம் என்கிற குரலை மக்களிடமிருந்து கேட்க முடிகிறது.

அதனால்தான் அரசு மக்களின் விருப்பை மீறி வளர்ச்சியின் பெயரால் கட்டாயமாக யாரையும் இடம் பெயர்க்கக்கூடாது, தவிர்க்க இயலாத நேரங்களில் நகரத்திற்குள்ளேயே மாற்றுக் குடியிருப்புகளை உருவாக்க வேண்டும் எனவும், பழைய குடியிருப்போ, புதிதாக உருவாக்கப்பட்ட மாற்றுக் குடியிருப்போ எதுவாக இருந்தபோதிலும் நமது அரசியல் சட்டம் வழங்கும் அடிப்படை வாழ்வுரிமைகள் அங்கு காக்கப்பட வேண்டும் எனவும் நாம் ஒரே நேரத்தில் கோர வேண்டியுள்ளது.

பத்தாண்டுகளுக்கு மேலாக ஓரிடத்தில் வசிப்போர், 20 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள குடிசைப் பகுதிகள் ஆகியவற்றைப் பொது நலன்கள் என்ற பெயரில் நீக்கக்கூடாது. நீக்க வேண்டிய தவிர்க்க இயலாத சூழலில் மீண்டும் தரமான குடியிருப்பு அமைப்பதற்கு அதிகபட்ச முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்கிற புகழ்பெற்ற ஓல்கா டெல்லிஸ் - மும்பை முனிசிபல் கார்ப்பரேசன் வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின் (1985 2 Supp SCR 51 India 1987 LRC Const 351. SC of India) அடிப்படையில் செயல்பட வேண்டும்.

இடப்பெயர்வு என்பது பாதிக்கப்படும் மக்களுக்குப் பேரிடர் ஒன்றை ஏற்படுத்தவல்ல ஒரு நிகழ்வு என்பதை அரசு முதலில் உணர வேண்டும். இடம் பெயர்க்கப்பட்டவர்களது பிரச்சினையை ஏதோ ஒரு புதிய வீடு கட்டித் தரும் பிரச்சினையாகப் பார்ப்பதை அரசு நிறுத்த வேண்டும். முழுமையாக ஒரு புதிய வாழ்வை, புதிய இல்லம் ஒன்றை உருவாக்கும் ஒரு முயற்சியாக அதை அணுக வேண்டும். தற்போது மத்திய அரசு நகல் வடிவத்தில் முன்வைத்துள்ள 'குடியமர்த்தல் மற்றும் புதுவாழ்வமைத்தல் கொள்கை' என்பதை 'இடப்பெயர்வு மற்றும் புதுவாழ்வு அமைத்தல் கொள்கை' என்பதாக மாற்றி அமைக்க வேண்டும். பொதுநலன் என்கிற பெயரில் யாரை வேண்டுமானாலும் வெளியேற்றும் உரிமை அரசுக்கு உண்டு என்கிற காலனிய



காலச்சட்டம் நீக்கப்பட்டு இடப்பெயர்வை எதிர்த்து பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தை அணுகும் உரிமை சட்ட பூர்வமாக்கப்பட வேண்டும்.

இப்போது உருவாக்கப்பட்டுள்ள நகல் சட்டத்தில் பல குறைபாடுகளை சமூக நலனில் அக்கறையுள்ளோர் சுட்டிக் காட்டியுள்ளனர் (எ.டு: Ramaswamy R. Iyar, Towards a Just Rehablitation & Displacement Policy, EPW,July 28, 2009). இவற்றை அரசு கணக்கில் கொள்ள வேண்டும். முக்கியமாக,

1. முன்கூட்டியே, சகலவிதமான தகவல்களும் அளிக்கப் பட்டு எவ்வித கட்டாயமும் இல்லாமல் சுதந்திரமான ஒப்புதலைப் பாதிக்கப்பட்டவர்களிடம் (Free Informed Prior Consent) பெற்ற பின்னரே இடப் பெயர்வு மேற்கொள்ளப்படுதல்,

2. இடப் பெயர்வு குறித்து பாதிக்கப்படக்கூடிய மக்களில் 90 சதம்பேர் பங்கேற்கக்கூடிய பொது வாக்கெடுப்பு நடத்துதல்,

ஆகிவற்றை உள்ளடக்கியதாக இச்சட்டம் அமைய வேண்டும். முன்னதாக இவ்வறிக்கையில் நாங்கள் கூறியுள்ள மறு குடியமர்த்தல், உதவித் தொகை, வேலைவாய்ப்பு, வேலை இல்லாதோருக்கான உதவித்தொகை முதலான பரிந்துரைகளும் இச்சட்டத்தில் உள்ளடக்கப்படுதல் அவசியம்.

# இணைப்பு 2

## சென்னையைப் பிச்சைக்காரர்கள் இல்லாத நகரமாக்கும் முயற்சி

## உண்மையறியும் குழு அறிக்கை

*சென்னை, ஜூன் 7, 2010.*

சென்னை நகர மேயர் வணக்கத்திற்குரிய எம். சுப்பிரமணியம் அவர்கள் கடந்த சில வாரங்களாக சென்னையை பிச்சைக்காரர்கள் இல்லாத நகரமாக்கும் நடவடிக்கைகள் குறித்து பேசி வருவதை அறிவோம் (இந்து நாளிதழ் மே 5,17 மே 21, 2010). இவ்வாறு மே 24வரை 179 பேர்கள் கீழ்ப்பாக்கம் மனநலக் காப்பகத்திற்கும் முதியோர் வாழ்வு இல்லங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக அவர் கூறியுள் ளார். பிச்சைக்காரர்களை அடையாளம் கண்டு அப்புறப்படுத்தும் இரண்டாம் கட்ட நடவடிக்கை ஜூன் 6 முதல் தொடங்க உள்ளதா கவும், இதில் மாநகராட்சி ஊழியர்களுடன் தொண்டு நிறுவனங்களும் பயன்படுத்தப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். 18 தொண்டு நிறுவனங்களுடன் இது தொடர்பாகப் பேச்சு வார்த்தைகளையும் நடத்தியுள்ளார். தண்டையார்பேட்டையிலுள்ள தொற்றுநோய் தடுப்பு மருத்துவமனையில் ('காலரா ஹாஸ்பிடல்') மே 4 அன்று நடைபெற்ற விழா ஒன்றில் மாநகராட்சி ஊழியர்கள் சென்னை நகரத் தெருக்களில் அலைந்து கொண்டிருக்கும் 420 மனநலமற்றவர்களை அடையாளம் கண்டுள்ளதாகவும் அவர்களில் 152 பேர்கள் அன்றுவரை பிடித்து வரப்பட்டுள்ளதாகவும் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தெருக்களில் அலைந்துகொண்டிருக்கும் 'பிச்சைக்காரர் களை' வலுக்கட்டாயமாகப் பிடித்துச் சென்று மனநலக் காப்பகத்தில் அடைப்பதில் விதிமுறைகள் மீறப்படுவதாகவும் இவர்களில் பலர்



ஆரோக்கியமான மனநிலையுடன் உதிரித் தொழில்கள் புரிந்து கொண்டிருந்த வீடற்றவர்கள் எனவும் சிலர் பிற ஊர்களிலிருந்தும் மாநிலங்களிலிருந்தும் இடம் பெயர்ந்து வந்த தொழிலாளிகள் எனவும் மனித உரிமை ஆர்வலர்களுக்குத் தகவல்கள் வந்ததை ஒட்டி இதுகுறித்த உண்மைகளை அறிய உண்மை அறியும் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இதில் பங்கு பெற்றவர்கள் :

பேரா. அ. மார்க்ஸ், மனித உரிமைகளுக்கான மக்கள் கழகம், சென்னை.

மதுமித்தா தத்தா, வெட்டிவேர் கூட்டமைப்பு, சென்னை.

பேரா. மு. திருமாவளவன், முன்னாள் அரசு கல்லூரி முதல்வர், சென்னை.

சந்திரிகா, மென்பொருள் பொறியாளர், சென்னை.

இக்குழுவினர் சென்ற மே 5, மே 18, மே 22 ஆகிய நாட்களில் தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மனநல காப்பகம், மேல்ப்பாக்கம் அரசு பிச்சைக்காரர்கள் பாதுகாப்பு முகாம் ஆகியவற்றிற்குச் சென்று உரிய அதிகாரிகளையும், வாய்ப்புள்ள இடங்களில் பிடித்துவரப்பட்டிருந்த 'பிச்சைக்காரர் களையும்' சந்தித்துப் பேசியது. இதுதொடர்பாக வேறு சிலரிடமும் கருத்துக்களைக் கேட்டுத் தொகுத்துக் கொண்டது.

### எங்கள் ஆய்வில் கண்டறிந்த முக்கிய உண்மைகள்

1. சென்னை மாநகராட்சியின் 10 மண்டலங்களிலுமுள்ள சுகாதார ஆய்வாளர்களைப் பயன்படுத்தி இவ்வாறு தெருக்களில் அலைந்து கொண்டுள்ளவர்கள், உறங்குபவர்கள் முதலானோர் பிடித்து வரப்பட்டுள்ளனர். பார்ப்பதற்கு அழுக்காகவும், நிரந்தரத் தொழில் மற்றும் வாழ்விடங்கள் அற்றவர்களாகவும் தோன்றுகிறவர்கள் இவ்வாறு கட்டாயமாகப் பிடித்து வரப்பட்டுள்ளனர். வேறு எந்த விசாரணைகளோ, நிரூபணங்களோ செய்யப்படாமலேயே இழுத்து வரப்பட்டுள்ளனர். இந்த முயற்சியில் மனநல மருத்துவ நிபுணர்களோ காவல்துறையினரோ பயன்படுத்தப்பட வில்லை. மாநகராட்சி சுகாதார ஊழியர்கள் மட்டுமே பயன்படுத்தப் பட்டுள்ளனர்.

2. பிடித்து வரப்பட்ட முறை மிகவும் மனிதாபிமானமற்றதாக உள்ளது. திடீரென வாகனத்தை அருகே கொண்டுவந்து நிறுத்தி, ''உனக்கு முடிவெட்டி விடுகிறோம்'' எனச்சொல்லி கட்டாயமாக வாகனத்தில் ஏற்றியுள்ளனர். நீங்கள் ஏற மறுத்திருக்கலாமே என நாங்கள் வினவியபோது, ''எப்படி முடியும்? எங்களைப் பேசுவதற்கே விடவில்லை. நான்கைந்து பேர்கள் சூழ்ந்துகொண்டு கட்டாயமாக வேனில் ஏற்றினார்கள்'' என்று கூறினர்.

3. பிடித்து வரப்பட்டவர்களைத் தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனைக்குக் கொண்டு வந்து குளிப்பாட்டி, மொட்டையடித்து, புதிய ஆடைகளை அணிவித்து, வார்டுகளில் பூட்டி வைத்துள்ளனர். உறவினர்கள் யாரும் வந்து அடையாள அட்டை முதலான ஆதாரங்களைக் காட்டினால் அவர்கள் மட்டும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவ்வாறு இதுவரை 11 பேர்கள் வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக (மே 24 அன்று) மேயர் கூறியுள்ளார். மே 4 அன்று நடைபெற்ற விழாவில் 12 பேர்கள் அனுப்பப்பட்டுள்ளதாக மேயர் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. அன்றுவரை (மே 4) 20 பேர்கள் முதியோர் இல்லத்திற்கு அனுப்பப் பட்டுள்ளதாகவும், மூவர் உடல் நலமில்லாததால் சென்னை பொது மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் 93 பேர்கள் கீழ்ப்பாக்கம் மனநலக் காப்பகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அன்று அவர் தெரிவித்தார்.

4. எமக்கு கிடைத்துள்ள தகவல்களின்படி இதுவரை இவ்வாறு கீழ்ப்பாக்கம் காப்பகத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் விவரங்கள் வருமாறு :

| தேதி | ஆண்கள் | | பெண்கள் |
|---|---|---|---|
| மே 4 | 78 | | 9 |
| மே 5 | 10 | | 1 |
| மே 11 | 0 | | 1 |
| மே 20 | 9 | | 5 |
| மொத்தம் | 97 | + | 16 = 113 பேர் |



இவர்களில் மே 4ல் ஒரு ஆணும் மே 5ல் ஒரு பெண்ணும் உடல்நலமின்றிப் பொது மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். மே 24 வரை மொத்தம் 179 பேர்கள் இதுவரை மனநல காப்பகம் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மேயர் மே 24 அன்று குறிப்பிட்டுள்ளார். ஜனசக்தி (மே 25) இதழில் வந்துள்ள செய்தியின்படி இதில் 31 பேர் தொண்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார். மேற்கூறப்பட்ட மே 5 இந்து நாளிதழின் அறிக்கையின்படி முதியோர் இல்லத்திற்கு அனுப்பப்பட்டவர்கள் 20. அதேபோல மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு அறிக்கையில் 3 எனவும் இன்னொரு அறிக்கையில் 5 எனவும் கூறியுள்ளார். இப்படி மேயரது அறிக்கையில் பல முரண்கள் உள்ளது கவலையளிக்கிறது.

5. மனநலக் காப்பகத்தில் ஒருவரை வைப்பதற்கான சட்ட நெறிமுறைகள் (இந்திய மனநோய் மருத்துவ நலச்சட்ட விதிகள்) வருமாறு :

- ஒரு மனநோயாளி தாமாகவே காப்பகத்தில் சேருவதற்கு முன் வந்தால் 24 மணி நேரத்திற்குள் மருத்துவ அதிகாரி ஒருவரால் அவர் சோதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்ப்பது தவிர்க்க இயலாதது எனப் பரிந்துரைக்கப்பட வேண்டும்.
- ஒரு நோயாளியைக் கட்டாயமாக 90 நாட்கள் வரை மருத்துவமனையில் அடைத்து வைக்கலாம். ஆனால் அவர் மன நோயாளி என்பதை இரு மருத்துவ நிபுணர்கள் உறுதி செய்ய வேண்டும்.
- உறவினர்கள் ஒப்புதல் இல்லாமல் 6 மாதம் வரை ஒருவரை கட்டாயமாக மருத்துவமனையில் வைக்க வேண்டுமென்றால் 'மேஜிஸ்ட்ரேட்' உத்தரவு பெறப்பட வேண்டும்.
- மனநோயாளி எனக் காவல்துறை யாரையும் சந்தேகப்படுமானால் அவரைப் பிடித்து 24 மணி நேரத்திற்குள் மேஜிஸ்ரேட் முன்கொண்டு செல்ல வேண்டும். அவர் விசாரித்து தேவையானால்

மருத்துவ நிபுணர்களின் கருத்தைக்கேட்டு மருத்துவமனையில் அடைக்க உத்தரவிடலாம். மூன்றாம் நபர் யாரும் ஒரு மனநோயாளி பற்றி தெரிவிக்க வேண்டுமெனில் மேஜிஸ்ட்ரேட்டிடம் புகார் செய்ய மட்டுமே முடியும்.

- ♦ மனநோய் வார்டில் 10 நாட்கள் வரை வைத்திருந்து அவர் உண்மையிலேயே மனநோய் உள்ளவர்தானா எனக் கண்காணிக்க மேஜிஸ்ட்ரேட் உத்தரவிடலாம்.
- ♦ மேஜிஸ்ட்ரேட்டின் இந்த அதிகாரத்தை காவல்துறை ஆணையர் எடுத்துச் செயல்படுத்த அனுமதியுண்டு.

சென்னை நகரமேயர் தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளில் மேற்கண்ட விதிமுறைகள் ஏதும் கடைபிடிக்கவில்லை.

- ♦ கீழ்ப்பாக்கம் மனநல காப்பகத்தில் கொண்டு வரப்பட்ட 113 பேர்களில் மே 20 அன்று கொண்டு வரப்பட்ட 14 பேர்களுக்கு மட்டுமே மேஜிஸ்ட்ரேட் உத்தரவு பெறப்பட்டுள்ளது. மற்றவர்களுக்கு அந்த ஆணை பெறப்படவில்லை.
- ♦ மனநிலை சரியில்லாதவர்கள் எனச் சந்தேகப்படு பவர்களை காவல்துறையிடம் அடையாளம் காட்டி மேஜிஸ்ட்ரேட் முன் அவர்களை நிறுத்தாமல், மாநகராட்சி ஊழியர்களே அவர்களை கட்டாயமாகப் பிடித்துச் சென்று தண்டையார்பேட்டை மருத்துவ மனையில் அடைத்துப் பூட்டியுள்ளனர்.
- ♦ மேஜிஸ்ட்ரேட் ஆணையில்லாமல் எப்படி இவர்களை காப்பகத்தில் அனுமதித்தீர்கள் என கீழ்ப்பாக்கம் மனநலக் காப்பக இயக்குனர் டாக்டர் ஆர். சத்தியநாதன் அவர்களை வினவியபோது இந்திய மனநல மருத்துவச் சட்டத்தின் சிறப்புப் பிரிவுகளின் (special provisions) அடிப்படையில் அப்படிச் செய்துள்ளதாக பதிலளித்தார். அப்படிச் சேர்த்துக் கொள்வதற்கு இரு மருத்துவ நிபுணர்கள் அவர்களைப் பரிசோதித்துச் சான்று வழங்கியிருக்க வேண்டும். அப்படி எதுவும் செய்யப்படவில்லை.



நாங்கள் கேள்விப்பட்டவரை தண்டையார்பேட்டை மருத்துவமனைக்கு சில மனநோய் நிபுணர்கள் மற்றும் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த நிபுணர்கள் அனுப்பப்பட்டதாகவும், அவர்கள் சுமார் 20 முதல் 30 பேர்கள் மட்டுமே மனநோய் உள்ளவர்கள் எனக் கூறியதாகவும் அறிகிறோம்.

மனநோய்க் காப்பகத்தில் சேர்க்கப்பட்டு சுமார் இருவாரங்களுக்குப் பின்னர் அவர்களிடம் தன் விருப்பத்தின் அடிப்படையில் தானாகவே முன்வந்து காப்பகத்தில் சேர்ந்து கொண்டதாகக் கட்டாயமாக கைநாட்டுப் பெறப்பட்டுள்ளது. இது மனநோய்ச் சட்டம் மட்டுமல்ல அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகளையே மீறுவது.

மனநோய்க் காப்பகத்தில் அனுமதிக்கப்பட்டவர்களில் சுமார் 30 முதல் 40 சதம் பேர் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். அதை கீழ்ப்பாக்கம் மனநலக் காப்பக இயக்குனர் டாக்டர் சத்தியநாதன் அவர்களே ஏற்றுக்கொண்டார். அவர்களில் பலர் பேசுகிற உள்ளூர் மொழிகள் (dialects) புரிந்த மருத்துவ நிபுணர்கள் யாரும் இங்கே கிடையாது. மொழி தெரியாத நிபுணர்கள் ஒருவரை மனநோயாளளியா இல்லையா எனக் கண்டறிய இயலாது. இது குறித்தெல்லாம் சத்தியநாதன் அவர்களைக் கேட்டபோது, ''என்ன செய்வது? கார்ப்பரேஷன் அதிகாரிகள் கொண்டுவந்து சேர்க்கச் சொல்லுகிறார்கள். ஒரு மருத்துவர் என்கிற முறையில் நான் எப்படி சிகிச்சை அளிக்க இயலாது எனச் சொல்ல முடியும்?'' என்றார். இது மிகவும் பொறுப்பற்ற பதிலாகத் தோன்றுகிறது. மனநலக் காப்பகம் என்பது கிட்டதட்ட சிறைச்சாலை போல. விருப்பமில்லாத ஒருவரை, மனநோயில்லாத போதும் இங்கே அடைத்து வைப்பதே அவருக்கு மனநோய் ஏற்படுத்தக்கூடும். இது குறித்தெல்லாம் பிச்சைக்காரத் தொல்லை இல்லாத சென்னையை உருவாக்க விரும்புபவர்களுக்கு கவலையில்லை.

பிடித்துவரப்பட்டவர்களில் சிலரைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது. அவர்களில் பலர் ஆரோக்கியமானவர்கள். உதிரித் தொழில் புரிந்துகொண்டிருந்த இவர்கள் கட்டாயமாகப் பிடித்து வரப்பட்டுள்ளனர். சில எடுத்துக்காட்டுகள் :

1. பாட்சா : (வயது 30 இருக்கலாம்) - பாரத் தியேட்டர் ரவுண்டானா அருகில் பிடித்துள்ளனர். 'இரும்பு

பொறுக்குவது' (scrap picker) தன் தொழில் எனக் கூறுகிறார்.

*2. கந்தவேல் : (25) புதுப்பாளையம் - 'போர்' வண்டியில் வேலை செய்வதாகக் கூறினார்.*

*3. கன்னையன் : செங்கல்பட்டைச் சேர்ந்தவர். சென்னையில் பேப்பர் போடும் தொழில் செய்தவர், வீடற்றவர்.*

*4. மதனகோபால் : சீர்காழி - கட்டிடத் தொழிலாளி, வீடற்றவர். (ஒரு சிகரெட் பெட்டி அட்டையில் தன் முகவரியை வைத்துக் கொண்டு எப்படியாவது காப்பாற்றுங்கள் என்று கெஞ்சினார்).*

*5. நாகராஜன் : பரமக்குடி - கோயம்பேடு மார்க்கெட்டில் ஒரு தேநீர்க் கடையில் சரக்கு மாஸ்டராக இருந்ததாகச் சொல்கிறார்.*

*6. லலிதா : பூ விற்பவர் - பெரம்பூர் - வீட்டு முகவரி உள்ளது.*

மொழி தெரியாத இடம் பெயர்த் தொழிலாளர்களிடம் எம்மால் உரையாட முடியவில்லை.

பிடித்துவரப்பட்டு உடல் நலமில்லாதவர்கள் எனக் கண்டறியப்பட்ட பின் சென்னை பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களின் நிலை என்ன என்பதை மேயர் தனது பிந்தைய பேட்டிகளில் குறிப்பிடவில்லை. இவர்களில் இருவர் இறந்துபோனார்கள் என அறிகிறோம். பெயர் 'தெரியவில்லை' எனப்பதிவு செய்து இவர்களின் கதை முடிக்கப்பட்டுள்ளது.

எமக்குக் கடைசியாகக் கிடைத்த செய்திகளின்படி மே 29 அன்று நாகை மாவட்டத்தைச் சேர்ந்த 13 பேர் மேஜிஸ்ட்ரேட் ஆணையுடன் மனநோய்க் காப்பகத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பெரும்பாலும் மனநலம் குன்றியவர்கள் (mentally retared) எனவும் மனநோயாளிகள் (mentally ill) எனக் கூற இயலாது எனவும் அறிகிறோம். விதிகளின்படி மனநோயாளிகளை மட்டுமே காப்பகத்தில் சேர்க்க முடியும். சமீபத்தில் மனநோய்க் காப்பகத்தை பார்வையிட்ட பரிசீலனைக் குழுவைச் (monthly review committee) சார்ந்த மாஜிஸ்ட்ரேட் மனநலம் குன்றியவர்கள் உத்தரவு



(reception order) பெற்றிருந்தாலும் எப்படி இங்கு அனுமதிக்கப்படலாம் எனக் கேள்வி எழுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## எமது பார்வைகள்

### பிச்சைக்காரர்கள் இல்லாத சென்னையை உருவாக்குவதின் சமூகப் பொருளாதாரப் பின்னணி

உலகமயச் செயல்பாடுகளின் ஓரங்கமாக உலகத்தரமான நகரங்களை உருவாக்குதல் அமைகிறது. பளபளக்கும் நால்வழிச் சாலைகளால் இணைக்கப்பட்ட நவீன நகரமாகவும், வெளிநாட்டு மூலதனம் குவியக்கூடிய மய்யமாகவும், மருத்துவச் சுற்றுலாவுக்கும் சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கும் தகுதியுடையவையாகவும் நகரங்களை உருவாக்குவது ஆட்சியாளர்களின் நோக்கமாக உள்ளது. அவர்களின் கண்களுக்கு தெருவில் அலைகிற பிச்சைக்காரர்களும்,

நகரின் மத்தியில் துருத்தி நிற்கும் குடிசைகளும் பெரிய உறுத்தல்களாக உள்ளன. காமன் வெல்த் விளையாட்டுப் போட்டியை ஒட்டி டில்லியில் பிச்சைக்காரர்கள் அகற்றப்படுகின்றனர். தமிழகத் துணை முதல்வர் திரு. ஸ்டாலின் கனவுத்திட்டங்களில் ஒன்றான சிங்காரச் சென்னையை உருவாக்கும் நோக்கில் இன்று சென்னை நகரத்திலுள்ள குடிசைகள் அகற்றப்பட்டு லட்சக்கணக்கான குடிசைவாழ் மக்கள் நகரத்திற்கு அப்பால் கடத்தப்பட்டுள்ளனர்.

சென்னை வளர்ச்சித்திட்டம், கூவம்நதி தூய்மைத் திட்டம், அடையாறு பூங்காத் திட்டம் என்ற பெயர்களில் இவை நிறைவேற்றப்படுகின்றன. துணை முதல்வருக்கு அணுக்கமான மாநகராட்சி மேயர் இதன் அடுத்த கட்டமாக இப்போது சென்னையைப் பிச்சைக்காரர்கள் இல்லாத நகரமாகச் சுத்திகரிக்க முயல்கிறார். இந்த அடிப்படையில் வீடற்ற உதிரித் தொழிலாளர்கள் மனநோய் பிறழ்ந்தவர்கள் என முத்திரை குத்தப்பட்டு வலுக்கட்டாயமாகப் பிடித்துச் செல்லப் படுகின்றார்கள்.

நகரங்களில் திரியும் பிச்சைக்காரர்களை வேண்டாத இடையூறு களாகக் கருதும் நமது மத்தியதரவர்க்க மனநிலை மேயரின் இந்தத் தூய்மையாக்க நடவடிக்கையுடன் பொருந்திப் போய்விடுகிறது. எனினும் பிச்சைக்காரர்களை ஒழித்துக்கட்டப்பட வேண்டியவர்

களாகப் பொது மக்கள் கருதவில்லை என்பதற்கு நமது கோயில்கள் மற்றும் புனித தலங்களில் குவிந்துள்ள பிச்சைக்காரர்களே சான்று.

பஞ்சம், வறட்சி, ஆறுகள் வற்றிப்போதல், அரசின் தவறான பொருளாதாரத் திட்டங்களால் உருவாகும் வேலையின்மை ஆகியவற்றின் விளைவாக தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், பிற மாநிலங்களி லிருந்தும் வருகிற மக்கள் பல்வேறு வகை உதிரித் தொழிலாளர்களாக சென்னை மாநகரில் வாழ்வைத் தொடங்குகின்றனர். ஒண்டக்குடிசை இல்லாத இவர்கள் பிளாட்பாரம், கோயம் போடு மார்க்கெட், பேருந்துநிலையம் முதலான இடங்களில் இரவுகளைக் கழிக்கின்றனர்.

பிற வெளி மாநிலங்களிலிருந்து கொண்டுவரப்படும் தொழிலாளர்கள் (migrant workers) உள்ளூர் முதலாளிகளால் பெரிய அளவில் சுரண்டப்படுகின்றனர். தொழிற்சங்கம் அமைக்கும் உரிமைகளும் இவர்களுக்கு கிடையாது. எத்தகைய பாதுகாப்பும் அற்றவர்களாகவும், கடுமையாக சுரண்டப்படுபவர்களாகவும் இவர்கள் உள்ளனர். புதிய சட்டமன்றம் கட்டும் பணியிலும் இவ்வாறு ஏராளமான பிற மாநிலத் தொழிலாளர்கள் உள்ளது குறிப்பிடத்தக்கது. ஓசூர் போன்ற நகரங்களில் உரிய பாதுகாப்பற்ற தொழிற்சாலைகளில் பணிபுரியும் இவர்களில் பலர் விபத்துகளில் இறக்கின்றர். பலர் ஊனமாகின்றனர். பிச்சை எடுக்கும் நிலைக்கும் தள்ளப்படுகின்றனர்.

தமிழகத்தின் பிற மாவட்டங்களிலிருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும், இடம்பெயர்ந்து வருகிற இம்மக்களைப் பற்றி அரசோ, மாநகராட்சியோ, வளர்ச்சித் திட்ட இயக்குனர்களோ கவலைப்படுவதில்லை. மாறாக வளர்ச்சித்திட்டங்களுக்கும், அகக் கட்டுமான வளர்ச்சிகளுக்கும் (infrastructural developements) தடையானவர்களாகவே பிச்சைக்காரர்கள், வீடற்றவர்கள், இடம் பெயர்த் தொழிலாளர்கள், குடிசைவாழ் மக்கள் முதலானவர்கள் கருதப்படுகின்றனர். இதன் ஓரங்கமே சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ள இன்றைய பிச்சைக்காரர்கள் ஒழிப்புத்திட்டம்.

## காலனிய காலச் சட்டங்களின் இன்றைய பொருத்தமின்மை

இத்தகைய நடவடிக்கைகள் மூலம் வேலையற்ற, வீடற்ற ஏழை எளிய மக்களும், உதிரித் தொழிலாளர்களும் சட்டத்தின் உதவியோடு குற்றவாளிகள் ஆக்கப்படுகின்றனர். ஏழ்மை இதன் மூலம் குற்றமாக்கப்படுகிறது. சட்டம் இதற்குத் துணைபோகிறது.



ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட ‘தமிழ்நாடு பிச்சைக்காரர்கள் சட்டம் *(1945)*’ அப்படியே சுதந்திர இந்தியாவிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது (தமிழ்நாடு பிச்சை எடுப்பது தடுப்புச் சட்டம், 1954). மேல்ப்பாக்கம் அரசு பாதுகாப்பு முகாமிற்கு நாங்கள் சென்றபோது அங்கு 105பேர் சிறை வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் மேற்குறித்த சட்டப்பிரிவுகளின் கீழ் பிச்சை எடுத்த ‘குற்றத்திற்காக’ *1* முதல் *3* ஆண்டுகள் மதுரை நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர்கள். இவர்களுக்கு மறு வாழ்வளிக்கக்கூடிய உருப்படியான தொழிற்பயிற்சிகள் ஏதும் இந்த ‘காப்பு முகாம்களில்’ அளிக்கப்படுவதில்லை. இன்றைய பொருளாதாரச் சூழலுக்குச் சற்றும் பொருத்தமற்ற பானை வளைதல், தச்சுத் தொழில், தையற்தொழில் முதலியவை இங்கு பயிற்சி அளிக்கப்படுவதாக அறிந்தோம். சிறைக்கைதிகளைப்போலவே இவர்கள் அடைத்துவைக்கப் பட்டுள்ளனர். செய்யும் வேலைகளுக்கு போதிய ஊதியமும் வழங்கப் படுவதில்லை.

## கோரிக்கைகள்

பிச்சைக்காரர்கள் பிச்சை எடுத்து வாழ வேண்டும் என்பதோ, மன நோயாளிகள் சிகிச்சை இன்றி தெருக்களில் அலைய வேண்டும் என்பதோ எங்கள் விருப்பமில்லை. ஆனால் சென்னையை அழகுபடுத்தும் நோக்கத்திற்காக அவசரக் கோலமாக இவர்களைச் சற்றும் மனிதாபிமானமின்றிப் பிடித்துச் செல்வதையும், ஆரோக்கியமான உதிரித் தொழிலாளர்களை மனநோயாளிகள் என முத்திரை குத்தி மனநோய்க் காப்பகத்தில் அடைப்பதையும் இதிலுள்ள விதிமீறல்களையும் நாங்கள் கண்டிக்கிறோம். மற்றும் இதை மத்திய தர வர்க்கத்தின் கனவான ‘சிங்காரச் சென்னை’ என்ற பெயரில் ஏழைமக்களை அப்புறப்படுத்தும் திட்டத்தின் ஓர் அங்கம் என்றும் நாங்கள் கருதுகிறோம். ஊடகங்களும் சென்னை மாநகராட்சி மற்றும் மேயரின் நடவடிக்கைகளின் நோக்கங்களை ஆராயாமல் இதுவரை அவரது அறிக்கைகளை வெளியிட்டு வந்துள்ளன.

1. அனாதைகளாக இருந்த போதிலும், வீடுகள் இல்லாதபோதிலும், போதிய உணவு கிடைக்காத போதிலும் மனிதர்கள் அடைத்துவைக்கப்படுவதை விரும்புவதில்லை. இந்த அடிப்படை உணர்வை அரசு புரிந்துகொள்ள வேண்டும். காலனிய ஆட்சியில் உருவாக்கப்பட்ட மனநிலை பாதிக்கப்பட்டவர்கள்

சட்டம், பிச்சைத் தொழில் தடுப்புச் சட்டம் முதலியன நமது அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளுக்குத் தகுந்தவாறு திருத்தப்பட்டு, மேலும் மனித நேயமிக்கதாக மாற்றப்பட வேண்டும்.

2. சென்னை மேயரின் அறிக்கைகள் அனைத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது பிச்சை எடுப்பதை ஒழிப்பதற்கான திட்டமா, இல்லை மனநோயாளிகளை அகற்றும் திட்டமா என்பது விளங்கவில்லை. வேண்டுமென்றே திட்டமிட்டுக் குழப்புவது போலத் தோன்றுகிறது. சென்னை மாநகராட்சி இப்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் அதன் நோக்கம், எதிர்காலத்திட்டம், இதுவரை பிடிக்கப்பட்டவர்கள் எங்கெங்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார்கள், அவர்களின் எண்ணிக்கை ஆகியவை குறித்த ஒரு வெள்ளை அறிக்கையை உடனடியாக வெளியிட வேண்டும். அதுவரை ஜூன் 6 தொடங்கியுள்ள இரண்டாம் கட்ட நடவடிக்கையை நிறுத்த வேண்டும்.

3. மனநோய்க் காப்பகத்தில் அடைக்கப்பட்டவர் களில் பலர் மனநோய் இல்லாதவர்கள் என ஐயம் உள்ளதால் உடனடியாக இவர்கள் அனைவரையும் வெளி மாநிலங்களைச் சார்ந்த மருத்துவ நிபுணர் குழு ஒன்றால் மருத்துவப் பரிசேதனைக்குள்ளாக்க வேண்டும். மனித உரிமை ஆர்வலர்கள் அவர்களைச் சந்திக்க அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

4. சென்னை நகரை அழகுப்படுத்தும் திட்டம் என்பது உண்மையில் சென்னையில் உள்ள எல்லா மக்களுக்கும் பயன்படுகிற, எல்லா மக்களையும் மேம்படுத்துகிற திட்டமாக அமைய வேண்டும். வீடற்றவர்கள் குறித்த திட்ட ஆணையத்தின் ஆய்வை இணையதளத்தில் பார்த்தோமானால் வீடற்றவர்கள் மற்றும் இடம் பெயரும் தொழிலாளர்களின் நலன் குறித்து அரசு கவலை கொள்ளாதது விளங்குகிறது. இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் வீடற்றவர்களின் பிரச்சினை மிக முக்கியமான ஒன்று. சமீபத்தில் நடைபெற்ற தாய்லாந்து நாட்டு மக்கள் எழுச்சியில் இடம்பெயர்த் தொழிலாளர்கள் முக்கிய பங்காற்றியது குறிப்பிடத்தக்கது. சென்னையில் பல்வேறு பகுதிகளில் இவர்கள் இரவுகளில் தங்கி செல்ல தற்காலிக இருப்பிடங்கள் (temporary shelters) அமைக்கப்பட வேண்டும்.

5. மேயரின் கூற்றுப்படி (மே 24) தொண்டு நிறுவனங்களுடன் மாநகராட்சி சில ஒப்பந்தங்களைச் செய்துள்ளதாகத் தெரிகிறது. தொண்டு நிறுவனங்கள் நடத்துகிற முதியோர் இல்லங்கள், அனாதை இல்லங்கள், மறுவாழ்வுத் திட்டங்கள் ஆகியவற்றை மாநகராட்சி பயன்படுத்திக் கொள்ள இருப்பதாக அவர் கூறியுள்ளார். இந்நிறுவனங்கள் எத்தகைய நோக்கங்கள், விதிமுறைகள் ஆகியவற்றுடன் செயல்படுகின்றன என்பது விளங்கவில்லை. தத்தெடுப்பது (adoption) முதலான செயல்பாடுகளில் இது போன்ற நிறுவனங்கள் செய்துள்ள பல ஊழல்களை நாம் அறிவோம். ‘பான்யன்’ என்கிற அமைப்பு சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னை கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனையுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அங்கு பணியாற்றும் மருத்துவர்கள் எதிர்த்ததும், அது தொடர்பான சர்ச்சைகளும் நினைவுகூரத் தக்கன. நிலவும் மனநோய் மருத்துவச் சட்டத்தின்படி மனநோயாளிகளை மூன்றாவது நபர்கள் கையாள்வதற்கு வழியில்லை. அவர்கள் காவல்துறையிடம் புகார்கள் சொல்வதற்கு மட்டுமே அனுமதி உண்டு. எனவே எத்தகைய அடிப்படையில் தொண்டு நிறுவனங்கள் இத்திட்டத்தில் செயல்படப் போகின்றன என்பது வெளிப்படை யாக்கப்பட வேண்டும்.

## எமது பிற வெளியீடுகள்




**விலை: ₹ 60/-**

ISBN
978-81-909751-0-0

### பயங்கரவாதம் இந்திய அரசு காவல்துறை

இன்றைய உலகு எதிர்கொண்டுள்ள மிகப்பெரிய பிரச்சினை பயங்கரவாதம். எத்தகைய அரசியல் நியாயங்கள் இருந்தபோதும் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை நாம் ஏற்க முடியாது. எனில் பயங்கரவாதத்தை எப்படி முடிவுக்குக் கொண்டு வருவது? காவல்துறைக்கும் இராணுவத்திற்கும் அபரிமிதமான அதிகா ரங்களை வழங்குவது, கருப்புச் சட்டங்களை இயற்றுவது, மனித உரிமைகளை மீறுவதன் மூலம் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வர இயலாது. அரசியல் தீர்வு ஒன்றே வழி என்கிறார் அ. மார்க்ஸ்.

---

### சிறுபான்மையினர்தொடர்பான ஆணையங்கள்

இந்திய முஸ்லிம்களின் நிலை குறித்து ஆய்வு செய்ய பிரிட்டிஷ் ஆட்சியில் அமைக்கப்பட்ட ஹண்டர் கமிஷன் (1871) தொடங்கி இன்றைய ரங்கனாத் மிஸ்ரா ஆணையம் வரை வழங்கியுள்ள பரிந்துரைகள் முதன் முதலாகத் தமிழில் பெயர்க்கப்பட்டுள்ளன. வகுப்புவாதம் X மதச்சார்பின்மை குறித்து இந்திய அளவில் நடைபெறும் விவாதங்கள் குறித்த ஆய்வுக் கட்டுரை ஆழமாக இந்த அம்சங்களைத் தொட்டுச் செல்கிறது.




**விலை: ₹ 45/-**

ISBN
978-81-909751-1-7

---

## நூல்கள் கிடைக்குமிடங்கள்

**சென்னை:** *நியு புக் லேண்ட்ஸ் - 044 28156006,*
*பாரதி புத்தகாலயம் - 044 24332924,*
*கீழைக்காற்று வெளியீட்டகம் - 044 28412367,*
*இலக்கியச் சோலை - 044 25610969,*
*சாஜிதா புக் சென்டர் - 99411 75303*
**மதுரை:** *பாரதி புத்தகாலயம் - 0452 2324674,*
*அஹத் பப்ளிஷர்ஸ் - 93450 55666*
**கோவை:** *விடியல் பதிப்பகம் - 0422 2576772*
**பொள்ளாச்சி:** *எதிர் வெளியீடு - 98650 05084*
**மற்றும் பிற முன்னணி விற்பனையகங்களில்**